மாத இதழ் - January 2013

# வண்ண வானவில்

பருவம் 03 වන්න වානවිල් Vanna Vaanavil உதயம் 27 40/-



## கமலின் புதிய விஸ்வரூபம்

## உலகின் மாயப் புதிர்கள்

## மலேசியாவில் தமிழர்கள்

- புதிய தொடர்


## ப்ரியாமணி Album

## தைத்திருநாள் வாழ்த்துகள்



## பசுமைப் பூமிக்கான ஒரு பொங்கல்


# VIP Album
## Priyamani



























## பயோடேட்டா

- பெயர் : பார்வதி
- படத்துக்காக : பிரியா மணி
- அப்பா : வாசுதேவ் மணி
- அம்மா : லதா மணி
- பிறந்த திகதி : 04-06-1984
- பிறந்த இடம் : பாலக்காடு - கேரளா
- சகோதரன் : விஜாக் தேவ் மணி

பட உதவி: பிரதீப்

# பசுமை உலகுக்காக பொங்கல் படைப்போம்!

பா.பிரதீப்
ppratheep54@yahoo.com

தமிழ் உழவர்களினுடைய ஒரு நன்றிக்கடன் செலுத்தும் பண்டிகையாக விளங்கும் தைத்திருநாள் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலந்தொட்டு தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. அதாவது கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்து இப்பண்டிகை கொண்டாடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இப்பண்டிகையானது இன்று இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களால் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

பண்டைய தமிழர்கள் இந்திரன் என்ற தெய்வத்தை மாரி தெய்வாமாகக் கருதி வந்தனர். இதனால் இந்திரனுக்கு பொங்கலிட்டு மழை வேண்டி, வழிபட்டு வந்தார்கள். பின்னர் சூரியனால்தான் விளைச்சலும் மழையும் கிடைப்பதை அறிந்ததும் இந்திர வழிபாடு சூரிய வழிபாடாக மாறியது. சூரியனை பண்டைய இந்தியர்களும் உலகின் பல நாடுகளில் வாழ்ந்தவர்களும் கண்கண்ட தெய்வமாகக் கருதியதால், சூரிய வணக்கம் உலகெங்கும் ஓங்கியது.

பண்டைய மக்களுக்கு அவர்கள் அப்போதுதான் மிருகவழி வாழ்க்கை முறைகளில் இருந்து படிப்படியாக விடுபட்டு வந்ததால், தமக்கு எதிரான சக்திகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள ஏதேனும் ஒரு சக்தியில் சரணாகதி அடை வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. இதையே சரணாகதித் தத்துவம் என்கிறோம்.

குழந்தை அம்மாவின் மடியிலும், அம்மா கணவனின் நிழலிலும், இளமையில் ஆசிரியரிடமும் அல்லது குருவிடமும் சரணாகதி அடைவதன் மூலம் ஆறுதல் பெறுகிறது. மனித மனம். சரணாகதி தத்துவத்தின் அடிப்படையில்தான் தலைவன், அரசன் தோன்றினர். சரண் அடைந்து மன நிம்மதி அடைவது மனிதனின் அடிப்படை உறவில் கட்டமைப்பாகும். நாத்திகமும் விஞ்ஞான வளர்ச்சியும் எவ்வளவுதான் ஓங்கி ஒலித்தாலும், மதங்கள் அவற்றின் எல்லா ஓட்டைகளுடன் நிமிர்ந்து சேதாரமின்றி உறுதியுடன் நிற்பதற்கு மனிதனின் சரணாகதி பண்பே அடிப்படைக் காரணம். இந்த வகையில் ஆதி மனிதனுக்கு இயற்கை உட்பாதங்களில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ளும் சரணாலயமாக சூரிய வழிபாடு விளங்கியது என்பதை புரிந்துகொண்டால், சூரிய வழிபாட்டின் தொன்மையும் அவசியமும் நமக்கு விளங்கும். பொங்கலின் தொன்மையையும் தெரிந்து கொள்ளலாம்.

இந்த அறுவடைத் திருவிழா சாதி, மத, இன மொழி வேறுபாடு அற்றது. உலக மக்கள் அனைவரும் கொண்டாடும் ஒரே பொது விழா எனக்கூறலாம். இவ்விழா அந்தந்த நாட்டுக்கு ஏற்ப, அவரவர்கள் பண்பாட்டுக்கும், கலாச்சாரத்திற்கும் ஏற்ப கொண்டாடப்படுகிறது.

மனிதன் தான் வாழும் இடத்தாலும், காலத்தாலும், தன் சிந்தனை, செயல், பண்பு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் வாழ்வும், வளர்ச்சியும் பெறுகிறான். இதனையே நாகரீகம் எனக் கூறுகிறோம்.

தமிழர்களின் நாகரீகம் பழமையானது. சிறப்பானது. இது உலகம் ஒப்புக்கொண்ட உண்மை. பொங்கல் விழாவில் தமிழர்களின் நாகரீகத்தின் சில தனித்தன்மைகளைக் காணலாம்.

போரும், காதலும் பண்டைத் தமிழர்களின் வாழ்க்கையின் இரு முக்கிய கூறுகள். தமிழன் களவும், கற்பும், அகம் எனக்கண்டான். வீரம், மானம், புகழ் ஆகியவை களைப்புறம் எனப்போற்றினான். உலகம் தோன்றியபோதே காதலோடும், வாளோடும் தோன்றிய வீரமக்களாக தமிழர் வாழ்ந்தனர்.

பண்டைத் தமிழர்களின் வாழ்க்கையில் காதல், போர், அரசியல், சமயம், கலை, இலக்கியம், பழக்கவழக்கங்கள் அனைத்திலும் உயர்ந்து, தனித்தன்மையுடன் இருந்தன.

எனினும் தைப்பொங்கல் என அழைக்கப்படும் இத்திருநாளானது முன்னைய காலத்தில் 'இந்திரவிழா' என அழைத்து 28 நாட்கள் கொண்டாடப்பட்டதாகவும், அதுவே இன்று 'போகி பண்டிகை', 'பொங்கல்', 'மாட்டுப் பொங்கல்', 'காணும் பொங்கல்' என நான்காக குறைவடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. ஆனாலும் இலங்கையில் தைப்பொங்கலும், மாட்டுப் பொங்கலுமே விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகின்றது.

இதேபோன்று இந்தியாவின் வடமாநிலத்தில் இப்பொங்கல் பண்டிகையை 'சங்கராந்தி' விழாவாகக் கொண்டாடுகின்றனர். தமிழகத்தில் போகி பண்டிகையானது, பழைய பொருட்கள், அவசியற்றவை அனைத்தையும் தீயிலிட்டு கொளுத்துகின்றனர். பழையன கழிந்து புதியன புகல் என்பதே இதன் அர்த்தமானாலும் இதற்கு ஆன்மீக ரீதியான அர்த்தமும் உண்டு.

துயரம், துன்பம், காழ்ப்புணர்வு, வெறுப்பு அனைத்தையும் எரித்து புதிய மனிதனாக பரிணமிக்க வேண்டும் என்பதே போகியின் உண்மையான அர்த்தம்.

போகி பண்டிகையானது அரம்பத்தில் போக்கி என்றே கூறப்பட்டு வந்தது. இது காலம் செல்லச்செல்ல திரிபடைந்து போகி என்றானது. எனவே தீய குணங்களை மெய்ஞ்ஞானம் எனும் தீயினால் எரித்து புதிய சிந்தனையுடன் அடுத்த கட்டத்திற்கு கால் பதித்து, அதனை சர்க்கரைப் பொங்கல் போன்ற இனிமையான சுவையுடன் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கவேண்டும் என்பதை பொங்கல் உணர்த்துகிறது. விவசாயிகளினால் அவர்களது வாழ்க்கைக்கு ஆதாரமான விவசாய பூமி, பயிர்கள், வளர்ப்பு மிருகங்கள், எனபனற்றுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் பொங்கல் படைத்து களிப்படைகின்றனர்.

## ஏறுதழுவுதல்

முல்லை நிலத்தில் ஒருவருக்கு பெண் குழந்தை பிறந்தவுடன் குழந்தையுடன் ஒரு காளையையும் வளர்க்கத் தொடங்குவார்கள். அப்பெண் பருவம் அடைந்ததும் அவளது தந்தை, அவளது கணவரைத் தேர்வு செய்ய ஏறு தழுவும் விழாவை ஏற்பாடு செய்வார்.

மணம் செய்யவேண்டிய பெண்களின் பெற்றோர்கள் ஒன்றுகூடி, ஒரு நல்ல நாளைத்த தேர்ந்தெடுப்பர். பறை அடித்து மக்களுக்கு விழாச் செய்தியை அறிவிப்பார்கள். அவ்விழாவைக்காண பெண்களும், சிறுவர்களும், பெரியவர்களும் கூடுவார்கள். மணம் செய்ய வேண்டிய பெண்கள் மலர் மாலைகளை அணிந்து, வரிசையாக நிற்பார்கள்.

இந்த காளையை அடக்குவோருக்கு இந்தப் பெண் மணமகள் என்று அறிவிப்பார்கள்.

இளைஞர்கள் ஏறுகளை விரட்டி அடக்க முயல்வார்கள். புழுதிப்படலம் எழும். சில இளைஞர்கள் ஏறுகளால் தாக்கப்பட்டு காயமுறுவர். ஒரு சிலர் ஏறுகளை அடக்கி வெற்றி வாகைசூடுவர். வெற்றி பெற்றவர்களுக்கு அறிவிக்கப்பட்ட பெண்ணுடன் திருமணம் நடைபெறும். இந்த ஏறு தழுவல் பற்றிய விவரங்கள் முல்லைக்களிப்பாடலில் விரிவாகவும் அழகாகவும் கூறப்பட்டுள்ளன.

ஏறுகளுக்கும் ஆயர்குல இளைஞர்களுக்கும் நடக்கும் இந்த வீரப்போர்க்களம் பாரதப் போர்க்களமாக காட்சி அளித்தது என முல்லைக் களிப்பாடல் 101 கூறுகிறது. மற்றும் புறப்பொருள் வெண்பாமாலை, சிலப்பதிகாரம், போன்ற பண்டைச் சங்க இலக்கியங்களிலும் ஏறு தழுவல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் முரட்டுக் காளையை அடக்கியவனுக்கு ஊர்த்தலைவன் மகளை மணம் முடிக்கும் பழக்கம் பரவலாக இருந்தது. பிற்காலத்தில் பல சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. காளை தழுவுதல், காளைப்போர், மாடு பிடித்தல், மஞ்சு விரட்டு, ஜல்லிக்கட்டு எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இன்னும் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் இது ஓர் வீர விளையாட்டாக விளங்குகிறது.

பொங்கல் பண்டிகையின் முக்கிய அம்சங்களில் ஒன்று, சூரியனுக்கு கௌரவம் செய்தலாகும். இது உலகெங்கும் ஒரு காலத்தில் முதல் வழிபாடாக விளங்கி வந்திருக்கிறது. எகிப்து, மெஸப்பட்டோமியா, செவ்விந்தியர் என உலகெங்கும் சூரிய வணக்கம் இருந்து வந்திருக்கிறது. சூரியனைத் துதிக்கும் மந்திரமே காயத்ரி. இந்தியாவில் பல சூரிய கோவில்கள் உள்ளன.

சூரியனே பூமிக்கு சக்தியை வழங்குகிறது. சூரியனின் அவசியத்தை இன்று எவரும் பட்டியலில் போடத்தேவையில்லை. ஏனெனில் மிகப் பழங்காலத்திலேயே அன்றைய மனிதன் சூரியனுக்கு இயற்கைக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை அறிந்திருந்தான். அதனாலேயே உலகெங்கும் முதல் வழிபாடாக சூரிய வழிபாடு நிகழ்ந்திருக்கிறது. பழைய வேதமாகக் கருதப்படும் ரிக் வேதத்தில் சூரிய வணக்கம் பற்றி குறிப்பிடப்படுவதால் இவ்வழிபாடு இக்காலத்துக்கும் முந்தியதாகவே இருக்கவேண்டும்.

சூரியன் நமக்கு உணவை மட்டுமல்ல; எமது சகல அங்கங்களையும் போஷிக்கிறது. சூரிய நமஸ்க்காரம் இந்து சமயத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதேசமயம், காலை நேர சூரிய வெளிச்சம் நம் உடலுக்கு நல்லது என்று விஞ்ஞான மருத்துவம் சொல்கிறது.

(31ஆம் பக்கம் பார்க்க)



வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு
- பாரதிதாசன்

முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com

விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381

அட்டையை அலங்கரிப்பவர்
ப்ரணிதா

பெப்ரவரி மாத வானவில் 01ம் திகதி முதல் கடைகளில்...

# பறை இசை முழங்கவும் ஒரு தைரியம் வேண்டும்!

## பறை இசைக் கலைஞர் விக்னேஷ் உங்களுடன் பேசுகிறார்

மணி ஸ்ரீகாந்தன்
msrikanthan55@gmail.com

**'தமிழ்ச் சமூகத்தில் சாதியம் ஒரு கோடறிக் காம்பாக செயல்பட்டு வருவது தெரிந்த சங்கதி. அதன் வீச்சு தமிழ் இசைக் கருவிகளையும் சாதி ரீதியாகப் பாகுபடுத்தி வைத்திருப்பது எவ்வளவு கொடுமையான விஷயம்! நம் மனம் மாற்றமடைவது எப்போது? என்ற கேள்வி படித்து முடித்ததும் உங்களில் எழும்!**

தமிழினத்தின் தொன்மையான அடையாளமாகவும், தமிழர் வாழ்வியலின் முகமாகவும் 'பறை' என்ற தோல் வாத்தியக்கருவி காணப்படுகிறது.

இது ஒரு இசைக்கருவி மட்டுமல்ல; தொல்குடித் தமிழ் சமூகத்தின் சொத்தாகவும் இருந்து வருகிறது. தோலிசைக் கருவிகளின் தாய் இந்த பறைதான். பறை என்ற வார்த்தைக்கு 'பேசு' எனப் பொருள் உள்ளது. மலையாளத்தில் பறையும் என்ற வார்த்தை தமிழில் 'சொல்' என்பதையே குறிக்கிறது ''பறை என்பது ஓடும் இசையை ஒழுங்கு பெற நிறுத்தி ஓர் அளவோடு சீரோடு, ஒத்த அழகோடு நடக்க இசைக்கு நடை கற்பிக்கும் கருவி" என தமிழகத்தை சேர்ந்த பேராசிரியர் வளர்மதி தன்னுடைய 'பறை' ஆய்வு நூலில் குறிப்பிடுகிறார்.

இத்தனை சிறப்புக்களைக் கொண்ட இந்த தமிழர் இசைக்கருவி இன்று தலித் மக்களால் மட்டுமே வாசிக்கப்படவேண்டிய இசைக்கருவி என எழுதாத விதி இருந்து வருகிறது. அதனால் அந்த இசைக்கருவியை இன்று யாரும் தொட்டுப் பார்க்கவே பயப்படுகிறார்கள். எங்கே நமது சாதியை கண்டு பிடித்து விடுவார்களோ என்று அதை வாசிக்கும் சமூகத்தின் இளைய தலைமுறை அச்சப்படும் அதேசமயம், அதை ஒரு இசைக்கருவியாக மட்டுமே பார்க்கக்கூடிய ஏனைய சமூக இளைஞர்கள், அதை இசைக்க முற்பட்டால் சமூகம் தம்மை இழிவாகக் கருதி விடுமோ என்ற அச்சத்தால் அதைத் தவிர்த்து விடுகிறார்கள். வேறெந்த இசைக் கருவிக்கும் இப்படி ஒரு பரிதாப நிலை கிடையாது. எனவே தமிழரின் கௌரவ அடையாளமாக இருக்க வேண்டிய பறை, இன்று சாதீய தீயால் பொசுக்கப்பட்டு விட்டது. அதையும் தாண்டி சில இளைஞர்கள் இடதுக்கையில் சிம்புக்குச்சியையும், வலதுக் கையில் உருட்டுக் குச்சியையும் பிடித்துக்கொண்டு பறையை வாசிக்கத் தயாராகவே இருக்கிறார்கள்.



இங்கிரிய, றைகம் மேற்பிரிவில் வசிக்கும் முருகேசு விக்னேஸ்வரனுக்கு- தற்போது இருபத்தாறு வயதாகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக பறை இசைக்கும் கலைச் சேவையை செய்து வருகிறார். கலையில் அதிக ஈடுபாடு உடைய விக்னேஸ் றைகம் தோட்டத் தொழிலாளியாக பணியாற்றுவதோடு பகுதிநேர வேலையாக பறை இசைப்பதையும் மேற்கொண்டு வருகிறார்.

''நமக்கும் பறைக்கும் ரொம்ப தூரம்ங்க... ஆனால் எனக்கு சின்ன வயசில் இருந்தே கலை மேல் ரொம்ப பிரியம். ஏன் பைத்தியம் என்றும் சொல்லாம். எங்க ஊரு காமன் கூத்தில் ஒரு தடவை அவிசாவளை இஹுக்குத்தென்ன தோட்டத்தில் இருந்து ஒரு பறையடிக்கும் குழு இங்க வந்து பறை அடிச்சாங்க. அவங்க அடிப்பதைப் பார்த்து நான் மெய்மறந்து போனேங்க... எனக்கும் அவங்க மாதிரி நெருப்பில் பறையை காய்ச்சு அடிக்கணும் போல இருந்திச்சி! அதன் பின்னர் நானே சொந்தமாக பறையடிக்க பழகினேன். என்கிட்ட இப்போ ஐந்து பறை இருக்கு. அதோட பேண்ட் வாத்தியமும் வைத்திருக்கேன். விஷேசங்களுக்கு குழுவாக போய் வாசிக்கிறேன்,'' என்று சொல்லும் விக்னேஸுக்கு இருக்கும் பெரிய பிரச்சினை, சாதி!

விக்னேஸ்வரன் பறை வாசிக்கும் சமூகத்தை சேர்ந்தவரல்ல. அதனால் அவரின் குடும்பத்தாரும், உறவினர்களும் கடும் எதிர்ப்பு காட்டுகிறார்களாம்.

''பறையை கோணிப்பையில் போட்டு என் தோளில் மாட்டிக் கொண்டு செல்லும் போது பக்கத்து வீட்டில் குடியிருக்கும் என் சித்தப்பா என்னைப் பார்த்து காறித்துப்புகிறார். அப்போ எனக்கு நெஞ்சில் முள் தைத்த மாதிரி ஒரு வலி ஏற்படும். 'பறை' என்றால் அவ்வளவு கேவலமா? அப்போ இளையராஜாவும், ரஹ்மானும் வாசிப்பது இந்தப் பறையைத்தானே! அவங்களுக்கு மட்டும் எப்படிங்க இங்கிலாந்துகாரன் மேஸ்ட்ரோவையும், அமெரிக்காகாரன் ஒஸ்காரையும் கொடுத்து கௌரவிக்கிறான்?" என்று நம்மை பார்த்து நியாயமான கேள்வி தொடுக்கிறார் விக்னேஷ். இது மட்டும் இல்லீங்க... அண்மையில் எங்க மனைவியை அழைத்துக்கொண்டு ஒரு திருமண வீட்டுக்கு போனேன். அங்கே வந்த ஒருவர் என்னைப் பார்த்து சத்தமாக

''ஏய் இங்கே பாருடா நம்ம சாதிக்குள்ளே ஒரு '....' டேய் பறையடிக்கிறவன் '.....' பேண்ட் அடிக்கிறவன் '.....' ''அப்போ நீ யாருடா?'' என்று என்னைப் பார்த்து கேட்டாருங்க! எனக்கு வெட்கமா போச்சு. ஆனாலும் நான் சரஸ்வதியா மதிக்கிற அந்த பறைக்காக அந்த அவமானத்தை தாங்கிக் கொண்டேன்.

''எங்க வீட்ல எங்கப்பா மட்டும்தான் எனக்கு ஆதரவாக இருக்கிறார். ஏனென்றால் அவரும் அந்தக் காலத்தில் ஒரு கலைஞராக இருந்தவர். அதனால் பறையை சாதியோடு முடிச்சுப்போட்டு பேச என் அப்பாவுக்கு இஷ்டமில்லை. அவரின் ஆதரவோடு தான் நான் இந்தத் துறையில் இன்னும் நின்றுக் கொண்டிருக்கிறேன்." என்று விக்னேஷ் பெருமூச்சு விடுகிறார்.

பறை எந்தக்காலத்தை சேர்ந்தது என்று உறுதியாக கூறமுடியாது. ஆனாலும் பன்னெடுங்காலமாக இது பயன்பாட்டில் இருந்து வந்திருக்கிறது. கற்காலத்தின் முதல் தகவல் தொடர்பு சாதனமாக இது இருந்து வந்திருக்கிறது. பறை மூலம் செய்தியை பரிமாற்றம் செய்யும் வழக்கம் உலகெங்கும் இருந்திருக்கிறது.

பண்டைய காலத்தில் வாழ்ந்த தொல்குடித் தமிழர்களில் நிலவியல் வாழ்வியலின்படி குறிஞ்சிப்பறை, முல்லைப்பறை, மருதப்பறை, நெய்தற்பறை, பாலைப்பறை என ஐந்நிலங்களில் இது வாசிக்கப்பட்டதாகவும், நமது தொல்காப்பியம் கூறுகிறது. இதுதவிர சேர, சோழ பாண்டியர் கல்வெட்டுகளிலும் பறை பற்றிய குறிப்புகள் உள்ளன.

ஆனால் இந்த விடயங்கள் விக்னேசுக்கு தெரியாது. ஆனால் குச்சியைப் பிடித்து மாற்றி அடித்து மெட்டுக்கட்டுகிறதும், சொற்கட்டுறதும் விக்னேஸுக்கு அத்துப்படி.



''ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு அடி இருக்குங்க... சப்பரத்தடி, டப்பா அடி, பாடல் அடி, சினிமா அடி, ஜொய்ண்ட் அடி, மருள் அடி, சாமி அடி, மாரடித்தல், வாழ்த்து அடின்னு நிறைய இருக்குங்க...

''நான் இதுவரைக்கும் கோயில் திருவிழாக்களிலும், பாழடைந்த கோயில் திறப்பு வைபவத்துக்கும் சுடுகாட்டில் மாடன், கருப்புசாமியோட பேய் விரட்டவும், வீட்டில் வைத்திருக்கிற பில்லி, சூனியத்தை எடுப்பதற்காகவும் நான் பறை வாசித்திருக்கிறேன். இது தவிர பௌத்த பெரஹரா ஊர்வலம், காமன்கூத்து, தீமிதிப்பு, பரவைக்காவடி என்று நிறைய விசேஷங்களிலும் வாசித்திருக்கிறேன்.

ஆனால் இதுவரைக்கும் மரண வீட்டில் மட்டும் பறை அடித்ததில்லை. அங்கேயும் வாசித்திடனும் என்கிற வெறியோடு காத்திருக்கிறேன்," என்கிறார் இந்த இசையை நேசிக்கும் துணிச்சல்காரரான விக்னேஷ்.

பறைகளின் மெட்டுக்களை, தீட்டைப்பறை, தொண்டகச்சிறுபறை, தொண்டகப்பறை, அரிப்பறை, மன்றோல்சிறுபறை, மென்பறை, இன்னிசை பறை, பொருநர் பறை, ஆடுகளப்பறை என்று சங்க இலக்கியங்களில் வகைப்படுத்தபட்டிருக்கிறது.

இந்த சங்க இலக்கிய சங்கதி எல்லாம் நமக்கு தெரியாதுங்க... ஆனால் பறை கட்டுற விஷயம் எல்லாம் நமக்கு அத்துப்படிங்க..." என்ற விக்னேஷ் பறைக்கட்டும் வித்தையை அவிழ்த்து விட்டார்.

35 செ.மீட்டர் விட்டம் கொண்ட வட்டமான சட்டத்தில்தான் ஆட்டுத்தோலை கட்ட வேண்டும்.

''அந்தக்காலத்தில் வேப்பமரத்தில்தான் அந்த சட்டம் செய்யப்பட்டு இருக்கும்னு சொல்றாங்க... ஆனா நான் கட்டுறது இரும்பு வலயத்தில்தான்.

ஆட்டுத்தோல், யானை விலை விக்குது. ஒரு தோல் 800 ரூபா. அதை வாங்கி மூன்று நான்கு நாள் தண்ணீரில் ஊற வைக்கணும். அதேமாதிரி புளியங்கொட்டையை கொண்டு வந்து அம்மியில் வைத்து நசுக்கி அதையும் தண்ணீரில் ஊற வைக்கணும்.

இது ரெண்டும் ஊறும்போது துர்நாற்றம் குடலைப் பிடுங்கும். இந்த நாற்றத்தை நான்தான் பொறுத்துக்குவேன். ஆனா என் வீட்டுக்காரங்க சும்மா இருப்பாங்களா? அவங்க ஆத்திரத்தில் திட்டும் ஒவ்வொரு வார்த்தையையும் பொறுத்துக்கொண்டு தோலை வலையத்தில் வைத்துக் கட்டுவேன்.

''தோலை இரும்பு சட்டத்தில் ஒட்டுவதற்காக ஊறிய புளியங்கொட்டையை மாவாக அரைக்கவேண்டும். அதை சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து நீருற்றி கொதிக்க வைத்து பசை பதத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த பசையை எடுத்து சட்டத்தில் பூசி ஒட்டி கயிற்றால் கட்டுவேன். இரண்டு தினங்களின் பின் வாசிக்கத் தயாராகிவிடும். புளியங்கொட்டை தேடுறதுதான் ரொம்பக் கஷ்டம். ஆரம்பத்தில் கால்வாய்களிலும் குப்பை மேடுகளிலும் கொட்டப்படும் புளியங்கொட்டைகளை சிரமத்தைப் பார்க்காமல் சேகரித்திருக்கிறேன்," என்று வெட்கப்படாமல் பேசுகிறார் விக்னேஷ். ''நம்ம இசைக்குழுவில் ராஜ்கமல், தினேஷ், மோகன்ராஜ், துஷாந்தன் என்று ஆர்வமுள்ள இளைஞர்கள் இருக்கின்றனர். அவர்களின் தைரியமும் என் வெற்றிக்கு ஒரு காரணம். அதோட நம்ம குருசாமி போஸாவையும் மறக்க முடியாது. நிறைய ஓடர்கள் அவர் மூலம்தான் கிடைக்குது," என்று சொல்லும் இவருக்கு கலையார்வம் ரொம்ப அதிகம். நாடகம், நடனம் என்று உள்ளூர் கலைநிகழ்ச்சிகளையும் நாடு முழுவதும் நடத்தி வருகிறார்.

சரி, விக்னேஷின் எதிர்கால திட்டம் என்ன?

''நமக்கு சென்னை சங்கமத்தில் பறை கொட்டி ஆட ரொம்ப நாளா ஆசை. ஆனா நம்ம நேரம் கலைஞர் தேர்தலில் தோற்றுப்போனார். சென்னை சங்கமத்தை நிறுத்திட்டாங்க. அடுத்து கனிமொழி அம்மா ஆட்சிக்கு வந்தால் நான் நிச்சயம் சென்னை சங்கமத்தில பங்கெடுப்பேன். நமக்கு தங்க மெடல் எல்லாம் வேணாம். அதுல கலந்துகிட்டாலே போதும். விரைவில் பம்பை, உருமி உள்ளிட்ட சில அந்தக்கால வாத்தியக் கருவிகளையும் நம்ம டீம்ல சேர்த்துக்கலாம்னு ஒரு திட்டம் இருக்கு!" என்று சொல்லும் விக்னேஷ், ஏதோ உற்சாகம் வந்தவர்போல பறையை எடுத்து அடிக்கத் தொடங்கினார். கலையார்வத்தில் அதிக ஈடுபாடு காட்டும் விக்னேஸுக்கு நம்மூர் தொலைக்காட்சிகள், சாகித்திய விழாக்களில் ஒரு வாய்ப்பு வழங்கலாமே....



# இலங்கையில் கலைச் சேவையாற்றி வரும் தம்பு குடும்பம்

## இலங்கைத் தமிழ் திரையுலகம்



**தம்பி ஐயா தேவதாஸ்**

*ஈழத்து திரைப்பட வரலாற்றை தொகுத்தளித்ததன் மூலம் மிகப்பெரும் பணியை செய்து முடித்திருக்கும் தம்பி ஐயா தேவதாஸ் தன் இலங்கை திரைப்பட அனுபவங்களை இங்கே சுவையாகப் பதிவு செய்கிறார்.*

இலங்கையில் 1956ஆம் ஆண்டு உள்ளூர் கலைகளில் ஒரு புரட்சி ஏற்பட்டது. அப்போதுதான் சிங்களப் பாடல்கள் இலங்கையிலேயே தயாரிக்கப்படவேண்டும் என்ற சட்டம் வந்தது. வெளிநாட்டுப் படங்களை கொப்பி அடித்து சிங்களப் படங்களை உருவாக்கக்கூடாது என்பதையும் சட்டமாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. முதல் சட்டம் நடைமுறைக்கு வந்தபோதிலும் அடுத்ததை அமுல்படுத்த முடியாமற்போனது. சிங்களப் படங்களை இந்திய இயக்குநர்கள் இயக்கும் நிலை மாறிப்போனதால் இலங்கையிலேயே உள்ளூர் இயக்குநர்கள் உருவாகத் தொடங்கினர். இவர்களில் பலர் இந்திய இயக்குநர்களிடம் பயிற்சி பெற்றவர்கள்.



வெண்சங்குவில் வில்லனாகத் தோன்றிய லடீஸ் வீரமணி

எம்.எஸ். தம்பு, ரீ. சோமசேகரன், எம்.எஸ் ஆனந்தன். கே. வெங்கட், றொபின் தம்பு, ஜே. செல்வரத்தினம், ஜே. ராசரத்தினம், எஸ். ராமநாதன், எம்.ஏ.கபூர், எஸ்.வி.சந்திரன், லெனின் மொறாயஸ், ஜோ. தேவானந், சுபைர் மக்கீன், எம்.வி. பாலன், ஏ.ஏ. ஜுனைதீன் என்று பல இலங்கை தமிழ் பேசும் இயக்குனர்கள் சிங்களத் திரை உலகிற்குள் நுழைந்தனர்.

இவர்களில் எம்.எஸ். தம்பு இந்தியாவில் பல தமிழ்ப்படங்களைத் தயாரித்தவர். யாழ் நகரில் 'றீகல்' என்ற பெயரில் முதன் முதலில் சினிமா திரை அரங்கு அமைத்தவர். இவர் சில சிங்களப்படங்களையும் தயாரித்தவர். இந்த எம்.எஸ் தம்புவுக்கு இலங்கையிலும் ஒரு தமிழ்ப்படம் தயாரிக்கவேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. அந்த ஆசையின் காரணமாக 'வெண்சங்கு' என்ற பெயரில் இலங்கையில் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கத்தொடங்கினார்.



வெண்சங்கு கதாநாயகி குமாரி ராஜம்

பிரபல சினிமா ஜாம்பவான்களாக சேர் சிற்றம்பலம் கார்டினர், கே. குணரத்தினம். ஜாபிர் ஏ. காதர், போன்றோர் சினிமாக் கம்பனிகளை உருவாக்கி வெளிநாட்டு படங்களை இறக்குமதி செய்து காண்பித்தனர். சிங்களப் படங்களை தயாரித்து விநியோகித்தனர். ஆனால் இவர்களில் எவரும் இலங்கையில் தமிழ்ப் படம் தயாரிக்க முன்வரவில்லை. ஆனால் இவர்களைப் போலவே சினிமாத் தொழிலில் ஈடுபட்ட எம்.எஸ். தம்பு சிங்களப் படங்களுடன் தமிழ் படமான 'வெண்சங்கு' படத்தையும் தயாரித்தார்.

மகோன் செல்வசாமி தம்பு என்ற முழுப்பெயர் கொண்ட எம்.எஸ்.தம்பு யாழ்ப்பாணத்தில் 17-04-1908இல் பிறந்தவர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி பயின்றவர். சட்டத்தரணியாக கடமையாற்றும் போதே வெளிநாட்டுத் திரைப்படங்களை இறக்குமதி செய்து வந்தார். 1950 அளவில் சிலோன் தியேட்டர்ஸ் நிறுவனத்தில் நிர்வாகப் பணிப்பாளராக கடமையாற்றினார். அந்த அனுபவத்துடன் இந்தியா சென்ற தம்பு, அங்கு திரைப்படங்களைத் தயாரிக்கத் தொடங்கினார்.

தெய்வநீதி (1950), கலாவதி (1951), நம்ப குழந்தை (1955), வைரமாலை (1956), என்பன தம்பு தயாரித்த படங்களில் சிலவாகும்.

எம்.எஸ் தம்பு, அக்கால தென்னிந்தியக் கலைஞர்கள் பலருடனும் தொடர்பு வைத்திருந்தார். தம்புவின் நண்பர்களாக விளங்கியவர்களில் சிவாஜி கணேசனும் ஒருவர். சென்னை போக் றோட் 22ஆம் இலக்க இல்லத்தில் சிவாஜியின் இல்லம் இருந்தது. அதே வீதியில் 24ஆம் இலக்க இல்லம் தம்புவுக்கு சொந்தமானது.

எம்.எஸ்.தம்பு நீண்ட நாட்களின் பின்பு இலங்கை திரும்பினார். பல சிங்களப் படங்களைத் தயாரித்தார்.

1964 ஆம் ஆண்டு தம்பு தயாரித்த முதலாவது சிங்களப்படம் செமியா பிறிந்தகே தெவியாய (கணவனே கண்கண்ட தெய்வம்) என்பதாகும். அதன் பின்பு வருடத்திற்கு ஒரு படம். லதக மஹிம (இதயத்தின் பெறுமதி) 'லயட்டலய' (இதயத்துக்கு இதயம்) 'றுகுணுகுமாரி ஆகிய படங்களை தயாரித்து அவரே நெறியாண்டார்.

எம்.எஸ்.தம்பு 'சேபாலிக்கா' என்ற சிங்களப் படத்தை தயாரித்தார். அந்தப் படத்தை தன் மகன் றொபின் தம்புவைக் கொண்டு இயக்குவித்தார்.

எம்.எஸ். தம்பு இலங்கையில் தயாரித்து இயக்கிய ஒரே தமிழ்படம் 'வெண்சங்கு' ஆகும். எம்.எஸ் தம்புவே மூலக்கதையை எழுதினார். இவரது கதைக்கு வானொலி எழுத்தாளர் சிறில் பெர்ணாண்டோ திரைக்கதை வசனம் எழுதினார். எழுதுவதில் சந்திரா கணேசானந்தனும் பரமானந்தனும் உதவி புரிந்தனர்.

அக்காலத்தில் வானொலியிலும் மேடை நாடகங்களிலும் புகழ்பெற்று விளங்கிய பலர் இப்படத்துக்கு நடிகர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். லடீஸ் வீரமணி, அராலி புவனேந்திரன், ஏ.எஸ். ராஜா, றொசாரியோ பீரிஸ், எம்.ஏ.ஜபார், நவசிவாயம், பீட்டர் தேவின், பி.எஸ் பிச்சையப்பா போன்றோர் நடிகர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

குமாரிராஜம், இந்திராதேவி, சுப்புலச்சுமி, நூர்ஜஹான், ருத்ராணி, வனஜா, சந்திரா, மஞ்சுளா போன்றோர் நடிகைகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அதுவரை வெளிவந்த இலங்கை தமிழ்த் திரைப்படங்களில் பாடல்கள் சிறப்பாக அமைந்திருக்கவில்லை. அதனால் தனது படத்தில் இடம்பெறும் பாடல்கள் சிறப்பாக அமைய வேண்டும் என்று விரும்பினார். அதனால் தனது திரைப்படத்துக்கான பாடல்களை சென்னையில் ஒளிப்பதிவு செய்ய விரும்பினார். தன் திரைப்பட இசையமைப்பாளர் ஆர். முத்துசாமியையும் அழைத்துக் கொண்டு சென்னை பயணமானார். பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர் டி.ஆர். பாப்பாவின் இசைக்குழுவில் ராஜு", கௌசல்யா ஆகிய இரண்டு பாடகர்கள் பாடிக்கொண்டிருந்தனர். அவர்களே 'வெண்சங்கு' படத்துக்கான பாடல்களைப் பாடினர். இசைத் தட்டுகள் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்டன. அதனால் இப்படத்தில் இடம்பெற்ற அனைத்துப் பாடல்களும் இலங்கை வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பாகின.

'நீயும் யாரோ - நான் யாரோ
தாயும் நானே, சேயும் நீயோ
பாயும் கடலில் புயலென வீழ்ந்தேன்
கடலில் மிதந்த படகென வந்தாய்'



குமாரி ராஜமும் அராலி புவனேந்திரனும்

என்ற தாலாட்டுப் பாட்டை கௌசல்யா அருமையாகப் பாடினார்.

தன் துன்பத்திலும் இன்பம் தரும் ஒன்றாக குழந்தையை நினைத்துப் பாடும் அந்தப் பாடலில் சரணத்தில் இடம்பெறும் சொற்கள் இன்னும் அருமையானவை.

'கொஞ்சும் குயில் உனக்கு
வஞ்சனை புரிந்தாரோ
பிஞ்சுமனம் அறியாமல்
பெண்ணொருத்தி விழுந்தாளோ
அஞ்சுகமே உன் பிஞ்சு மொழி
கேட்டு
விஞ்சும் துயர் மறந்தேனே' என

பாடல் தொடருது.

இசைத்தட்டில் பாடியவர் கௌசல்யா என்றும் இசையமைத்தவர் ஆர். முத்துசாமி என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இப்படி இனிமையான பாடலை எழுதிய ஆசிரியரின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

என். தெய்வேந்திரன் படத்தை ஒளிப்பதிவு செய்தார்.

1970 காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 'அடங்காப்பிடாரி' என்ற மேடை நாடகம் புகழ்பெற்று வழங்கியது. இந்நாடகத்தின் நகைச்சுவை காட்சிகளையும் தம்பு இந்தப் படத்தில் இணைத்துக் கொண்டார்.

'வெண்சங்கு' திரைப்படம் 31.07.1970 இல் இலங்கையில் திரையிடப்பட்டது. படம் பெரிதாக ஓடாவிட்டாலும் சுமாராக ஓடியது.


இலங்கையில் சிங்களப் படங்களைத் தயாரித்து பணம் சம்பாதிக்கும் முயற்சியில் அப்பொழுது பலர் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் எவரும் தமிழ்படமொன்றைத் தயாரிக்க முன்வராத நிலையில் தமிழ்ப்படம் தயாரிக்க முன்வந்த ஒரே சிங்களப்படத் தயாரிப்பாளர் இவர் மட்டுமே.

தனிச்சினிமா அனுபவங்களை ஒன்று சேர்த்து தம்பு, 'வெண்சங்கு' திரைப்படத்தைக் தயாரித்திருந்தார். எம்.எஸ் தம்புவின் மகனின் பெயர்தான் றொபின் தம்பு. அதிகமான சிங்களப் படங்களை தயாரித்தவர்களில் றொபின் தம்பு முக்கியமானவர்.

இவர் சினிமாப் படங்களை தயாரித்தது மட்டுமன்றி தனக்கு ஒரு சினிமா ஸ்ரூடியோவையும் உருவாக்கினார். 1962 இல் வெல்லம்பிட்டியில் ஆர்.ரி. ஸ்ரூடியோவை தொடக்கினார். இவர் மொத்தம் 14 சிங்களப் படங்களைத் தயாரித்தார்.

யாழ்ப்பாணத்தின் வின்சர், றீகல் தியேட்டர்களின் உரிமையாளர் இவரே. இன்று திரைப்படம் சம்பந்தமான விஷயங்களில் இவரது மகன் சஞ்சேய் தம்பு ஈடுபடுகிறார். ஆர்.ரி.பிலிம்ஸ் தயாரித்த படங்களை விநியோகித்தல், புதுப்படங்களை தயாரித்தல் ஆகியவற்றில் அவர் ஈடுபடுகிறார்.

எனவே இலங்கை திரை உலகில் எம்.எஸ்.தம்பு, மகன் றொபின் தம்பு, பேரன் சஞ்செய் தம்பு என்று மூன்று தமிழ்த் தலைமுறையினர் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



வெண்சங்கு ஆரம்ப தினத்தன்று வெண் ஆடையில் எம்.எஸ்.தம்பு




- எம்.திவ்யா, கண்டி

*சிங்களத் திரைப்படத்துறையில் பல வெற்றிப்படங்களை தந்துகொண்டிருக்கும் தயாரிப்பாளர் பேராதனை ஜுனைதீன். தமிழகத்தில் சினிமா ஆர்வத்தில் ஏமாந்து போகும் திறமையான இளைஞர்களின் சில சோகக் கதைகளையும் எம்மோடு பகிர்ந்துக் கொண்டார்.*

# இசையமைப்பாளர் மீது சீறிப் பாய்ந்த உதவி இயக்குநர்



மணி ஸ்ரீகாந்தன்
msrikanthan55@gmail.com

**நான்** படவிசயமாக அடிக்கடி சென்னைக்கு செல்வதுண்டு. அப்போது நிறைய இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் என பலதரப்பட்ட கலைஞர்களை சந்திப்பது வழக்கம். அந்த சந்தர்ப்பங்களில் சினிமாவில் பணியாற்றும் துணை இயக்குநர்களை பார்த்திருக்கிறேன். அவர்கள் மிகவும் ஆர்வமான இளைஞர்கள். சினிமாவிற்காக எதையும் செய்ய தயாரானவர்கள். இதோ அப்படிப்பட்ட ஒரு இளைஞனின் கதை:

அந்த துணை இயக்குநராக பணியாற்றிய இளைஞனுக்கு ஒரு இருபத்தைந்து வயதிருக்குமாம். நல்லக்கதையோடு ஒரு தயாரிப்பாளரை சந்தித்து அவரிடம் கதை சொல்லியிருக்கிறார். தமிழக சினிமாவில் உள்ள ஒரு கெட்டப்பழக்கம்தான் கதை சொல்வது. கதை உரிமையாளர் ஒரு கதையை தயார் பண்ணிக் கொண்டு அதை நாயகனிடம் சொல்வதற்காக நேரம் கேட்டு அவர் வீட்டுக்கு நாயாக, பேயாக அலைய வேண்டும். கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அவருக்குக் கதை சொல்ல வேண்டும். அந்த நேரத்தில் கதைக்கேட்கும் ஹீரோ தமக்கு வரும் தொலைபேசி அழைப்புகளுக்கும் பதில் சொல்லிக்கொண்டே நம் கதையை கேட்டுக்கொண்டிருப்பார். பிறகு நாம் கதையை முடித்தவுடன் அந்த ஹீரோ ''நீங்க சொன்னக் கதை எனக்கு புரியவில்லை. மீண்டும் ஒரு தடவை சொல்லுங்க'' என்பார்.

கதை சொல்லும் அந்த ஆர்வமுள்ள இளைஞர் மீண்டும் கதை சொல்லுவார். மீண்டும் ஹீரோவுக்கு தொலைபேசி அழைப்பு, மீண்டும் கதை கடைசியில் ''கதை பிடிக்கல சார்! டைம் ஆகிடுச்சி நீங்க வேறு ஒரு நாளைக்கு வந்து சொல்லுங்க'' என்பாராம்.

இதுதான் அன்றிலிருந்து இன்று வரை நம் தமிழ் சினிமா உலகில் நடந்து வரும் விசயம்.

ஆனால் இலங்கை திரைப்படத்துறையில் இந்தக் கோளாறு கிடையாது. எனக்கு கதாநாயகனுக்கு கதை சொல்வதில் உடன்பாடில்லை. படம் தோல்வியடைந்தால் நாம் தான் நஷ்டத்தை தாங்க வேண்டும். அந்தக் கதை நாயகன் நமக்கு வந்து உதவப்போவதில்லையே! அதனால் நாம் சொல்கிற கதையில் நடிக்க நாயகன் தயாராக இருக்கவேண்டும். அப்படியானவர்களைத்தான் நான் என் படங்களில் ஒப்பந்தம் செய்கிறேன் என்று கொஞ்சம் ஆவேசப்பட்டுப்போன ஜுனைதீன், தயாரிப்பாளரிடம் கதைச் சொன்ன அந்த உதவி இயக்குநர் இளைஞனின் கதையை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார்.

அந்த இளைஞன் சொன்னக் கதை தயாரிப்பாளருக்கு பிடித்துப்போக அவரும் ஓகே சொல்லிவிட்டார். பிறகு அந்தப்படத்திற்கு தமிழகத்தின் இளையவரான பெரிய இசையமைப்பாளர்களில் ஒருவருக்கு அட்வான்ஸ் கொடுத்து ஒப்பந்தமும் செய்துவிட்டார். அதனால் அந்த சினிமா ஆர்வமுள்ள இளைஞனுக்கு பெரு மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியில் தனக்கு இந்த படம் செய்யும் வாய்ப்பு கிடைத்ததே பெரிய வாய்ப்பாக கருதினான். அதனால் தனது உழைப்புக்கு எந்த ஊதியமும் தேலையில்லை என்று தயாரிப்பாளரிடம் வாக்குறுதியும் கொடுத்துவிட்டான்.

இரண்டு வாரங்கள் கழித்து அந்த இளைஞரை அழைத்த தயாரிப்பாளர், உனக்கு அடுத்ததாக தான் தயாரிக்கும் படத்தில் இயக்குநர் வாய்ப்பு தருவதாகவும், இப்போதைக்கு இந்த கதைக்கு வேறு ஒரு இயக்குனரை புக் செய்யப்போவதாகவும், கூறியிருக்கிறார். பதைபதைத்துப்போன அந்த இளைஞன் ஏன் சார் என்னை பிடிக்கவில்லை என்று கேட்டான். தயாரிப்பாளர் மௌனம் சாதித்தார். காரணத்தை மட்டும் சொன்னால் அத்தோடு விட்டு விடுவேன் என்று இளைஞன் கெஞ்சவே. தயாரிப்பாளர் காரணத்தைக் கூறினார்.

''நான் என்னப்பா செய்ய... அந்த இசையமைப்பாளருக்கு உன்னைப் பிடிக்கவில்லையாம்'' என்று தயாரிப்பாளர் சொல்ல அந்த இளைஞன் நேராக ஏ.வி.எம் ஸ்டுடியோவிற்கு நடந்தான். அங்கே அவன் செல்லவும் அந்த இளைய பெரிய இசையமைப்பாளர் காரில் வந்து இறங்கவும் நேரம் சரியாக இருந்திருக்கிறது. இளைஞனைக் கண்ட இசையமைப்பாளர் சிரித்துக்கொண்டே எப்போ தம்பீ சூட்டிங்? என்று கேட்க இளைஞனுக்கு ஆத்திரம் தலைக்கேறியிருக்கிறது. இசையமைப்பாளர் மீது பாய்ந்து அவரைக்கீழே தள்ளிய இளைஞன் செருப்பைக் கழற்றி அவரை விளாசித்தள்ளியிருக்கிறார். ஓடி வந்து விலக்குவதற்குள் முன்னர் இசையமைப்பாளர் செம்மையாக வாங்கிக் கட்டிக்கொண்டார். இளைஞனுக்கு பரம திருப்தி. இந்தச் சம்பவத்தை மீடியாக்களுக்குத் தெரியாமல் மறைக்கத்தான் பெரும் பாடாக போய்விட்டதாம் என்று அந்தக் கண்ணீர் கதையைச் சொன்னார் ஜுனைதீன்.



பேராதனை ஜுனைதீன்

மற்றொரு சம்பவத்தையும் எம்மோடு அவர் பகிர்ந்துகொண்டார்.

அப்படித்தான் அஜித்குமாரிடம் ஒரு உதவி இயக்குநர் கதை சொல்லியிருக்கிறார். அவர் கதை சொல்லச் சொல்ல அது அஜித்திற்கு ரொம்பவும் பிடித்து போய்விட்டதாம். பிறகு அந்த உதவி இயக்குநரும் அஜித்தும் ரொம்பவும் நெருங்கிவிட்டார்களாம். அஜித்தின் தோளில் கைபோட்டு பேசும் அளவிற்கு அஜித்திற்கு அந்தக் கதைப் பிடித்துப்போக ஓகே சொன்ன அஜீத் , இன்னொரு நாள் எப்படி இப்படியொரு கதையை உருவாக்கினீங்க என்று நட்புரீதியாக (மச்சான் லெவலில்) கேட்டிருக்கிறார். உதவி இயக்குநரும் இனி எதற்கு உண்மையை மறைப்பான் என்ற தைரியத்தில் தான் கதையைச் சுட்ட ஆங்கிலப்படத்தின் பெயரை சொல்லியிருக்கிறார். சிரித்தப்படியே தலையாட்டிய அஜீத், உதவி இயக்குநர் விடை பெற்றுச் சென்றதும், உடனடியாக கே.எஸ். ரவிகுமாருடன் தொடர்பு கொண்டிருக்கிறார். உடனடியாக வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கிறார் தனது வெளிநாட்டு பயணத்தையும் நிறுத்தி விட்டு அஜித் வீட்டிற்கு ஓடி வந்திருக்கிறார் கே.எஸ். அவரைப் பார்த்த அஜித், அந்த உதவி இயக்குநர் சொன்ன ஆங்கிலப் படத்தின் பெயரைச் சொல்லி படத்தை உடனடியாக பார்த்து ஸ்க்ரிப்டை ரெடிபண்ணுங்க நான் நடித்து தர்றேன் என்றாராம். பிறகு சில வாரங்களில் திரைக்கதையை பரப்பரப்பாகத் தயார் செய்து அஜித்தின் கரங்களில் ஒப்படைத்து இருக்கிறார் ரவிகுமார். அஜித் ஸ்கிரிப்டை பார்த்தார். அந்த உதவி இயக்குநருக்கு அது 'வில்ல'னாக மாறியது! பாவம் அந்த உதவி இயக்குநர். இதுதாங்க தமிழ் சினிமா என்று ஜுனைதீன் பெருமூச்சு விட்டார்.


வண்ண வானவில்

*வண்ண வானவில் விளம்பரக் கட்டணங்கள்*

| | |
|---|---|
| முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | - ரூ 25,000.00 |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 28,000.00 |
| கறுப்பு மற்றும் இரண்டு கலர் | - ரூ 30,000.00 |
| முழு வர்ணப் பக்கம் | - ரூ 32,000.00 |

**சாதாரண விளம்பரங்கள்**

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | - ரூ 125.00 கலம் செமீ |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 140.00 கலம் செமீ |
| கறுப்பு இரண்டு கலர் | - ரூ 150.00 கலம் செமீ |
| முழு வர்ணம் | - ரூ 160.00 கலம் செமீ |

12% வட் வரி சேர்க்கப்படும்.

தொடர்பு கொள்க : 0112429367
ப(f)க்ஸ் : 0112429320

வண்ண வானவில்

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.40 |
| 1 வருட சந்தா | ரூ.480.00 |
| 6 மாத சந்தா | ரூ.240.00 |
| 3 மாத சந்தா | ரூ.120.00 |

சந்தாவை செலுத்தியதும் நாம் உங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்வோம் எமது ஏஜண்ட்டிடம் இதனை பெறலாம்.

**தபால் மூலம் பெறுவதற்கு:**

| | |
|---|---|
| 1 வருட சந்தா | ரூ.672.00 |
| 6 மாத சந்தா | ரூ.336.00 |

மேலும் விபரங்களுக்கு:
011-2319760, 2429444
மின்னஞ்சல்:
subscription@lakehouse.lk

தவம்



# கொலையில் முடிந்த தப்பான ஆசை

**பட்டப்பகல் மணி 1.30**

கடற்கரையை அடுத்து இருந்த சாலையில் வெயில் கொளுத்தியது.

எந்த ஒரு பகல்வேளையிலும் வாகன நடமாட்டம் அதிகமாக இருக்கும் அந்த சாலையில் அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாகனங்கள் குறைவாகவே ஓடின.

ஆனால் அந்த நீல நிற வாகனம் மட்டும் ஒரே இடத்தில் நின்றுகொண்டிருந்தது. அதன் சிக்னல் (சமிக்ஞை) விளக்குகள் இன்னும் பளிச்சிட்டுக்கொண்டிருந்தன.

''என்னடா இது... வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் இந்தக் காரில் சிக்னல் லைட் எரிந்து கொண்டிருக்கிறதே என்று அவ்வழியால் சென்ற ஒருவர் காரின் உள்ளே பார்த்திருக்கிறார். கார் ஜன்னல் திறந்திருந்தது. டிரைவர் சீட்டில் சாய்ந்த வண்ணம் இருந்தார். உற்றுப் பார்த்தபோதுதான் அவரது கழுத்து வெட்டப்பட்டிருந்ததை காண முடிந்தது. வெட்டுப்பட்ட இடத்திலிருந்து இன்னும் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. கீழே கழுத்தில் இருந்த இரத்தம் உறைந்திருந்தது.

ஆச்சரியத்துடன் அவர் அதைப் பார்க்க, அடுத்தவர் அருகே வர இப்படியே பத்து பதினைந்து பேர் அங்கே சூழ்ந்துவிட்டனர்.

அந்தக் காரில் இருந்து ஒரு பதினைந்து வயது மதிக்கத்தக்க சிறுவனொருவன் இறங்கி ஓடியதை அருகில் இருந்த ஹோட்டலின் மனேஜர் கண்டிருக்கிறார்.

ஏதோ அவசரத்துக்காக சிறுவன் இறங்கி ஓடுவதாக அவர் நினைத்திருக்கிறார். ஆனால் இப்போது அங்கு சூழ்ந்திருந்த கூட்டத்தை பற்றி விசாரித்தபோது அந்த காரில் ஒருவர் இறந்து கிடப்பது அவருக்கு தெரியவந்ததையடுத்து பொலிஸாருடன் தொடர்பு கொண்டு அந்த காரில் இருந்து ஒரு சிறுவன் இறங்கியோடியதைப் பற்றி கூறியிருக்கிறார்.

அடுத்த பத்தாவது நிமிடம் அங்கு ஒரு வேன் நிறைய பொலிஸார் வந்திறங்கினர்.

இறந்து கிடந்தவரின் பெயர் ரஞ்சித் டி கொஸ்தா. கொழும்பில் உள்ள ஏற்றுமதி நிறுவனமொன்றில் மனேஜராக பணிபுரிபவர். அவரது வீடு நாரஹேன்பிட்டியில் இருந்தது. கொழும்பில் இருந்த கல்வி நிறுவனமொனறில் விரிவுரை நடத்துவதற்காக அன்று காலை 9 மணிக்கு அவர் வீட்டை விட்டு புறப்பட்டுச் சென்றதாக அவரது மனைவி பொலிஸாரிடம் தெரிவித்தார்.



ஜயம்பதி ஜயசிங்க

விரிவுரையின் பின்னர் கொள்ளுப்பிட்டியில் உள்ள கப்பல் நிறுவனமொன்றில் நடைபெறும் பரீட்சையொன்றுக்கு மேற்பார்வை அதிகாரியாக கடமையாற்றவேண்டியிருக்கும் என்றும் அவர் கூறியிருந்ததாக அவரது மனைவி பொலிஸாரிடம் மேலும் கூறியிருந்தார்.

பொலிஸ் விசாரணைகளையடுத்து அவர் பகல் 1.15க்கும் 1.20க்கும் இடையில் குறிப்பிட்ட இடத்துக்கு காரில் வந்தாக தெரிய வந்தது. குறிப்பிட்ட இடத்துக்கு வந்து சேர்ந்த ஓரிரு நிமிடங்களில் அவரது கழுத்து வெட்டப்பட்டிருக்கலாமென்றும் இந்த சம்பவத்தில் குறைந்த பட்சம் மூவர் ஈடுபட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் கூறினார்.

சம்பந்தபட்டவர்களின் கைரேகை அடையாளங்கள் காரில் இருந்து கிடைத்திருப்பதாக மேலும் கூறிய பொலிஸார் இவர்கள் கொல்லப்பட்டவருக்கு ஏற்கனவே தெரிந்தவர்களாக இருக்கலாம். அவர்களை அவர் காரில் ஏற்றிக்கொண்டு வந்தபோது இடையில் ஏற்பட்ட தர்க்கமொன்றையடுத்து கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் கூறினர்.

சம்பந்தப்பட்டவர்கள் பலவந்தமாக காரை நிறுத்தி அதில் ஏறியிருக்கும் சந்தர்ப்பமும் உண்டு. எவ்வாறெனினும் கொஸ்தாவுக்கு தெரிந்தவர்கள் அவரை கொலை செய்திருக்கும் சாத்தியம் அதிகமாகவே உள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

''காலையில் வீட்டை விட்டுப் போகும் முன்னர் எங்கே போகிறேன் என்று கணவர் கூறிவிடுவார். அதனால் அதற்கு பின் மாலையில் அல்லது இரவில் வீடு திரும்பும் வரை தன்னுடன் தொலைப்பேசியில் தொடர்புகொள்ளும் பழக்கம் கணவருக்கு இல்லை," என்று கொலையுண்டவரின் மனைவி பொலிஸாரிடம் கூறியிருந்ததையும் பொலிஸார் கவனத்திற்கொண்டனர்.

ஒரு வார பொலிஸ் விசாரணையின் பின்னர் கொஸ்தா கொலையின் மர்மங்கள் மெல்லமெல்ல வெளிவரத் தொடங்கின. கொஸ்தாவை கொலை செய்த நபர் பொலிஸாரிடம் சிக்கினார். அவரது கழுத்தை வெட்ட பயன்படுத்தப்பட்ட கத்தி கொட்டாஞ்சேனையில் உள்ள மயானமொன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

கொள்ளுப்பிட்டயில் உள்ள துணிக்கடை முதலாளி ஒருவரே கொஸ்தாவின் கழுத்தை வெட்டி அவரை கொலை செய்திருக்கிறார்.

கொஸ்தா அவருக்கு தெரிந்தவர்தான். துணிக்கடை முதலாளியின் 15 வயது மகனை கொஸ்தா தனது பாலியல் நடவடிக்கைக்காக பயன்படுத்த முனைந்திருக்கிறார்.

கொஸ்தாவின் இந்த தொந்தரவினை பொறுக்க முடியாத அந்தச் சிறுவன் தனது தந்தையாரிடம் இதுபற்றி கூறியிருக்கிறான். இதனை கேட்டதும் ஆத்திரமடைந்த அவர் கொஸ்தாவுக்கு தகுந்த பாடம் புகட்டவேண்டுமென்று சந்தர்ப்பத்தை பார்த்து காத்திருந்திருக்கிறார்.

குறிப்பிட்ட ஞாயிறு தினத்தன்று துணிக்கடை முதலாளியும் அவரது மகனும் கடற்கரைச்சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது கொஸ்தா அவர்களை காரில் ஏற்றியிருக்கிறார்.

சிறிது தூரம் சென்றபோது தனது மகனை கொஸ்தா தனது பாலியல் நடவடிக்கைக்காக பயன்படுத்தியமை பற்றிய பேச்சு எழுந்துள்ளது.

இது தொடர்பாக கொஸ்தாவுக்கும் துணிக்கடை முதலாளிக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதத்தின்போது கோபமுற்ற துணிக்கடை முதலாளி திடீரென தான் மறைந்து வைத்திருந்த கத்தியை எடுத்து கொஸ்தாவின் கழுத்தை வெட்டிவிட்டு மகனுடன் தப்பிச் சென்றுள்ளார்.

கொஸ்தாவின் கார் நிறுத்தப்பட்ட இடத்துக்கு அருகில் இருந்த ஹோட்டலில் முதலாளி சிறுவன் இறங்கிச் செல்வதை பார்த்திருக்கிறார். ஆனால் அவரது தந்தையான துணிக்கடை முதலாளி காரில் இருந்து இறங்கிச் செல்வதை அவர் பார்க்கவில்லை.

கொலை செய்ய பயன்படுத்திய கத்தியை கொட்டாஞ்சேனை பகுதியில் உள்ள மயானமொன்றில் மறைத்துவிட்டு துணிக்கடை முதலாளி தலைமறைவாகியுள்ளார். ஆனால் ஒரு வார காலத்தில் பொலிஸார் அவரை கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர். அத்துடன் துணிக்கடை முதலாளியின் மகனும் கொலையுடன் அவருக்கு தொடர்புண்டா என்பது குறித்து விசாரிக்கப்பட்டு வருகிறார்.

துணிக்கடை முதலாளி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு இப்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

'தப்பான ஆசை விபரீத நாசம்' என்று சொல்வார்கள். எத்தனை உண்மை!

## கோப்பிக்காலத்தில்... தோட்ட டிஸ்பென்சரிகள்

இன்று பெருந்தோட்டங்களில் காணப்படும் டிஸ்பென்சரிகள் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பது இப்போது வாசகர்களுக்குத் தெரிய வந்திருக்கும். தோட்டங்களில் சிறிய மருத்துவ நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என அரசு 1880களில் வலியுறுத்தியபோது அதை எதிர்த்த அல்லது அலட்சியப்படுத்திய அதே தோட்டத்துரைமார், 1893இல் மீளவும் கவர்னர் ஹெவ்லொக்கினால் இந்நடைமுறை அறிமுகம் செய்யப்பட்டபோது எதிர்ப்பு பெரிதாகக் கிளம்பவில்லை. இதற்கு தோட்டங்கள் தேயிலை ஏற்றுமதி மூலம் அதிக இலாபத்தை ஈட்டத் தொடங்கியதே காரணம். தோட்ட டிஸ்பென்ஸரிகளில் முழுமையான மருத்துவ தகுதியற்ற 'டிஸ்பென்சர்'களை நியமித்து சாதாரண நோய்களைக் குணப்படுத்துவதன் மூலம் தொழிலாளர்கள் அனைவரையும் முடிந்த அளவில் தினசரி தொழிலில் ஈடுபடுத்தலாம் எனக் கண்டு கொண்டதால், ஒப்பீட்டளவில் இது நிர்வாகங்களுக்கு இலாபகரமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. நோய்கள் அவற்றின் ஆரம்பக்கட்டத்திலேயே இந்த மருத்துவர்களினால் கவனிக்கப்பட்டு மருத்துவம் செய்யப்பட்டது. ஆஸ்பத்திரிகளுக்கு நோயாளர்களை அழைத்துச் செல்ல வேண்டிய நிர்வாகங்களின் வேலை குறைந்தது. இப்பலன்கள் காரணமாக இத்திட்டத்தை இலங்கை காலனி அரசும் லண்டன் காலனி அலுவலகமும் ஏற்றன. மேலும் இரண்டு யோசனைகளையும் காலனி அலுவலகம் முன்வைத்தது. நோயாளர்களை தோட்டங்களில் இருந்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்வதற்கு அம்புலன்ஸ் வசதி செய்து கொடுக்கப்படவேண்டும் என்பதும் துரைமார் குழு நியமனம் செய்யபட்டு அக்குழு அவ்வப்போது மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு சென்று நிலைமைகளைப் பார்வையிடவேண்டும் என்பதுமே இந்த யோசனைகளாகும். இவை இலங்கை காலனி அரசினால் ஏற்றுக்கெள்ளப்பட்டன.

1983இன் பின்னர் தோட்டங்களில் டிஸ்பென்சரிகள் பரவலாக ஏற்படுத்தப்பட்டன. சாத்தியமானதும் சாதகமானதும் பலன்களைத் தரத்தக்கதுமான திட்டமென துரைமார்களினால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டதே இதற்கான காரணமாகும். தேயிலைத் தோட்டங்களில் அக்காலப் பகுதியில் ஏராளமான வேலை வாய்ப்புகள் இருந்தன. தொழிலாளர்கள் அதிகமாகத் தேவைப்பட்டனர். தோட்டங்கள் இந்தியத் தொழிலாளர்களை தம் பால் ஈர்த்துக் கொள்வதற்காக தம்மிடம் சிறந்த மருத்துவ வசதிகள் இருப்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. எந்தத் தோட்டங்களில் வசதிகள் அதிகமோ அங்கேயே தொழிலாளர்களும் வேலை செய்ய விரும்பியமை இதற்குக் காரணம். மேலும் டிஸ்பென்சரிகள் நோயுற்ற தொழிலாளர்களின் பிரச்சினைகளைக் கவனித்துக் கொண்டதால் நோயில் விழும் தொழிலாளர்களைக் கையாள வேண்டிய பொறுப்பில் இருந்து துரைமாரும் விடுதலை பெற்றனர்.



தோட்ட டிஸ்பென்சரி முறை, தோட்ட மருத்துவத்துறையில் ஒரு புதிய சிந்தனையை, மறுமலர்ச்சியை ஏற்றடுத்தியிருந்தபோதிலும் சில குறைபாடுகள் இல்லாமலில்லை. முதலாவது, இவற்றில் பணிபுரிந்த மருத்துவர் போதிய தகைமை பெற்றவராக இருக்கவில்லை. இரண்டாவதாக இவர்களுக்கு குறைவான வேதனமே நிர்வாகங்களினால் வழங்கப்பட்டது. மூன்றாவதாக, பரவலாகவே இந்த சிகிச்சை நிலையங்களில் போதிய மருந்துகள் கையிருப்பில் இருக்கவில்லை. சில சமயம் 'குயினி' என்ற மலேரியா நோய்க்கான மருந்து மட்டுமே இந்த டிஸ்பென்சரிகளில் இருந்தனவாம்.

# தமிழரசுக் கட்சி தொடக்கி வைத்த போராட்டம்



பழைய கச்சேரிக்கு முன்பாக

1959 ஆம் ஆண்டு பிரதமர் பண்டாரநாயக்க படுகொலைக்கு பின்பு மொழிக்கொள்கை தொடர்பாக மிக முக்கியமான காலகட்டம், 1960 ஆம் ஆண்டு ஜுலை பொதுத்தேர்தலின் பின்பு அதிகாரத்துக்கு வந்த திருமதி சிரிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் ஆட்சிக் காலமாகும்.

அரச கரும மொழி சட்டத்தை முன்வைத்து சிங்கள மொழியை அரச கரும மொழியாக்க முனைந்ததை அடிப்படையாக கொண்டு தமிழரசுக் கட்சி ஸ்ரீலங்கா கட்சி தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பினை வைத்துக்கொள்ளவில்லை. என்றாலும் 1960 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளதால் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் தமிழரசுக் கட்சியும் பல சந்திப்புக்களை மேற்கொண்டன.

குறிப்பாக மொழிக் கொள்கை தொடர்பாகவும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஸ்ரீ.ல.சு.க தலைவர்களும் தமிழரசு கட்சி தலைவர்களும் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இரு பக்க கலந்துரையாடல்களை ஆரம்பித்தன.



ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க

இக்கலந்துரையாடல்களின்போது தமிழ்மொழியின் நியாயமான உபயோகம் பற்றி ஆழமாக கலந்துரையாடப்பட்டதுடன் இரு சாராருக்கும் இடையே பல புரிந்துணர்வுகள் ஏற்பட்டன.

இக்கலந்துரையாடல்களின்போது மக்களுடைய நலனுக்காகவும் அவர்களுக்கு சலுகை வழங்குவதற்காகவும் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் தமிழரசுகட்சி, ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு ஒத்துழைப்பை வழங்குவதாகவும் எஸ். டப்ளியூ.ஆர்.டீ பண்டாரநாயக்க அவர்களுக்கு நியாயமான தீர்வினை வழங்க முடியாது போன மொழிப் பிரச்சினையை திருமதி சிரிமாவோ பணடாரநாயக்க அம்மையார் தமது பெண் புத்தியைப் பயன்படுத்தி தீர்த்து வைப்பாரென நம்புவதாகவும் திருகோணமலை பாராளுமன்ற அங்கத்தவர் எஸ்.ராஜவரோதயம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடல்களை தொடர்ந்து தமிழ் மொழியின் உபயோகம் பற்றி ஓர் நியாயமான தீர்வான நோக்கி சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை நாம் காண முடிகிறது.

அதாவது...

1. 1960 ஜுலை மாத பொதுத் தேர்தலுக்காக ஸ்ரீ.ல.சு.க முன்வைத்த கொள்கை பிரகடனத்தில் எதிர்கால கொள்கைகள் என்ற அத்தியாயத்திலே இவ்வாறு குறிப்பிடப்பட்டது.

''சிங்கள மொழி நாட்டின் அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் அச்சட்டத்தினை அவ்வாறே நடைமுறைப்படுத்துகிறோம். அவ்வாறு நடைமுறைப்படுத்தும்பொழுது பிரதமர் பண்டாரநாயக்க தமிழ் மொழி பற்றி நியாயமான உபயோகத்தை வழங்கிய சட்டத்துக்கும் தமிழ் மக்கள் உட்பட ஏனைய சிறுபான்மையினருக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் அமுல் நடத்துவோம்.

2. 1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஸ்ரீ.ல.சு.க கட்சியின் முதலாவது சிம்மாசன பிரசுரத்தின் போது மொழிக்கொள்கை தொடர்பாக ஒரு முக்கிய குறிப்பு முன்வைக்கப்பட்டிருந்தது.

''1960 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி ஆகும் பொழுது சிங்கள மொழி இந்நாட்டின் அரச கரும மொழியாக பூரணமாக நடைமுறைப்படுத்தும் வண்ணம் என்னுடைய அரசு 1956 ஆம் ஆண்டு 33ஆம் இலக்க அரச கரும மொழி சட்டத்தையும் 1958ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தையும் நடைமுறைப்படுத்தும்" என்று அங்கு குறிப்பிடப்பட்டது.

ஆயினும் தமிழ் மொழியின் நியாயமான உபயோகம் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைள் பற்றி எதுவித குறிப்பும் அங்கு காணப்படவில்லை.

எவ்வாறு இருப்பினும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஏற்ப திருமதி பண்டாரநாயக்கவின் அரசு ஆரம்ப கால கட்டத்தில் தமிழ் மொழியின் உபயோகம் பற்றி சில நடவடிக்கைகளை மேற்கொள்வதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. 1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நிகழ்த்தப்பட்ட சிம்மாசன பிரசங்கம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் எனும் மும்மொழிகளிலும் முன்வைக்கப்பட்டதை இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது.

அத்துடன் எஸ். டபிள்யு. ஆர். டீ பண்டாரநாயக்க 58ஆம் ஆண்டு 28ஆம் இலக்க சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கவேண்டிய பிரமாணங்களை தயாரித்து தம்மிடம் ஒப்படைக்கப்படவேண்டுமென்றும் திருமதி பண்டாரநாயக்க அம்மையார் தமிழரசு கட்சியினரை கேட்டுக் கொண்டதுடன் நிர்வாகத்தை பன்முகப்படுத்துவது மற்றும் மொழிக்கொள்கை தொடர்பான கலந்துரையாடல்களும் நடைபெற்றன.

1960ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் பல பிரமாணங்கள் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டன. நிர்வாக பணிகளின்போது தமது தாய்மொழி மூலம் தொடர்புகளை ஏற்படுத்தி கொடுக்கும் உரிமை இதன்மூலம் வழங்கப்பட்டது.

கச்சி

மொழிக்கொள்கை தொடர்பாக திருமதி பண்டாரநாயக்க அம்மையாரின் அரசு இவ்வாறான நடவடிக்கை மேற்கொண்டபோதிலும் காலப்போக்கில் திருமதி பண்டாரநாயக்க அம்மையாரின் அரசை தமிழரசு கட்சியினர் சந்தேகக் கண் கொண்டு பார்க்கத் தொடங்கினர்.

அம்மையாரின் அரசினால் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் இதற்கு உறுதுணையாக அமைந்தன.

1960ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முன்வைக்கப்பட்ட தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் பிரமாணங்கள் தாம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றவில்லை என்றும் வடகிழக்கு பிரதேசங்களிலே நிர்வாக மொழி முற்றாக தமிழ் மொழியாக இருத்தல் வேண்டுமென்ற தமது குறிக்கோளை இப்பிரமாணங்கள் நெருங்கவே இல்லை என்றும் எஸ்.ஜே.வி செல்வநாயகம் குற்றம் சாட்டினார்.

இதற்கிடையில் அரசு மீது தமிழரசு கட்சியினரின் மனக்கசப்பை மேலும் தூண்டும் ஓர் மசோதா பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

1960ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரிய பயிற்சி கல்லூரிகள் விசேட ஏற்பாடுகள் சட்டம் நிறைவேற்றப்பட்டு தனியார் பாடசாலைகள் அரசினால் சுவீகரிக்கப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நடைமுறையை தமிழரசு கட்சி மட்டுமன்றி வட பிரதேசத்தை பிரதிநிதித்துவம் செய்த பல சுயேச்சை மக்கள் பிரதிநிதிகள் கூட வன்மையாக கண்டித்தன.

வடகிழக்கு பிரதேசங்களில் தனியார் பாடசாலைகள் வளங்களையும் வசதிகளையும் பெருவாரியாக பெற்று நாட்டின் ஏனைய பாடசாலைகளை விட மிகவும் உயர்நிலையில் காணப்பட்டன. இச்சட்டத்தின் மூலம் அரசு இப்பாடசாலைகளை சுவீகரிப்பதன் மூலம் வடகிழக்கு பிரதேசங்களில் வாழ்ந்த மக்களின் சிறார்களுக்கு அச்சிறப்பான கல்வியை மிஷனரி பாடசாலைகளிடமிருந்து பெற்றுக் கொள்ள இருந்த வசதி வாய்ப்புக்கள் அற்றுப்போய்விடும் என்று தமிழ் தலைவர்கள் நம்பியதனாலேயே அவர்கள் இந்த நடைமுறையை வன்மையாக கண்டித்தனர்.

இதற்கிடையே பண்டாரநாயக்கிவினால் முன்வைக்கப்பட்ட 33ஆம் இலக்க அரச கரும மொழி சட்டம் பண்டாரநாயக்க அம்மையாரின் ஆட்சிக்காலத்திலேயே சிறப்பாக செய்யப்பட்டது.

இதேசமயம் பாராளுமன்ற ஹன்சாா்ட் அறிக்கையை சிங்கள மொழி மூலம் தயார் செய்யப்பட்டதுடன் நீதி மன்றங்களின் மொழி சிங்கள மொழியாக இருக்கவேண்டுடென்று அம்மையாரின் அரசு கட்டடமொன்றினை இயற்றப்போவதாகவும் வதந்திகள் பரவின.

இவ்வாறு தோற்றம் பெற்ற பின்னணி சிரிமாவோ பண்டாரநாயக்கவின் அரசுக்கும் தமிழரசுக்கட்சிக்கும் இடையில் மனக்கசப்பை மேலும் தூண்டியது.

ஆகவே1960ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலே தமிழரசுக் கட்சியினர் வட கிழக்கில் வாழ்ந்த மக்களுக்கு அதிகார பரவலாக்கல், காணிப்பிரச்சினை, மற்றும் தமிழ் மொழியின் உபயோகம் பற்றி பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருக்கின்றனர்.

அவைகளை தீர்த்து வைப்பதற்காக பண்டாரநாயக்க அம்மையாரின் அரசு ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்றும் அதன்மீது தமிழரசுக் கட்சி ஆக்கப்பூர்வமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் அமைப்புக்கள் தமிழரசுக் கட்சியை கேட்டு நின்றன. தமிழரசுக் கட்சியும் தமது பிரச்சினைகள் தொடர்பாக அரசின் மந்த போக்கை பற்றி அடிக்கடி கலந்துரையாடி வந்தது.



சத்தியாகிரகத்தில் எஸ்.ஜே.வி.

இதன் பயனாக தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் தமது முக்கியமான அங்கத்தவர்களை ஒன்றை கூட்டி பல சுற்று பேச்சு வார்த்தைகளை நடத்தியது. இதன் பயனாக அரசு மீது அழுத்தத்தை செலுத்துவதற்காக சிவில் சட்டங்களை மீறும் நடைமுறை ஒன்றினையும் சத்தியாக்கிரக போராட்டமொன்றையும் நடத்தவேண்டுமென்றும் தீர்மானித்தது. இதற்காக யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, மன்னர், திருகோணமலை பிரதேசங்களில் சத்தியாக்கிரக நடவடிக்கைகளை ஆரம்பிக்க தேவையான அடிப்படை ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

1961 ஆம் ஜனவரி 30ஆம் திகதி தமிழரசுக்கட்சி தனது போராட்டத்தை வெளிப்படையாக ஆரம்பித்தது. இப்போராட்டத்தின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு:

1. நிர்வாக பணிகளின் போது சிங்கள மொழியை பயன்படுத்தும் வட கிழக்கு மாகாணங்களின் அரச பணிமனைகளில் பணிபுரியும் அரச ஊழியர்களை சேவையில் ஈடுபடுவதைத் தடுத்தல்.

2. சிங்கள மொழியில பணியாற்றும் அரச ஊழியர்களுக்கு எதிரான ஒத்துழைப்பு, வேலை நிறுத்தம் இயக்கமொன்றினை ஆரம்பித்தல்.

3. தமிழ் மொழி மூல பாடசாலைகளில் சிங்கள மொழி கற்பித்தலை தடுத்தல்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரக இயக்கம் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மையங்களை மையமாக கொணடு வடகிழக்கு மாகாணங்களில் துரிதமாக பரவியது.

1961 பெப்ரவரி 21ஆம் திகதி இந்த எதிர்ப்பு இயக்கத்தின் மையமாக யாழ். கச்சேரி வளாகம் செயற்பட்டது.

அன்றைய தினம் காலையில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமது அங்கத்தவர்களுடன் கச்சேரி வளாகத்தை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் சுற்றிவளைத்தனர்.

காரியாலய ஊழியர்கள் உள்ளே செல்ல முடியாது தடுத்தனர். அரச பணிகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும், பொது மக்களின் அரிசி மானியம் வழங்குதல் உட்பட்ட அரச கருமங்கள் ஸ்தம்பிதம் அடைந்தன.

இச்சூழ்நிலையில் தமது பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பளிக்க வேண்டுமென்று அரசு கேட்டுக்கொண்டது.

அரசோ தமது நீதி அமைச்சரான சேம் பி.சி பெர்ணான்டோ மூலமாக தமிழரசு கட்சியினரை அணுகி பேச்சு நடத்தியது. தந்தை செல்வநாயகம் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாதென அரசு கூறவே, சிவில் சட்டங்களை மீறும் இயக்கம் மேலும் தீவிரமடைந்தது.

தமிழரசுக் கட்சியினர் தனது நடவடிக்கைளை தீவிரப்படுத்தி தமக்கான தபால் சேவை ஒன்றினையும் உத்தியோகப்பற்றற்ற பொலிஸ் சேவை யையும் அமைத்ததுடன் அப்பிரதேச காணிகளை மக்களிடையே பகிர்ந்தளிக் கும் நடவடிக்கையாக கருதினர்.

அரசும் தனது அடக்குமுறை நடவடிக்கைகளை திருப்திப்படுத்த மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தி தமிழரசுக் கட்சியை தடை செய்து அதன் தலைவர் உட்பட 51 பேரை கைது செய்தது.

# உலகத்தின் மாய கிறுக்கல்கள்

இயற்கையான எல்லாவற்றையும், ஒரு புள்ளி வைத்து கோலம் போடுவதைப் போலவே இயற்கை படைத்துள்ளது. கடந்த நூற்றாண்டில் இத்தாலியைச் சேர்ந்த ஃபெபோனாகி என்ற அறிவியலாளர் சில பூக்களின் இதழ்கள், அடிப்படை எண்கள் வரிசையில் படைக்கப்பட்டுள்ளன என்பதை ஆதாரபூர்வமாகச் சொன்னார். அதைத்தான் ஃபெபோனிக் எண்கள் என்பர். இயற்கையிடம் எந்த மூடுமந்திரமும் கிடையாது. ஆனால், அதைக்கண்டு அறியத்தான் மனிதனால் அத்தனை எளிதில் முடிவதில்லை.

ஒரு விந்தும் கரு முட்டையும் சேர்ந்து கரு தோன்றி பிறந்து, வளர்ந்து வாழ்வதுவரை எல்லாம் சரிதான். ஆனால், இந்த உயிரின் மரணம்? அதை இதுவரை யாராலும் கணிக்க முடியவில்லை; அறிவியல் உலகமும் பதிலளிக்க முடியவில்லை.

நாம் அறியாத பல விவரங்கள் மாயையாகவே இருக்கின்றன. மரம், செடி, தொடங்கி விலங்குகள், பறவைகள், மனிதர்கள் வரையிலும் ஏன் நாம் வாழும் பூமியின் நிலப்பரப்பையும் சரியான அளவீட்டிலேயே படைத்துள்ளது இயற்கை. இதைத்தான் 'தங்கஅளவீடு' என்று அறிவியல் கூறுகிறது.



உலகமும்



உருவமும்

இயற்கையின் மீது நமது கற்பனை வளத்தை செலுத்தித்தான், புவியியலுக்கான வரைப்படங்களும் கோடுகளும் கட்டமைக்கப்பட்டுள்ளன. அட்சரேகை, தீர்க்கரேகை எல்லாமே கற்பனையே. அந்தக் கற்பனைக் கோட்டில்தான் உலகமே இன்று இயங்குகிறது. அந்தக்கோடு இல்லையென்றால் விஞ்ஞானக் கணக்குகள் ஸ்தம்பித்துவிடும்.

நமது உடல் உறுப்புகள் உட்பட, இந்த உலகில் இருக்கும் அத்தனை பொருட்களும் ஒன்றோடு ஒன்று ஒப்பிடத்தக்க வகையில் இருப்பதும் மாயா உலகின் அற்புதம்தான். மனித மூளையைப் போலவே அக்ருட் கொட்டை, கருவிழிகள் போல திராட்சை, மூக்கைப்போல மிளகாய், பற்களின் வரிசை போல மாதுளை விதைகள், நுரையீரல் போல சுரைக்காய், சிறுநீரகங்கள் போல அவரை விதை என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

சில நட்சத்திரங்களைக் கற்பனைக் கோடுகளால் இணைக்கும்போது சில உருவங்கள் தென்பட்டன. அவை சில விலங்குகளின் உருவத்தைக் காட்டுபவையாக இருந்தன. அதைத்தான் ராசிகளாக உருவகப்படுத்தினர்.

ஒரு யுகத்தில் பூமியில் அரசாட்சி புரிந்த டைனோசர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பாறைகளாக உலாவின. அதற்கு ஏற்ப மரங்களும் பிரமாண்டமாக வளர்ந்திருந்தன. அந்த மிகப் பெரிய உருவத்துக்கு ஏற்ப பசுமையும் பெருகிக் கிடந்தது. அங்கு பரவிப் பெருகி வளர்ந்திருந்த தாவரங்களை அப்பெரிய விலங்குகள் ஏக்கர் கணக்கில் தினமும் தின்று தீர்த்தாலும் குறையாத அளவில் மீண்டும் மீண்டும் செழிப்பாக வளர்ந்து கிடந்தன.

இயற்கை சீற்றங்களால் நிலத்தில் மாறுதல்கள் ஏற்பட்டன. நிலஅளவு குறைந்து நீரின் அளவு பெருகியபோது. பசுமை குறைந்தது. பெரிய வனங்கள், மரங்கள் அழிய, பெரிய விலங்கினமான டைனோசர்களை இனி வைத்திருந்தால் கட்டுப்படியாகாது என்று இயற்கையே தனது தந்திரத்தால் அதை 'மாய'மாக்கி விட்டது. உயிர்கள், பூமியில் தோன்றிய காலத்தை அறிவியலாளர்கள் மூன்று யுகங்களாகப் பிரித்துள்ளனர்.

1. பொலியோஸைக் யுகம்- மீன்களின் ஆட்சி
2. மீஸோஸாயிக் யுகம்- பாலூட்டிகளின் ஆட்சி

இந்த வரிசையில் பாலூட்டிகளின் வரிசையில் தோன்றி மனிதனின் ஆட்சி பூமியில் இபோது நடக்கிறது. மீன்களின் ஆட்சியில் அப்போது பிரமாண்டமாக வாழ்ந்த திமிலங்கள் இன்றும் வாழ்கின்றன. இதற்குக் காரணம் நிலத்தை விடவும் மிகப்பெரிய அளவிலுள்ள கடல்தான். அதன் எல்லை அதிகரித்து வருகிறதே தவிர குறையவே இல்லை. பூமியின் பரப்பு குறைந்த காரணத்தால்தான், டைனோசர் அழிந்து போனது. நிலப்பரப்பின் வடிவமைப்பு இந்தியாவை எப்படி அடையாளப்படுத்துகிறது என்பதை படத்தில் பாருங்கள். சிவனின் வாகனமான காளையின் ஆவேசமான தோற்றத்தில் அமைந்துள்ளது. இதுபோன்ற ஒற்றுமை உள்ள மாதிரிகள் பூமியின் மொத்த நிலப்பரப்பிலும் அடையாளப்படுத்துவதைக் காணலாம். இது கற்பனையாக இருந்தாலும் பல ஆண்டு அனுபவத்தால் இந்த உருவத்தின் உண்மையானத் தொடர்பை மனிதமனம் முடிச்சுப் போடுகிறது.

காளை, தன் தலையை மேற்குத் திசையில் குனிந்த வண்ணம் நிற்கிறது. அதன் உயர்ந்த திமில் வடக்குத் திசையில் உயர்ந்து நிற்கிறது. முதுகுப்பகுதி சற்று சரிந்து கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. காளையின் வால் பகுதி தெற்கு நோக்கி தொக்கி நிற்கிறது. அது, அந்தமான் பகுதியை அடையாளப்படுத்துகிறது. துள்ளலும் அமைதியும் ஒருங்கே அமைந்த நாடு இது. உழைக்கத் தயங்காத நாடு என்று இதற்குப் பொருள்.

ஐரோப்பாவின் வரைபடம், ஒரு நாகரிக பெண்மணி, இரு கைகளையும் வீசி துள்ளலாக நடன வடிவில் நிற்பதாகவும் அவள் முன்னே ஒரு கனவான் மண்டியிட்டு அமர்ந்து மரியாதை செலுத்துவது போன்றும் தோற்றமளிக்கிறது. இந்த அடையாளத்தின் பிரதிபலிப்பாக இரு உண்மையைக் காணலாம்.

இன்றும் ஐரோப்பியர் தாங்கள் மதிக்கும் பெண்டிரை மண்டியிட்டே மரியாதை செலுத்துகின்றனர். அரசியாக கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் மகளிர் ஆதிக்கம் தொடர்கிறது.

ஆப்பிரிக்காவின் அடையாளமாக விளங்குவது அந்த கண்டத்தின் சிறப்பம்சமான ஆப்பிரிக்க யானையின் காது. அந்த மக்களின் குணமும் அப்படியே இருப்பதை அறியலாம். இன்றும் ஆப்பிரிக்க மக்கள் அவர்களது திறமையையும் பலத்தையும் அறியாமல்தான் இருக்கின்றனர். அனைத்து நாடுகளும் அந்த நாட்டை அடக்கி ஆள்கின்றன.

வடஅமெரிக்காவைப் பாருங்கள். அச்சுஅசலாக பறக்கும் ஒரு கழுகைப் பார்க்கலாம். இது மொட்டைக் கழுகு என்ற இனத்தைச் சேர்ந்தது. இந்தக் கழுகு தனது உணவுக்காக எந்த ஒரு உயிரினத்தையம் கொன்று தின்னக் கூடியது. இந்தக் குணம் அமெரிக்காவுக்கும் உள்ளது. இந்தக் கழுகைப் போலவே, சத்தமே இல்லாமல் 'பறக்கும்' ஹைபர் சானிக் விமானங்களை அமெரிக்கா மட்டுமே தயாரித்துள்ளது.

தென்அமெரிக்காவின் அடையாளமாக, ஓர் ஆண் சிங்கம் கம்பீரமாக பிடறியை சிலுப்பிக் கொண்டு நிற்பதைச் சொல்லலாம். ஆஸ்திரேலியா, நூறு வீதம் கங்காருவின் முகம் அடையாளமாக அமைந்துள்ளது. அதன் விரைத்த காதுகள் அப்படியே பொருந்தியுள்ளது. சீனாவின் வரைப்பட அடையாளமாக காணப்படுவது பன்றி. வெள்ளைப் பன்றி சீனாவின் பொருளாதார செல்வாக்கைக் காட்டுகிறது. ஆனாலும் மற்ற நாடுகளிடம் பெரிய மரியாதை இருக்காது.

ரஷ்யா, பாயும் அழகான வெள்ளைக் குதிரையை அடையாளப்படுத்துகிறது. பனி பொழியும் அந்த நாடு விடாப்பிடியாகப் போட்டி போடக்கூடிய தன்மை கொண்டது. ஜப்பான் - ஒரு சுறுசுறுப்பான கடல் குதிரையை ஒத்த அடையாளமாகக் கொண்டுள்ளது! கடல் குதிரையின் சிறப்பு- தனது வாரிசை சுமப்பது ஆண்கடல் குதிரையாகும். குழந்தை வளர்ப்பில் ஜப்பானியர்கள் காட்டும் அக்கறை அதீதமானது. கிட்டத்தட்ட கடல் குதிரையின் வடிவத்தில்தான் டிராகனும் அமைந்துள்ளது. இதெல்லாம் மனித மனதின் கற்பனை உருவகமா... அல்லது அந்த நாடுகளின் விதிப்படி விரிந்த எல்லையா என்று ஆராய்ந்தால்... அதில் எங்கோ ஓர் உண்மையும் இருக்கலாம்... இல்லாமலும் போகலாம்.


இயற்கை படைத்த இந்த உலகில், மனிதன் போடும் மாயக்கோடுகள் எல்லாமே அப்படித்தான்!

நன்றி: ஆனந்த விகடன் தீபாவளி மலர்





# DTH இல் வெளியிடுவது சரியா? தவறா?



## விஸ்வரூபம் எடுத்திருக்கும் கமலின் விஸ்வரூபம்

ராம்ஜி

கமல் தன் படத்தைத் திரையிடுவதற்கு முன்னர் சர்ச்சையைக் கிளப்புவது வழக்கம். அவரது விஸ்வரூபம் தயாரிப்பு வேலைகள் முடிவடைந்த நிலையில், விஸ்வரூபமே விஸ்வரூபமாயிருக்கிறது. அதுவும் கமல் புண்ணியத்தில்.

எதிர்வரும் ஜனவரி 11 ஆம் திகதி 'விஸ்வரூபம்' திரைக்கு வருகிறது. அதற்கு முதல் நாள் அதாவது ஜனவரி 10ஆம் திகதி இரவு 8 மணிக்கு 'விஸ்வரூபம்' படத்தை DTH மூலம் தொலைக்காட்சியில் ஒளிபரப்ப கமல் திட்டமிட்டுள்ளார்.

'விஸ்வரூபம்' படத்தை திரையிடும் திரையரங்குகளின் வருமானத்தை இது பெரிதும் பாதிக்கும். எனவே 'விஸ்வரூபம்' படத்தை திரையிடுவதற்கு அனுமதிக்க மாட்டோம்' என்று திரையரங்கு உரிமையாளர்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

'விஸ்வரூபம்' திரைப்படத்தை DTH மூலம் தொலைக்காட்சியில் காட்டும் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படும் அதேவேளை ஆதரவும் கிடைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இக்கட்டுரை அலசி ஆராய்கிறது.

**திட்டம்:**

திரையரங்குகளில் படத்தை வெளியிடுவதற்கு எட்டு மணி நேரத்துக்கு முன்பு DTH மூலம் தொலைக்காட்சியில் படத்தை வெளியிடுவது.

**நன்மைகள்:**

1. ஒரே நேரத்தில் பலரை படம் பார்க்க வைக்கலாம்
2. வெளிநாடுகளிலும் வெளி மாநிலங்களில் உள்ளவர்களும் தமிழ் படத்தை உடனடியாக பார்க்கலாம்.
3. பலரும் ஒரே நேரத்தில் படம் பார்ப்பதால் படம் நன்றாக இல்லாவிட்டாலும் லாபத்தை ஈட்டிவிடும். இதுதான் இந்த தொழில் நுட்பத்தில் மிகச் சிறந்த வரப்பிரசாதம்.
4. திரைப்படம் ஒன்றின் முதல் காட்சியை பெரும்பாலும் பெண்கள் பார்க்க முடிவதில்லை. இதன் மூலம் பெண்களும் முதல் காட்சியை பார்க்கலாம்.

**தீமைகள்:**

1. எதிர்காலத்தில் திரையரங்குகள் பாதிக்கப்படும். நேரடி தொலைக்காட்சியில் (DTH) படம் பார்க்கலாம் என்றால் தீவிர ரசிகர்கள் அதைத்தான் விரும்புவார்கள்.
2. திருட்டு விசிடிக்கள் நிறைய உருவாகும். ஆனால் தொலைக்காட்சியில் படம் பார்க்கும் வசதி உள்ளவர்கள் இந்த விசிடிக்களை வாங்க மாட்டார்கள்.
3. சிலர் படத்தை பதிவு செய்து YOUTUBE இல் ஏற்ற வாய்ப்புகள் உண்டு. (பதிவு செய்ய முடியாத மாதிரி படத்தை ஒளிபரப்பினால் திருட்டு VCD, YOUTUBE பிரச்சினைகளை தவிர்க்கலாம்)

**நன்மையா? தீமையா?**

1. இனி (எதிர்காலத்தில்) நடிகர்களுக்கு பாலாபிஷேகம், பியரபிஷேகம் கிடையாது.
2. ரசிகர் மன்றங்கள் களையிழக்கும்.

எந்தவொரு தொழில்நுட்பமும் ஒரு தொழிலை பாதிக்கவே செய்யும். தொழில் நுட்பத்துக்கு தகுந்த மாதிரி தொழிலை மேம்படுத்திக்கொள்வதே புத்திசாலித்தனமானது. தெருக்கூத்து இன்று அழிந்து விட்டது. இதற்கு திரைப்படங்களே காரணம். அதுபோலத்தான் இதுவும்.

**DTH என்பது என்ன?**

அது எல்லோர் வீட்டிலும் இருக்கும் தொலைக்காட்சியப் பெட்டியல்ல. நல்ல வசதியுள்ளவர்கள் அதிக பணம் கட்டி பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் சினிமாவையும் பார்க்க உதவும் கருவி.

சினிமா அரங்குக்கு செல்ல விரும்பாத வசதியான கூட்டம் சினிமாவை வீட்டோடு அனுபவிக்க உதவும் ஊடகம்தான் இந்த DTH (Direct to Home) இவ்வாறு வீட்டோடு தங்குபவர்களை சினிமாவின் பக்கம் ஈர்க்கும் முயற்சியே இது என்கிறார்கள்.

'விஸ்வரூபம்' முடிந்து 7 மாதங்களாகின்றன. படத்துக்கு விலை கொடுத்து வாங்க பலர் முயன்றனர். ஆனால் எல்லா ஊடகங்களிலும் நல்ல வருலை இந்த முயற்சி.

DTH இல் ஒரே ஒரு காட்சித்தான் காட்டப்படும். இதை பிரதி செய்ய முடியாது. ஒரு முறை மட்டும் காட்டப்படும் இந்த படத்தை பார்க்க 1000 ரூபாய் கட்டணம். ஆனால் திரையரங்கில் பார்க்கும் அனுபவம் கண்டிப்பாக கிடைக்காது. விஸ்வரூபத்தின் Auro 3D ஒலி அமைப்பை திரையரங்கில் மட்டுமே முழுமையாக அனுபவிக்கலாம்.

DTH வசதி தமிழக மக்களில் மூன்று சத வீதத்தினிடம் மட்டுமே உள்ளது.

ஆனால் ஒரு சதத்தினரிடம் மட்டுமே விஸ்வரூபத்தை காட்ட முடியும். 7 1/2 கோடியில் ஒரு சதவீதம் படம் பார்த்தால் குடியே கெட்டு விடும் என்று கூறுபவர்கள் தமது வருமானத்தில் 50% திருட்டு வி.சி.டி வியாபாரிகளிடம் போவதை தடுக்க சிறு முயற்சிகளையே செய்கிறார்கள்.

இந்த முயற்சியால் திரையரங்கில் கூட்டம் குறையாது.

வீட்டில் பெருமாள் படம் காலண்டரில் தொங்குவதால் யாரும் திருப்பதிக்கு போவதைக் குறைத்துக்கொண்டதாகக் தெரியவில்லையே.

வீடுகளில் நல்ல சமையல் கிடைக்கிறது என்பதற்காக ஹோட்டல்களில் கூட்டம் குறைந்து விட்டதா? என்று கேட்கிறார் கமல்.

**கமலுக்கு ஆதரவாக உள்ள சில கருத்துக்கள் இவை**

100 கோடி வரை செலவு செய்து எடுக்கப்பட்ட 'விஸ்வரூபம்' சரியாக போகாவிட்டால் நஷ்டம் ஏற்படும். அதை தவிர்க்க என்ன வழி என்று எண்ணியே கமல் படத்தை DTH மூலம் ஒளிபரப்ப ஏற்பாடு செய்துள்ளார். இதற்காக 50 கோடி ரூபா வரை கமல் விலை பேசியுள்ளதாக ஒரு த்தகவல் கூறுகிறது.

இந்த கணிசமான தொகை படம் வெளியாவதற்கு முன்பே கிடைத்துவிடுகிறது.

அத்துடன் படம் பொங்கல் விடுமுறை காலத்தில் வெளிவருகிறது. வெளியான இரு வாரங்கள் அரங்கு நிறைந்த காட்சிகளாக இருக்கும். அப்போது மீண்டும் கணிசமான தொகை கிடைக்கும். அத்துடன் வெளிநாட்டு வருமானம். இவற்றை கூட்டிக்கழித்தால் படம் ஹிட்டாகாவிட்டாலும் தயாரிப்பாளர் நஷ்டத்தில் இருந்து தப்பிவிடுவார்.

இனிவரும் நாட்களில் குறைந்த பட்ஜெட் படங்களும் திரைக்கு வரும் முன்னர் சேனல்களுக்கு விற்கப்படலாம்.

இது படங்களின் செலவுக்கேற்ப வருமானம் பெறும் நிலையை உருவாக்கும். எனவே கமலின் இந்த முயற்சி வரவேற்கத்தக்கது.

ஆனால் திரையரங்க உரிமையாளர்களிடம் இருந்து இதற்கு எதிர்ப்பு வரலாம்.

'துப்பாக்கி' படம் திருட்டு DVD யில் வந்தாலும் திரையரங்குக்கு மக்கள் வரவில்லையா?

'மாற்றான்' பற்றி பதிவுகளில் மாறுபட்ட விமர்சனங்கள் வந்தும் திரையங்குக்கு மக்கள் வரவில்லையா?

**மற்றொரு கருத்து இது**

1. தமிழக திரையரங்குகளில் டிக்கட் விலை அதிகம் என்று நினைப்பவர்கள். ஒரு வாரம் கழித்து திருட்டு விசிடியில் பார்க்க நினைப்பவர்கள் இப்போது காசு கொடுத்து DTH இல் படம் பார்க்கலாம். இந்த காசு படத்தின் தயாரிப்பாளருக்கு முன்னரே நேரடியாக கிடைத்துவிடும்.
2. தமிழ் நாட்டில் எல்லா ஊர்களிலும் படங்கள் ரிலீஸ் செய்யப்படுவதில்லை. புதிதாக வெளிவரும் படங்களை பார்க்க சிலர் 50 கிலோ மீட்டர் கூட பயணம் செல்வார்கள். இவர்கள் DTH இல் படம் பார்க்கலாம்.
3. தமிழ் படங்கள் இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் வெளியிடப்படுவதில்லை. வடகிழக்கு மாநிலங்களில் இருக்கும் தமிழர்களுக்கு உள்ள ஒரே வழி DTH மூலம் புதுப்படங்களை பார்ப்பதுதான்.

கமலஹாசனின் திட்டத்துக்கு ஆதரவு தரும் மற்றொருவரின் கருத்து இது.

1995க்கு பிறகு சன் டிவி கோலோச்ச தொடங்கியது. டி.வியில் தொடர்ந்து திரைப்படங்களை வெளியிட்டால் திரையரங்குக்கு கூட்டம் வராது என்றார்கள்.

(31ஆம் பக்கம் பார்க்க)

## வாடா மலரே



ஜோசப் தளியத்தின் இரவும் பகலும் படம் மூலம் படவுலகில் பிரவேசித்த ஜெய்சங்கர், தென்னக ஜேம்ஸ்பொண்டாக பிரபலம் பெற்று ஏராளமான படங்களில் நடித்த ஒரு ஜெண்டில்மன். கிசுகிசுக்களில் சிக்காத இன்னொரு சிவகுமார். எம்.ஜி.ஆர்- சிவாஜி யுகத்தில் அவரால் தனியிடத்தை தன் நளினமானதும் வம்புத்தும்புக்கு போகாத தனித்தன்மையாலும் தக்க வைத்துக்கொள்ள முடிந்தது.

## குருவும் சிஷ்யனும்





இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.

## அன்றும் இன்றும்

மணி ஸ்ரீகாந்தன்





கோட்டை கான் மணிக்கூட்டுச் சந்தி (மெயின் ஸ்ட்ரீட் ஆரம்பம்) நூறு வருடங்களுக்கு முன்னர் இப்படித்தான் வெறிச்சோடிக் கிடந்தது. அதன் இன்றைய தோற்றத்தை பக்கத்து படத்தில் பார்க்கவும்.

*எழுபதுகள் முதல் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளராக சென்று செய்தி சேகரித்துவரும் கட்டுரையாளர் தனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்களை இங்கே உங்களுடன் சுவை பட பகிர்ந்து கொள்கிறார்.*

**மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள்**

# பிரேமாவுக்கு எமனாக வந்த பூனை



புஞ்சி நோனா கிராமத்தில் ஆசிரியையாக வேலை பார்த்து ஒய்வு பெற்றவர். சிரிபால அவரது இளைய மகன். இருவரும் இப்போது பிலியந்தலையில் வசிக்கிறார்கள்.

62 வயதான புஞ்சி நோனா வீட்டு வேலைகளை கவனித்துக்கொள்ள சிரிபால வேலைக்கு சென்று வந்தான்.

சிரிபால களுபோவில ஆஸ்பத்திரியில் ஆண் தாதியாக வேலை பார்த்து வந்தான்.

இயல்பாகவே சிரிபாலவுக்கு இருந்த இரக்க குணம் இந்த வேலையில் சிரிபாலவுக்கு பெரிதும் உதவியது.

நோயாளிகள் மீதும் அவர்களை பார்க்க வருபவர்கள் மீதும் கனிவான பார்வையுடன் இதமாக பேசும் முறை சிரிபாலவுக்கு இயல்பாகவே இருந்த ஒன்று. அத்துடன் எப்போதுமே சிரிப்புடன் கூடிய அவனது களையான முகம் அவனுக்கு நிறைய நண்பர்களை ஏற்படுத்திக்கொடுத்தது.

ஆஸ்பத்திரிக்கு வருபவர்கள் முதலில் சிரிபாலவைத்தான் தேடுவார்கள். அவன் இருந்தால் அவர்கள் வந்த வேலையில் பாதி முடிந்த மாதிரிதான்.

சிரிபாலவின் இரக்கக்குணம் ஆஸ்பத்திரிக்கு மட்டும் என்று மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆஸ்பத்திரியில் இருப்பதைப் போலவே அவன் வீட்டிலும் இருந்து வந்தான்.

அதன் காரணமாகவோ என்னவோ வீட்டில் ஒரு நாயையும் பூனையையும் வளர்த்து வந்தான். இரண்டும் அவனுடன் மிகவும் பாசத்துடன் பழகின. வீட்டில் இருக்கும்போது அவன் என்ன சாப்பிட்டாலும் அதில் நாய்க்கும் பூனைக்கும் ஒரு பங்கு நிச்சயம். அத்துடன் வேலையில் இருந்து வரும்பொழுது வாயில்லா பிராணிகளுக்காக ரோல்ஸ், கட்லட் என்று எதையாவது கொண்டு வர அவன் மறப்பதே இல்லை.

நாய்க்கு டார்ஸன் என்றும் பூனைக்கு கிரியா என்றும் அவன் பெயர் வைத்திருந்தான். டார்ஸன் பிரவுன் நிறம், கிரியா வெள்ளை நிறம்.

புஞ்சி நோனாவின் மூத்த மகன் கிராமத்திலேயே தங்கி விட்டான். அவர்களுக்கு அங்கே வயல் காணி இருந்தது. அவற்றைப் பார்த்துக் கொண்டு அவன் அங்கேயே தங்கிவிட்டான். அறுவடையில் ஒரு பகுதி மற்றும் பலா, வாழை ஆகியவை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை புஞ்சிநோனா வீடுக்கு வந்து விடும். எனவே புஞ்சி நோனாவுக்கு காய்கறிகள் மற்றும் இறைச்சி, மீனை மட்டுமே காசு கொடுத்து வாங்கவேண்டியிருந்தது.

இந்த நிலையில்தான் சிரிபாலவுக்கு பெண் பார்க்கும் படலத்தை புஞ்சிநோனா ஆரம்பித்தார். உறவினர், வந்தவர், போனவர், தெரிந்தவர் என எல்லோரிடமும் சிரிபாலவுக்கு தகுந்த பெண் கிடைக்குமா என்று விசாரித்தார். கிடைத்த விபரங்களை அலசி ஆராய்ந்தார். அதன்படி நகர்புற பெண்களை விட கிராமப்புற பெண்ணே தனது மகனுக்கு பொருத்தமாக இருப்பாள் என்று தீர்மானித்த புஞ்சிநோனா தனது பெண் பார்க்கும் படலத்தை கிராமத்துக்கு மாற்றினார்.

அடுத்த கிராமத்தில் ஒரு குடும்பம். ஓரளவு வசதியானவர்கள். நில புலனும் இருந்தது. சொந்த வீடும் இருந்தது. குலம், கோத்திரம் புஞ்சிநோனா குடும்பத்துடன் ஒத்துப்போனது. அவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். கிராமத்திலேயே பிறந்து வளர்ந்தவர்கள். கிரமப்பாடசாலையிலேயே படித்தவர்கள்.

இரு பெண்களில் மூத்தவள் கொஞ்சம் அறிவு, கொஞ்சம் அழகு. இது புஞ்சிநோனாவுக்கு போதுமானதாக இருந்தது.

ஓய்வு பெற்ற ஆசிரியை என்றரீதியில் புஞ்சிநோனாவுக்கு அந்த கிராமத்தில் நல்ல மதிப்பு இருந்தது. அவரது குடும்பத்துடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள அப்பகுதியில் பலர் முண்டியடித்துக்கொண்டிருந்தனர்.

பேச்சுவார்த்தை நடந்தது. கல்யாணத்தில் முடிந்தது. பிரேமலதா சிரிபாலவின் மனைவியாகி கொழும்புக்கு வந்தாள்.

பிரேமலதா கிராமத்திலேயே வசித்தவள். கிராம கலாசாரத்திலேயே ஊறியவள். கொழும்புக்கு வந்ததும் நகர்ப்புறத்து நவநாகரீக நடைமுறைகள் அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. கிராமத்து அருக்காணியாக இருந்த அவள் நகரத்து ருக்மணியாக மாறினாள்.

அடுத்தவீடு, அதற்கடுத்த வீடு என பக்கத்து வீடுகளில் இருந்த நகரத்து யுவதிகள் பிரேமலதாவுக்கு தோழிகளாகினர். இது பிரேமாவின் தோற்றத்தையும் பழக்க வழக்கங்களையும் மெல்ல மெல்ல மாற்றியது.

அழகுணர்ச்சிக்கு அடிமையாகிய பிரேமா முதலில் சிரிபால வளர்த்த பூனையையும் நாளையும் வெறுத்தாள். அவற்றை உயிருள்ள பிராணிகளாகவே அவள் கருதவில்லை. மாறாக தனது அழகுத்தோற்றத்துக்கு பங்கம் ஏற்படுத்த வந்த பிராணிகள் என்ற ஒரு எண்ணம் அவளுக்குள் உருவாகியிருந்தது. ஆனால் சிரிபாலவின் எண்ணப்போக்கில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக அவன் தனது நாயையும் பூனையையும் மேலும் அதிகமாக நேசித்தான். வேலை முடிந்து வீடு வரும்போது புது மனைவிக்கு தின்பண்டங்களோ வாசனைப்பொருட்களோ வாங்கி வருவதை விடுத்து அவன் தனது வளர்ப்பு பிராணிகளுக்கு சாப்பிட எதுவும் வாங்கி வருவதையே பெரிதும் விரும்பினான். இது பிரேமாவுக்கு மிகுந்த எரிச்சலை ஏற்படுத்தியது.

சிரிபால தனது பூனைக்கும் நாய்க்கும் உணவு போடுவதையும் அதன் மீதப்படும் எச்சங்களை சுத்தம் செய்யுமாறு சிரிபால கூறும்போதும் பிரேமாவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வரும். சில நேரம் நாயோ பூனையோ அசுத்தம் செய்து விட்டால் அதனை அப்புறப்படுத்தி விட்டு சுத்தம் செய்யுமாறு புஞ்சிநோனா பிரேமாவுக்கு கூறுவாள். அப்படி கூறும்போது பிரேமாவுக்கு தூக்குத் தண்டனைக்கு நியமிக்கப்பட்டதுபோல இருக்கும். வேறு வழியின்றி அதனை செய்து முடிப்பாள்.

அன்றொரு நாள் குளிப்பதற்காக பிரேமா வெந்நீரை ஆறவைத்திருக்கிறாள். அந்த இடத்துக்கு கிரியா வெள்ளைப் பூனை வந்திருக்கிறது. அதற்கு தாகமாக இருக்கவே வெந்நீர் பேசினில் வாய் வைத்திருக்கிறது. நீரின் சூட்டினால் அது பேசினிலேயே கக்கிவிட்டது.

அந்த நேரம் அங்கு வந்த பிரேமா இதைப் பார்த்திருக்கிறாள். வந்த கோபத்தில் அருகில் இருந்த விறகுக் கட்டையையால் பூனைக்கு சாத்து சாத்தென்று சாத்தியிருக்கிறாள். பூனைக்கு காலில் பலமான அடி. நொண்டி நொண்டி ஓடியவாறே கத்திக் குரலெழுப்பியிருக்கிறது. பூனையின் அவலக்குரலைக் கேட்டு அங்கே வந்த சிரிபாலவுக்கு கோபம் தலைக்கேறி விட்டது.

"வாயில்லாத ஜீவன்களை இப்படி அடித்து பாவத்தை சேர்த்துக்கொள்ளாதே. அந்த பாவம் உன்னை சும்மா விடாது அடுத்த ஜன்மத்திலும் உன்னை தொடர்ந்து வரும். கிராமத்தில் இருந்து வந்தவள் தானே நீ! பூனையையும் நாயையும் நீ இப்படி அடிப்பதை பார்த்தால் கிராமத்தில் இருந்து வந்தவள் என்று கூற முடியாமல் உள்ளதே! இனி ஒரு நாளும் இப்படிச் செய்யாதே. அப்படி செய்தால் நான் சும்மாயிருக்க மாட்டேன்" என்று சிரிபால பிரேமாவை கடிந்து கொண்டான்.

புஞ்சிநோனா தனது அறையில் பொருட்களை அடுக்கிக்கொண்டிருந்தாள். சிரிபால வேலைக்கு போவதற்காக உடுத்திக்கொண்டிருந்தான். பிரேமா குசினியில் சமைத்துக்கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில்...

பிரேமாவின் அலறல் சத்தம் சிரிபாலவையும் புஞ்சிநோனாவையும் குசினியை நோக்கி ஓடி வரச்செய்தது...

அங்கே... தீப்பற்றியிருந்தது.

பிரேமாவின் ஆடைகளில் இருந்து நெருப்பு ஜுவாலை விட்டுக்கொண்டிருந்தது.

அருகே... மண்ணெண்ணெய் கேன் விழுந்து கிடந்தது. குசினி முழுவதும் மண்ணெண்ணெய் வாசனை.

சிரிபாலவின் ஏச்சை பொறுக்க முடியாத பிரேமா தன் உடலில் மண்ணெண்ணெயை கொட்டி தீ வைத்துக்கொண்டாள்.

தற்கொலை மரணம் என்று மரண விசாரணை அதிகாரி அவரது சான்றிதழில் குறிப்பிட்டிருந்தார்.

ஏ. மதுரை வீரன்



**உலகப் புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளரான மாக்ஸிம் கோர்கி எழுதிய The boy என்ற அற்புதமான இச் சிறுகதையை படைப்பாளர் எஸ். முத்துமீரான் வண்ண வானவில் வாசகர்களுக்காக மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார்.**



மாக்ஸிம் கோர்கி

# சிறுவன்



தவம்

இது ஒரு சின்னக் கதை. இதைச் சொல்வது எப்படி என்று எனக்கு புரியவில்லை. அவ்வளவு எளிதானது.

என் இளமைப் பருவத்தில் நான், ஊரிலுள்ள குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு, ஊருக்கு வெளியே உள்ள வயல் வெளிகளுக்கு ஞாயிறு தினங்களில் அழைத்துச் செல்வது வழக்கம். குருவிக் குஞ்சுகளைப் போல் பறந்து திரியும் இவர்களோடு நண்பனாகி, அங்குமிங்கும் அலைந்து திரிவதில் எனக்கு அலாதி விருப்பம்.

புழுக்கமும், புழுதியும் நிறைந்த தெருக்களை விட்டு, பசுமையும் அமைதியும் நிறைந்த வயல் வெளிகளுக்கு போய்ச் சுற்றித் திரிவதில் குழந்தைகளுக்கும் அலாதி விருப்பம்தான். இவர்கள் தங்கள் தாய்மார்கள் கட்டிக் கொடுத்த ரொட்டிப் பார்சல்களை எடுத்துக் கொண்டு என்னோடு வருவார்கள். நானும் கொஞ்சம் உணவையும், குடிப்பதற்கு கொஞ்சம் பானத்தையும் போத்தலில் எடுத்துக்கொண்டு, பச்சைப் பசேலென்று ரம்மியமாக காட்சியளிக்கும் வயல்களினூடாக செழிப்புற்று, கண்ணுக்கு குளிர்ச்சியாக இருக்கும் காட்டு வெளிக்கு கூட்டிச் செல்வேன். கவலை தெரியாமல் பறந்து திரியும் என் சின்ன நண்பர்களுக்கு இப் பிரயாணம் விபரிக்க முடியாத மகிழ்ச்சியைத் தரும்.

விடியச் சாமத்திலேயே நாங்கள் ஊரை விட்டு புறப்பட்டு விடுவது வழக்கம். மாதா கோயில் மணி காலை ஆராதனைக்கு ஒலிக்கும் வேளையில் நாங்கள் போய்க் கொண்டிருப்போம். என் சின்ன நண்பர்கள் ஆனந்தத்தில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு, என்னோடு வருவார்கள். அவர்களுக்கு விபரிக்க முடியாத மகிழ்ச்சி.

இவர்கள், சூரியன் உச்சத்திலிருந்து சாயும் வரை விளையாடி விட்டு கொண்டு வந்த உணவுப் பொட்டலங்களைப் பிரித்து சாப்பிட்ட பின்னர் அமைதியாகச் சிலர் மரநிழலில் உறங்குவார்கள். சிலர் தூங்காமல் என்னைச் சுற்றி இருந்து கொண்டு ஏதாவது கதை கூறும்படி நச்சரித்துக்கொண்டிருப்பார்கள்.

என் நண்பர்களின் வேண்டுதல்களைத் தட்ட முடியாமல் நான் கதை சொல்லி அவர்களை மகிழ்விப்பேன். என் இளமைத் துடுக்கும், அனுபவமில்லா அறிவாற்றலும், தலைக் கனமும் சேர்ந்து என்னை ஒரு பெரிய கதை சொல்லியாக மாற்றி, என் நண்பர்களை வியப்பில் மூழ்கடித்துக் கொண்டிருக்கும். இதில் எனக்கு மகிழ்ச்சியும், பெருமையும்.

வசந்தகால வானம் இயற்கையைத் தன் தூரிகையால் எழிலாக்கிக்கொண்டிருக்க, கானகச் சோலையை குளிர்காற்று தாலாட்டிக்கொண்டிருக்கிறது. எங்கும் அமைதியின் ஆளுமையில் உலகம் உறங்கிக் கொண்டிருக்க, நீலவானத்தில் வெள்ளை முகில்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கின்றன. கானகம் மௌனமாகிக் கிடக்கிறது. எங்கும் இயற்கையின் புதிர்கள், முகிழ்ந்து சிரிப்பது அற்புதமாக இருக்கிறது.

என் கதையில் லயித்து என்னைச் சுற்றி இருந்து கொண்டிருக்கும் என் சின்ன நண்பர்கள் வாழ்வின் இன்ப துன்பங்களையெல்லாம் அறிந்து கொள்வதற்கு ஆர்வமோடு இருப்பது எனக்கு அதிசயமாகவே இருக்கிறது. என் கதையைக் கேட்க, இவர்கள் உலகிற்கு இறைவனால் அனுப்பப்பட்டவர்கள் போல் எனக்குத் தெரிகிறது.

என் இளமைக்காலம் இனிமையானது. நான் ஏழ்மையில் மூழ்கடிக்கப்பட்டு, இருளில் கிடந்து தவித்துக் கொண்டிருந்தாலும் என் சின்ன நண்பர்களின் உயிர்த் துடிப்பான நட்பு, அவர்களின் தெளிவான விவேகம், என்னுடைய சாப்பாடு. விருந்துகள் எல்லாம் சேர்ந்து, என்னை மகிழ்ச்சியோடு வைத்துக்கொண்டிருந்தன. என்வாழ்வு இனிமையாகத் துளிர்த்துக்கொண்டிருந்தது. என் நண்பர்களின் உணர்ச்சிகள் சிந்தனைகள் சேர்ந்து எனக்கு உரமூட்டிக்கொண்டிருந்தன.

ஒருநாள் நானும் என் சின்ன நண்பர்களும் ஊரிலிருந்து அழகிய வயல்வெளிக்கு சென்று கொண்டிருக்கும்போது ஒரு அன்னிய சிறுவனைக் கண்டோம். அவனொரு சின்ன யூதப்பையன். கால்களில் பாதணிகள் இல்லை. கிழிந்த சட்டை அணிந்திருந்தான். குழிவிழுந்த கருத்தப் புருவத்தோடு இருந்த கண்களும், வெண்மையான சுருட்டை முடியும், ஆட்டுக்குட்டி போன்ற அவனை ஏதோ ஒன்று கஷ்டப்படுத்திக்கொண்டிருக்கவேண்டும். வேதனையில் அழுது, விழிகள் வீங்கி இருந்த அவன், பசியால் துடித்துப்போயிருந்தான். பயந்து போயிருந்த அவன், அவசரமாக எங்களைக் கடந்து, நடைபாதைக்குப் போய் விட்டான்.

அப்பொழுது என் சின்ன நண்பர்கள் ''அவனைப் பிடியுங்கள். சின்ன யூதப் பயல்... அவனைப் பிடியுங்கள். என்று மகிழ்ச்சியில் கத்திக் கொண்டிருந்தார்கள்.

பயந்து போய், குழி விழுந்த கண்களோடு அவன் ஓடாமல் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருந்தான். மகிழ்ச்சியில் என் சின்ன நண்பர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு பரிகாசம் பண்ணிக்கொண்டிருந்தனர். எதையும் சட்டை செய்யாது, சிறுவர்களுக்கிடையில் நிற்கும் அவன், மன' ஆளுமையை உயர்த்திக்கொண்டிருந்தான். அவர்களுக்கிடையில் தலை நிமிர்ந்து நிற்கும் அவன், தன் புஜங்களை உயர்த்தி, கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு நின்றான்.

அப்பொழுது, அவன் திடீரென்று ''நான் ஒரு வித்தை காட்டுகிறேன். நீங்கள் பார்க்கிறீர்களா?'' என்று துணிச்சலோடு கேட்டான்.

''எங்கே உன் வித்தையைக் காட்டு பார்ப்போம்'' என்றனர் சிறுவர்கள்.

இவன் தனக்கு ஏற்பட்டுள்ள இந்த ஆபத்திலிருந்து விடுபட்டுக்கொள்வதற்காக இந்தத் தந்திரத்தைச் செய்கிறான் என்று நினைத்தேன். ஆனால், அவன் உண்மையிலேயே தன் வித்தையைக் காட்டத் தொடங்கிவிட்டான். அவன் வித்தையைப் பார்த்து சிறுவர்களும் முரட்டுச் சுபாவமுள்ள பெரியவர்களும், தெருவோரக குழந்தைகளும் எல்லாவற்றையும் மறந்து ரசித்துக்கொண்டிருந்தனர். அந்த யூதச் சிறுவன் தன் உடலை வளைத்து 'ஹப்' என்று சொல்லிக் கொண்டு கரணமடித்தான். பக்கவாட்டில் சரிந்து சுழன்று துள்ளிக் குதித்துக் குதித்துக் கொண்டிருந்தான். ஏழ்மையின் பிடியில் தவித்துக் கொண்டிருந்த அவனின் தோள் பட்டையும், சாம்பல் பூத்த அவன் உடலும், அவனுடைய கிழிந்த சட்டையினூடே அழுதுகொண்டிருந்தன. அவன் கழுத்து எலும்புகள் உடைந்து விடத் துடித்துக் கொண்டிருக்க, அவனுடைய உடம்மை, வியர்வை குளிப்பாட்டிக் கொண்டிருந்தது. இடைவிடாமல் அவன் தன்னுடைய வித்தையைத் தொடர்ந்து காட்டிக்கொண்டிருந்தான். அவனுடைய வித்தையை எல்லோரும் ரசித்துக் கொண்டிருந்தனர். ஜீவனற்ற ஒரு சிரிப்போடு தன் வித்தையை ரசித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளைப் பார்த்து, அவனுடைய குழி விழுந்து ஒளி மங்கிய நேத்திரங்கள் அகல விரிந்தன. குழந்தைகள் சதா கூச்சலிட்டு, இவனை உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தனர். வறுமையினால் பலமிழந்த அவன் உடல் கரணமடித்து குதிக்கும்போது விழுவதும், புரள்வதுமாக இருந்தது.

அந்த யூதச் சிறுவனின் வித்தைகள் நிறைவுற்று அவன் எழுந்து, அவனுடைய வித்தையைக் கண்டு கழித்தவர்களிடம் எதையோ எதிர்பார்த்து ஏங்கி நின்றான் என்பது தெரிந்தது. மறுகணம், அவன் வித்தைகளைக் கண்டுகளித்தவர்களிடம் கையை நீட்டி ''ஏதாவது கொடுங்கள்'' என்று கேட்டான். மௌனமாக நின்ற குழந்தைகளில் ஒரு குழந்தை ''பணமா?'' என்று கேட்டது. அதற்கு அந்த யூதச் சிறுவன் ''ஆம்'' என்று கூறினான்.

அப்பதிலைக் கேட்ட இன்னொரு சிறுவன் ''இதென்ன புதினம்! பணமென்றால் உன்னைப் போன்று நாங்களும் நன்றாக வித்தை செய்திருப்போமே'' என்று கூறியதோடு அவனை ஏசி விட்டு வயற்பக்கம் ஓடிச்சென்றனர். அவனுடைய ஏழ்மையும் இயலாமையும் அவனைப் பார்த்து பரிதாபமும் பரிகாசமும் செய்தன. உண்மையில் அவனுக்கு கொடுக்க அவர்களிடம் பணமில்லை.

அந்தப் பையனின் நிலையைப் பார்த்து என் இதயம் நெகிழ்ந்தது. என்னிடமிருந்த சில நாணயங்களில் இரண்டை எடுத்து அழுக்கேறிய அவன் உள்ளங்கையில் வைத்தேன். அதை அவன் மகிழ்ச்சியோடு தொட்டுப்பார்த்து விட்டு எனக்கு மரியாதையோடு நன்றி கூறிவிட்டு போகும் அவனை உற்று நோக்கினேன். அவன் அணிந்திருந்த சட்டையில் இரத்தக்கடை படிந்து அவன் முதுகோடு ஒட்டி இருந்தது. அவன் மேல் எனக்கு இனந்தெரியாத ஒருவித அக்கறை ஏற்பட்டு ''இதென்ன உன் முதுகில் இவ்வளவு பெரிய தடயம்'' என்று கேட்டேன்.

நடந்துக்கொண்டிருந்தவன் நின்று, புன்னகையோடு அமைதியாக என் கேள்விக்கு ''இதுவா, நானும் என் தந்தையும் கடந்த ஈஸ்ட்டர் பண்டிகை காலத்தில், சர்கர்ஸ் ஆடும்போது தவறி விழுந்து விட்டோம். அன்று தவறி விழுந்த என் தந்தை இன்று வரை படுத்த படுக்கையிலேயே கிடக்கிறார். அவரால் எதுவுமே செய்ய முடியாது. எனக்கு ஓரளவு சுகமாகி விட்டது. இன்னும் பூரண குணமில்லை,'' என்று கூறிய அவன் என்னை உணர்ச்சியோடு பார்த்தான்.

மறுகணம், அவனுடைய சட்டையைத் தூக்கி அவன் முதுகைப் பார்த்தேன். என் மனம் வேதனையால் வெந்துருகியது. அவனுடைய இடது தோள்பட்டையிலிருந்து தொடை வரை தோல் உரிந்திருந்தது. பெரிய புண் ஓரளவு காய்ந்திருந்தது.

பாவம்! தற்பொழுது அவன் எங்கள் முன்னிலையில் காட்டிய வித்தையினால், ஆறி இருந்த சில காயங்கள் தாக்குப்பட்டு, இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. வழிந்து கொண்டிருக்கும் இரத்தத்தைப பற்றி சிறிதும் கவலைப்படாமல் ''எனக்கு வலிக்கவே இல்லை... ஆனால் கொஞ்சம் அரிக்கத்தான் செய்கிறது; என்ன செய்யலாம். என் தந்தையிடம் ஒரு சல்லிக் காசு கிடையாது. அவருடைய காயமும் பெரிசு. இதனால் எங்கள் உணவிற்காக நாங்கள் எதையாவது செய்துதானே ஆகவேண்டும்! இந்த வித்தையெல்லாம் எனக்காகவா நான் செய்கிறேன்? இல்லவே இல்லை. என் குடும்பத்திற்காகத்தான், இந்த வேதனைகளையெல்லாம் தாங்கிக் கொண்டு உழைக்கிறேன். நாங்கள் வாழ, நான் எப்படியும் வேலை செய்துதானே ஆகணும். அதிலும் நாங்கள் யூதர்கள் எங்களைப் பார்த்து எல்லோரும் மனிதாபிமானமற்ற நிலையில் கேலி செய்வதுதான் எங்களுக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது'' என்று அவன் ஒரு வீரனுடைய நெஞ்சழுத்தப் பார்வையுடன் கூறிவிட்டு நடந்து கொண்டிருந்தான்.

என் வாழ்க்கையில் எனக்கு துன்பங்கள், கஷ்டங்கள் வரும்போதெல்லாம் இந்த யூதச் சிறுவனின் தைரியத்தையும், மனவுறுதியையும் நினைத்து ஆறுதல் அடைவேன்.



# சிவகாமி மகன் என்று கண்ணதாசன் குறிப்பிட்டது யாரை?

வானொலியில் அடிக்கடி ஒலிபரப்பாகும் பாடல்தான் 'அந்த சிவகாமி மகனிடம் தூது செல்லடி' என்ற பாடலாகும். கவியரசர் கண்ண தாசன் எழுதிய பாடல் அது. அருமையாக அமைக் கப்பட்ட, என்றென்றும் திகட்டாத பாடல் இது. இந்த பாடலுக்கு ஒரு சின்னப் பின்னணி உள்ளது.

தி.மு.கவில் இருந்து விலகிய கண்ணதாசன் காங்கிரசில் சேர்ந்தார். அப்போது தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவராகவும் இந்தியாவின் முன்னணி காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரா-கவும் விளங்கியவர் கர்மவீரர் காமராசர். கவிஞர் வெள்ளை மனம் படைதத்வர் என்பதால் எதையும் வெளிப்படையாகச் சொல்லி விடும் இயல்பு அவரிடம் இருந்தது. இப்படி எதையோ சொல்லப்போக, காமராசர் கவிஞரைத் தள்ளி வைத்து விட்டார். முதலில் வீம்பு பிடித்தாலும் பின்னர் தான் செய்தது தவறு என்பதை கவியரசர் தெரிந்துகொண்டார். எனினும் காமராசரிடம் சென்று பேசுவதற்கு கண்ணதாசனுக்கு தயக்கம். காமராசர் இன்றைய அரசியல்வாதிகளைப்போல் விலைக்கு வாங்கப்படக்கூடியவரல்லர்.

இந்தப் பின்னணியில்தான் கவிஞர் இப்பாடலை எழுதினார். சிவகாமி என்பது காமராசரின் அம்மாவின் பெயர். சிவகாமியின் மகன் என்பது கர்மவீரர் காமராசர். இத்திரைப்பாடல் ஊடாக கவிஞர் காமராசரிடம் தூது விடுகிறார். என்னை மன்னித்து விடுங்கள் என்கிறார். அடுத்தமுறை இப்பாடல் ஒலிக்கும்போது இந்தப் பின்னணியை மனதில் வைத்து பாடலை ரசித்தீர்களானால், கவிஞர் விட்ட தூதின் பொருள் உங்களுக்குப் புரிந்துவிடும்.

இந்தப் பாடல் வெளியான பின்னர் பாடலின் உண்மை நோக்கத்தை காமராசரிடம் சிலர் எடுத்துச் சொல்ல, புன்னகை பூத்த காமராசர், ''ஏன் அவன் வர்றதுதானே!'' என்று கூறினாராம். இருவரும் பின்னர் ராசியாகி விட்டார்கள்.

- மணிவண்ணன்
மன்னார்.

# ஹூலாஹூப் ஆடி அசத்திய ஜூனியர் சுப்பர் ஸ்டார் ஆமினா



புத்தளம் சாஹிராக் கல்லூரியில் கனிஷ்ட பிரிவில் மூன்றாம் வகுப்பில் பயிலும் ஏழு வயதான மாணவி ஆமினா ரஹ்மத், சிரச சிங்களத் தொலைக்காட்சி நடத்திய ரியாலிட்டி ஷோவில் பங்கேற்று ஜூனியர் சுப்பர் ஸ்டாராக இரண்டாம் இடத்தைப் பிடித்துக் கொண்டார் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயம்.

இவர் முதலாம் இடத்துக்குத் தெரிவு செய்யபட்டிருக்க வேண்டியவர். ஆனால், இவர் முதலாம் இடத்துக்கு தெரிவு செய்யப்படுவது அவரது எதிர்கால கல்வித் தேர்ச்சியை பாதிக்கும் என பெற்றோர் கருதியதால் எஸ்.எம்.எஸ் தெரிவை ஆமினாவின் பெற்றோர் ஆதரிக்கவில்லை. எஸ்.எம்.எஸ் வாக்குகளை அளியுங்கள் என்று எவரையும் இவர்கள் ஊக்கப்படுத்தவும் இல்லை.

மேலும் இச்சிறுமி பகிரங்க மேடையில் தோன்றுவது தொடர்பாக சமூக ரீதியான ஆட்சேபணைகளும் எழுந்தன. இவரது பாட்டனார் ஐ.எம். இல்யாஸ் முன்னாள் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர். இவர் இந்த ஆட்சேபணைகளுக்கு இணையத்தில் விரிவான விளக்கம் கொடுக்க நேர்ந்தது. புத்தளத்தில் முஸ்லிம் மாணவியர் பர்தா அணிவதை அறிமுகப்படுத்தியவர் தாமே என்றும் அந்த விளக்கத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இது இப்படி இருக்க, மார்க்க விடயங்களில் இறுக்கமுடைய காத்தான்குடி போன்ற நகரங்களில், பொது இடங்களில் அகலத் திரை வைக்கப்பட்டு இந்நிகழ்ச்சியை அனைவரும் பார்க்கும்படி செய்யப்பட்டது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. ஆதரவும் திரட்டப்பட்டது.

ஆமினா போட்டிக்கு தெரிவு செய்த நிகழ்ச்சி நடனமோ, சங்கீதமோ அல்ல. ஹூவா ஹூப் எனும் நடனமாகும். அவர் வித்தியாசமான ஒன்றாக இருக்கவேண்டும் என்பதால் இதைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். இது பாடசாலைகளில் மெய்வல்லுனர் போட்டி அணிவகுப்பின்போது இடம் பெறுவதுண்டு. உடற்பருமனைக் குறைக்க ஹூலா ஹூப் உதவுகிறது. வளையங்களைப் பயன்படுத்தி அவை கீழே விழாமல் உடலைச் சுற்றிவரும் வகையில் லாவகமாக ஆடும் நடனமே இது. ஆமினா மூன்று நான்கு வளையங்களை உடல் முழுவதும் சுழற்றி ஆடினார்.

நடுவர்கள் மூவருமே இதனை வியந்ததுடன், இப்போட்டி நடைபெற்ற ஒரு வருட காலத்தில் ஒரு முறையிலாவது வளையம் தவறிக் கீழே விழுந்து விடுமோ என்று அவதானித்திருந்ததாகவும், அவ்வாறு நடைபெறாததுடன், ஆட்டத்திலும் தவறேதையும் காணமுடியவில்லையென்றம் கூறியிருந்தார். மேலும் தன்னால் நன்றாக பாடவும் முடியும் என்பதையும் நிருபித்திருந்தார் ஆமினா.

சிலவருடங்களை இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கழித்திருக்கும் சிறுமி ஆமினா, தமிழ், சிங்களம், ஆங்கிலம் மற்றும் உருது மொழிகளில் பரிச்சயம் கொண்டவர். சிரச ஜூனியர் சுப்பர் ஸ்டார் தெரிவில் இரண்டாம் இடம் படித்த இவர், நாட்டின் தேசிய ஒற்றுமைக்கு ஒரு குட்டி முன்மாதிரி. கல்வியிலும் இவர் மேன்மை காணட்டும்.

- எஸ்.எம்.ஜே பைஸ்தீன்

## வளர்பிறையாக வேண்டும் பிறை எப்.எம்

எப்.எம் வானொலிச் சேவைகளில் புதுமைகளும், புரட்சிகர மாறுதல்களும் நிகழ்ந்து கொண்டிருக்கையில் அரச வானொலிகளில் மட்டும் பழைமையே பேணப்பட்டு வருகிறது. புதுமைகளைக் கொண்டு வருவதில் அரசாங்கமோ, அரச அதிகாரிகளோ தடைபோடுவதாக நம்புவதற்கில்லை. ஊழியர்கள், உயர் அதிகாரிகளின் அசட்டைப் போக்கும் சம்பளத்துக்கு வேலை செய்யும் மனப்பான்மையுமே இதற்குக் காரணம் என்றே கருதவேண்டியிருக்கிறது.

இவ்வகையில் பார்த்தால் பிறை எப்.எம்.மும் வழமையான அரச வானொலிப் பாணியில்தான் இன்றுவரை மாற்றமின்றி பயணித்துக்கொண்டிருக்கிறது. ஆனால் அங்கு கடமைபுரிபவர்கள் நினைத்தால் மாற்றங்களை நிச்சயம் கொண்டு வரலாம். ஏனெனில், பிறை எப்.எம் அறிவிப்பாளர்கள் ஒன்றும் சளைத்தவர்களல்ல. அவர்கள் விடாமுயற்சியுடன் புதுமைபடைப்பார்களானால் நிச்சயம் பிறை எப்.எம்மை என்றென்றும் நேயர்கள் மனதில் நிலைத்து நிற்கச் செய்யலாம். தனியார் வானொலிகளை யும் எமது பிராந்திய வானொலி பிறை எப்.எம் விஞ்ச வேண்டும் என்பதற்காகவே இந்த ஆலோசனை.

ஸைனப் கதீஜா

## ரஜினி பிறந்தநாள் கொண்டாடிய நமது ஊடகங்கள்

கடந்த மாதம் 12ம் திகதி சுப்பர் ஸ்டாரின் பிறந்தநாளை தமிழகமெங்குமுள்ள ரஜினியின் விசிலடிச்சான் குஞ்சுகள் பல்வேறு அபிஷேகங்களோடு கொண்டாடி மகிழ்ந்தன. அவர்களது இதய தெய்வம், இருபது வருடங்க ளின் பின்னர் போயஸ் கேட்டைத் திறந்துக்கொண்டு வீட்டுக்கு வெளியே வந்து மைக் பிடித்து நான்கு வார்த்தை இம்முறை பேசவும் செய்தது. ரஜினியின் தரிசனம் கிடைத் ததை தெய்வதரிசனம் கிடைத்தமாதிரி நினைத்து ரசிகர் பட்டாளம் கன்னத்தில் போட்டுக்கொண்டது.

இந்த வெட்கக்கேடான நிகழ்வுகள் தமிழகத்தில்தான் நடக்க முடியும் என்பது ஒருபுறமிருக்க, வீட்டுக்கு வெளியே வந்த ரஜினி பேசிய பேச்சில் முக்கிய விஷயமாக அமைந்தவை இரண்டே இரண்டுதான்.

சிவாஜி 3D நன்றாக வந்திருக்கிறது. போய்பாருங்கள்.

கோச்சடையான் விரைவில் வரும், அற்புதமாக இருக்கிறது போய்ப்பாருங்கள் - என்பதுதான் இந்த இரண்டின் சாராம்சம். முன்னர் டி.வி விளம்பரத்தில் தோன்றி 'எந்திரன் பாருங்கள்' என கொமர்ஷல் செய்தார் என்றால் இப்போது தன் படங்களின் நிரந்தர பிரசார பீரங்கியாகி விட்டார் என்பது புரிகிறது. இதைத் தவிர வேறெந்த தகவலையும் ரசிகர்களுக்கு அவர் முன்வைக்கவில்லை.

இவரது பிறந்தநாளை தமிழக ஒளி ஊடகங்கள் அவரது 'படிப்பினை'யூட்டும் படங்களையும், பாடல்களையும் மாறி மாறி காண்பித்து- கொண்டாடின. கோடிக்கணக்கில் விளம்பர வருமா-னமும் சேர்ந்தது.

நாங்களும் விடுவோமா என்ன! நமது வானொலிகளும் தொலைக் காட்சிகளும் ரஜினி பிறந்தநாளைக் கொண்டாடின. பார்த்துப் பார்த்துப் புளித்துப்போன அதே திரைப் படங்கள், காட்சிகள், பாடல்கள் என ஒளி'.ஒலி பரப்பப்பட்டன. வித்தியாச மாக அவருடைய பேட்டி (கொடுத்திருந்தால்தானே!) அவரைப் பற்றிய ஏனையோர் கருத்துக்கள், பட்டிமன்றம், விமர்சனப் பார்வை என்று எதையும் செய்ய முனையவில்லை.

எங்கேனும் ஒரு கிரமத்துக்குச் சென்று ஒரு விவசாயி, அல்லது தொழிலாளி, கைம்பெண் ஆகியோரின் பிறந்தநாளை கொண்டாடி அந்த மகிழ்ச்சியை நமது டி.விகள் நேயர்களுடன் பகிர்ந்து கொள்ளுமானால், ரஜினி பேர்த்டே அஜீரணம் கலைந்து ஆசுவாசம் உண்டாகும்.

சசி சிவநாதன்
நுகேகொடை

## பழைய பாடல்களை ஒளிபரப்பும் சன்லை.'.ப் தரும் புதிய அனுபவங்கள்

சன் பெக்கேஜ் மூலம் காண்பிக்கப்படும் தொலைக்காட்சி அலை வரிசைகளில் ஒன்றுதான் சன் லை.'.ப். அதாவது, 24 மணித்தியாலமும் பழைய பாடல்களையும் திரைப்படங்களையும் ஒளிபரப்பும் ஒரு வித்தியாசமான செனல் இது. ஓரிரண்டு விளம்பரங்களைத் தவிர, பரீட்சார்த்த ஒளிபரப்பு மாதிரி பாடல்களும் படங்களுமாக போய்க்கொண்டே இருக்கிறது.


இந்த அலைவரிசை வந்த பின்னர்தான் இதுவரை நாம் பார்த்திராத பழந்தமிழ் பாடல் காட்சிகளையும் திரைப்படங்களையும் பார்க்க முடிகிறது. இதற்காக சன்லை.'.ப் ரொம்பவே மெனக்கெடுகிறது. சமீபத்தில் என்.எஸ். கிருஷ்ணன் நடித்ததும் அக்காலத்தில் வெகுவாகப் பேசப்பட்டதுமான 'நல்லதம்பி' படத்தை ஒளிபரப்பினார்கள். அதைப் பார்த்தபோதுதான் என்.எஸ். கிருஷ்ணனிடமிருந்துதான் பல விஷயங்களை எம்.ஜி.ஆர் எடுத்துக்கொண்டு அவற்றை லாவகமாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் வெற்றி பெற்றார் என்பதைப் புரிந்துகொள்ள முடிந்தது. அவரது பிற்காலத் திரைப்படங்கள் நல்லதம்பி சொன்ன கருத்துகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன.

கடந்த மாதம் 05ம் திகதி மாலை எம்.ஜி.ஆர் நடித்த மருதநாட்டு இளவரசி படத்தை ஒளிபரப்பினார்கள். இது எம்.ஜி.ஆரின் ஆரம்பகாலப் படங்களில் ஒன்று. வேட்டித்துண்டும் வெற்றுடம்புமாக ஒரிஜினல் தலைமுடியுடன் வருகிறார் எம்.ஜி.ஆர். அடையாளம் காண்பதே கஷ்டமாக இருக்கிறது. சண்டைக் காட்சிகளில் 'ட்ஷிம்' சத்தம் கிடையாது. பார்ப்பதறகு படு ஜோக்காக இருந்தது. படத்தை இன்றைய நிலைமைகளோடு ஒப்பிட்டு பார்ப்பது தவறு. இதில் நான் கவனித்த முக்கிய விஷயம் என்னவென்றால், மருதநாட்டு இளவரசி படத்தில் திரைக்கதையாகவும், காட்சியமைப்புகளாகவும், திருப்பங்களாகவும் நகர்த்தும் பாணியாகவும் கைகொள்ளப்பட்டிருக்கும் உத்திகள் இன்றைக்கும் பின்பற்றப்பட்டு வருவதுதான்!

தற்போதுதான் இளம் இயக்குநர்கள் மாறுபட்டு சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

- எம்.எம். மோகன்ராஜ்
தெஹிவளை

# மனைவிக்கு செருப்பு வாங்கிய கதை




என் மனைவிக்கு நீண்ட நாட்களாகவே ஒரு ஆசை. அழகான ஒரு சோடி செருப்பு வாங்கித் தரும்படி அடிக்கடி நச்சரித்தாள். செருப்பு வாங்குவது பெரிய விஷயமில்லை. ஆனால் யாழ்ப்பாண டவுனுக்குப்போய் வாங்குவதுதான் பிரச்சினை. அது போர்க்காலம். போக்குவரத்து பிரச்சினை இருந்தது. எனது கிராமத்திலிருந்து யாழ்ப்பாண நகரம் 10 மைல் தொலைவில் இருந்தது. யாழ்நகர் சென்று வருவதானால் சைக்கிளில்தான் சென்று வரவேண்டும் நான் சைக்கிளில் யாழ்நகர் சென்று வந்து விடலாம். மனைவிக்குப் பிடித்த விதத்தில் வாங்கிவர முடியாதே! எனது மனைவி இந்து குண்டாக இருப்பாள். அதனால் அவளை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு செல்வதும் கடினமான காரியமே. ஆனால் என்ன செய்வது? செருப்பு வாங்கித் தரும்படி அவள் நச்சரித்தாள். ஏதோ போனால் போகுது என்ற எண்ணத்துடன் அவளை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போய்வருவோம் என்று துணிந்து விட்டேன். மனைவியை சைக்கிளின் பின் கரியரில் ஏற்றிக்கொண்டு யாழ் நகர் புறப்பட்டேன்.

ஒரு மணித்தியாலத்தின்பின் மிகுந்த களைப்புடன் யாழ் நகர் வந்து சேர்ந்தோம். மனைவி பல செருப்புக் கடைக்குள் ஏறி இறங்கினாள். நான் ஒரு கடையின் முன்னால் அமர்ந்துகொண்டேன். ஒரு மணித்தியாலத்தில் நான் அமர்ந்திருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தாள். 500 ருபா பெறுமதியான ஒரு சோடி செருப்பை வாங்கி வந்தாள். அந்த செருப்புக்களை அணிந்து காட்டினாள். அழகாக நடந்து காட்டினாள். அவள் தனது கால்களில் செருப்புக்களை அணிந்து கொண்டிருக்க அவளை மீண்டும் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு ஊர் திரும்பினேன்.

சிறிது தூரம் வந்து விட்டோம். அந்த செருப்புக்களை அணிந்து கொண்டு சைக்கிள் கரியரில் அமர்ந்திருப்பது கஷ்டமாக இருந்திருக்கவேண்டும். ஒரு கடற்பாலத்தை தாண்டியே எங்கள் கிராமத்துக்குச் செல்லவேண்டும். அந்தப் பாலத்துக்கு அருகில் வருவதற்கு முன் மனைவி, தனது கால்கள் வலிப்பதாகவும் செருப்பைக் கழற்றி ஒரு சொப்பிங் பேக்கில் வைத்து சைக்கிள் கரியரில் வைத்துக்கொள்வோமா என்று கேட்டாள். கவனமா வைத்துக்கொள் என்று சொல்லிவிட்டு சைக்கிளை தொடர்ந்து ஓட்டினேன்.

குருநாதன், சாவகச்சேரி

நாங்கள் பாலத்தைத் தாண்டும்போது மனைவி சொன்னாள் தனது கால்கள் அதிகமாக வலிப்பதாகவும் சற்று நேரம் இறங்கி நின்று விட்டுப்போவோமா என்று கேட்டாள். நான் சைக்கிளை நிறுத்தினேன். அவள் இறங்கிக்கொண்டாள். இறங்கி நின்றவள் செருப்புக்கள் இருந்த சொப்பிங் பேக்கை திறந்து பார்த்தாள். அவளுக்கு அழுகையே வந்து விட்டது. அவள் வாங்கிய அழகிய செருப்புக்களில் ஒன்று எங்கோ விழுந்துவிட்டது.

அவள் கண்ணீர் வடிப்பதைக் கண்டு எனக்கும் கவலையாக இருந்தது. மீண்டும் டவுனுக்கு போய் மேலும் ஒரு சோடிச் செருப்பை வாங்குவதென்றால் காலம் போதாது. இன்னும் சில நிமிடங்களில் ஊரடங்குச் சட்டம் போட்டு விடுவார்கள். அதனால் கையில் எஞ்சி இருக்கும் ஒரு செருப்பை கடலில் வீசி விட்டு சைக்கிளில் வந்து ஏறும்படி கூறினேன். அவள் மிகுந்த கவலையுடன் எஞ்சிய செருப்பு ஒன்றை கடலில் வீசி எறிந்து விட்டு சைக்கிளில் வந்து ஏறினாள்.

நாங்கள் எங்கள் ஊரை நோக்கி பிரயாணம் செய்தோம். மனைவி என்ன பேசுவது என்று தெரியாமல் மௌனமாகவே இருந்தாள். ஒரு மணித்தியாலத்தின்பின் எங்கள் வீடு வந்து சேர்ந்தோம். மனைவி சோகத்துடன் சைக்கிளிலிருந்து இறங்கினாள். கரியரை நோக்கினாள். அவளது கண்கள் அகலத் திறந்தன.

''காணாமற்போன மற்றச் செருப்பு இந்தா இருக்குதே'' என்று அலறினாள். ஆம் காணாமல் போய் விட்டது என்று எண்ணிய மற்றச் செருப்பு சைக்கிளில் பிரேமில் சிக்கிக் கீழே தொங்கிக் கொண்டிருந்தது. நான் ஆத்திரத்தில் அதை இழுத்து எடுத்தேன். மனைவி மௌனமாக பார்த்துக்கொண்டிருந்தாள்.

இதை வைத்துக்கொண்டு என்ன செய்வது? இதையும் வீசி எறிந்து விடுவோம் என்று சொல்லி குப்பை மேட்டில் போட்டு விட்டேன். எங்கள் செருப்பு வாங்கும் படலம் இப்படியாக முடிந்தது.

அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது...

# குப்பைத் தொட்டிக்குள் போன Cell Phone




எனது நண்பர் ஒருவர், வசதியான வாழ்க்கை, திருப்தியான வேலை அன்பான குடும்பம். அவருக்கு இரண்டுமே பெண் பிள்ளைகள்.

மூத்தவளுக்கு 4 வயது. நல்ல சுட்டிகையான பெண். சொன்னால் போதும் எதையும் பட்டென்று பிடித்துக்கொள்வாள். அத்துடன் எல்லோருடனும் சகஜமாக பழகும் சுபாவம். எனவே வீட்டிலும் மொன்டிசூரியிலும் அவள்தான் செல்லப்பிள்ளை. இளையவளுக்கு இப்போதுதான் ஒரு வயதாகிறது.

எனது நண்பர் நல்ல சுறுசுறுப்பானவர். பல வேலைகளை இழுத்துப்போட்டுக்கொண்டு செய்பவர். எல்லோருக்கும் நல்ல பிள்ளையாகவே இருக்கவேண்டும் என்பதே அவர் விருப்பம்.

அவருக்கு பலருடன் பல்வேறு தொழில்முறை தொடர்புகள் இருந்தன. இதனால் அவரது கைத்தொலைப்பேசி அடிக்கடி நாதஸ்வரம் இசைக்கும். எதுவுமே மங்களகரமாக இருக்கவேண்டும் என்பதால் நாதஸ்வர இசையையே அவரது கைத்தொலைப்பேசியின் calle tune ஆக போட்டிருந்தார்.

அலுவலகத்தில் இருந்தால் அடிக்கடி நாதஸ்வரம் ஒலிக்கும். வீட்டில் இருந்தால் நாதஸ்வர இசையை அடுத்து வரும் பாடலும் கேட்கும். நாதஸ்வர இசையை வீடு என்பதால் கொஞ்சம் அதிகமாகவே ஒலிக்கவிடுவார்.

எனது நண்பருக்கு எதுவுமே சாதகமானதாக இருக்கவேண்டும். எதிர்மறையாக எதுவும் தலைதூக்கினால் ரொம்பவும் அலுத்துக்கொள்வார்.

அன்று காலை அவருக்கு வந்த மூன்று தொலைப்பேசி அழைப்புகளும் அவருக்கு பாதகமாகவே இருந்தன. அவருக்கு கொஞ்சம் கோபம் வந்தது. கோபத்தை யார் மீது காட்டுவது? வேறு வழியின்றி கைத்தொலைப்பேசியை எடுத்தார்.

''முதல்ல இந்த செல்போனை தூக்கி வீசனும். அப்போதுதான் மனசுக்கு நிம்மதி,'' என்றார் கொஞ்சம் கடுமையாக.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை.

விடுமுறை என்பதால் நண்பர் கொஞ்சம் அதிகமாகவே தூங்கினார். ஞாயிற்றுக்கிழமை என்றால் பகலுணவு கொஞ்சம் விசேசமாகவே இருக்கும். எனது நண்பர் அசதி நீங்கி கண் விழித்தபோது மணி 11. மனைவி ஊற்றிக்கொடுத்த சூடான டீயை கட்டிலிலேயே வைத்து உறிஞ்சுக் குடித்த பின் கட்டிலில் இருந்து இறங்கியபோது 11.30

இன்னுமொரு நண்பருக்கு அவசர அழைப்பொன்று எடுக்க வேண்டியிருந்தது.

கைத்தொலைப்பேசி எப்போதுமே கட்டிலுக்கு அருகில் இருந்த சின்ன டீபோவின் மேலேயே இருக்கும்.

இப்போது அங்கு அதனைக் காணவில்லை. கட்டிலை நன்கு உதறித் தேடினார். சுற்றும் முற்றும் அலசித் தேடினார். காணோம். இரண்டாவது இன்னிங்ஸ் தேடுதல் நடந்தது. மீண்டும் தோல்வி.

''விடிந்ததும் விடியாததுமா என்ன தேடுகிறீர்கள்?'' என்று கேட்டார் எனது நண்பரின் மனைவி.

''அதாம்பா இந்த போனை நைட்ல கோல் எடுத்துட்டு இங்கதான் வச்சேன். எங்கேன்னு தெரியல. அதைத்தான் தேடுறேன். நீ கண்டியா,''

''நான் பார்க்கவே இல்ல'' என்றார் நண்பரின் மனைவி.

''அப்ப யார்தான் எடுத்தது? வெளியில் இருந்து ஒருவரும் வரல்லியே போனுக்கு கால் முளைச்சு ஓடிப்போயிருச்சோ?''

ஆனால் அவரது நகைச்சுவையை அவருக்கோ அவரது மனைவிக்கோ ரசிக்க முடியவில்லை. ஏனென்றால் நகைச்சுவை என்ற போர்வையில் அவரது ஆதங்கமும் கோபமும்தான் வெளிப்பட்டன.

படுக்கையறையில் மீண்டும் ஒரு தேடுதல். இம்முறை தேடியது நண்பரின் மனைவி. ஒன்றும் நடக்கவில்லை.

திடீரென்று ''ஒரு 'ஐடியா' என்றார் நண்பரின் மனைவி.

''அடுத்த வீட்டு பாபுக்கிட்ட சொல்லி உங்க நம்பரை டயல் பண்ண சொல்லுங்க இது எங்க இருந்தாலும் நாதஸ்வரம் பாடும்'' என்றார் நண்பரின் மனைவி.

யோசனை சரியாகப்பட்டது.

''பாபு இருக்கானோ தெரியலையே'' என்று அவர் கேள்வியெழுப்பிபோதே உள்ளே வந்தாள் அவரது மூத்த மகள். பாபு மாமாவைப் போய் பார்த்துட்டு வா என்று மகளை விரட்டினார் நண்பர்.

''எல்லோருமே வெளியே போறாங்க. நான் அங்க இருந்துதான் வாரேன்,'' என்றார் அவரது மகள்.

''இவ்வளவு நேரம் அங்கத்தான் இருந்தியா? எங்கடா ஆளக் காணோம்னு தேடிட்டு இருந்தேன்'' என்றார் நண்பரின் மனைவி

''ஏம்பா பாபு அங்கிளை தேடுறீங்க'' என்று ஆர்வத்துடன் கேட்டாள் நண்பரின் மகள்.

''அப்பாவோட போனைக் காணோம்மா,'' என்றார் எனது நண்பர்.

''செல்போனா?''

''ஆமாம்மா நீ கண்டியா?''

''அதுவா... போனை தூக்கி வீசனும்னு சொன்னீங்களே. அதனால ஒரு பையில் போட்டு குப்பையில் போட்டுட்டேன். குப்பைக்கார Lady இப்போதாம்பா போறாங்க.''

தூக்கி வாரிப்போட்டது எனது நண்பருக்கும் அவரது மனைவிக்கும்.

சாரத்தின் மேலே ஒரு டீ சேர்ட்டை போட்டுக்கொண்டு வெளியே ஓடினார் நண்பர்.

அந்த கம்பவுண்டை விட்டு அப்போதுதான் வெளியேறிக்கொண்டிருந்தாள் குப்பை சேகரிக்கும் அந்தப் பெண்மணி.

அடுக்கி வைக்கப்பட்ட குப்பையை இறக்கி அலசுவதற்கு அந்த பெண் மறுத்துவிட்டாள்.

தனது கஷ்டத்தை அவளிடம் கூறி அவளை மசியவைத்து பேரம்பேசி 300 ருபாவை அவள் கையில் கொடுத்து குப்பை வண்டியை ஒரு ஓரத்துக்கு எடுத்துச் சென்று ஒவ்வொரு குப்பை பொட்டலத்தையும் கீழே இறக்கி தனது வீட்டு குப்பைப் பையை தேடிப்பிடித்து அதில் இருந்த கைப்பேசியை வெற்றிகரமாக மீட்டெடுப்பதற்கு ஒரு மணித்தியாலம் பிடித்தது.

கைத்தொலைப்பேசியுடன் அவர் வீட்டுக்குள் நுழைந்தபோதுதான் நண்பரின் மனைவிக்கு ஆறுதல் மூச்சு வந்தது.

பயந்துபோயிருந்தாள் மகள்.

''நீங்க தூக்கி வீசனும்னு சொன்னதாலதாம்பா நான் அதை குப்பை பேக்கில் போட்டேன்,'' என்றாள் தயக்கத்துடன்.

உண்மையில் தவறு செய்தது யார்? அப்பாவா, மகளா?- அன்றைக்கு எனது நண்பருக்கும் மனைவிக்கும் இடையே விவாதப் பொருளாக அமைந்த விடயம் இதுதான்!

ராம்ஜி

அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது... அனுபவம் பேசுகிறது...

## என்னை புரட்டிப் போட்ட மனிதர்

# மார்டின் லூதர் கிங்

என் வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட நபர் யார் என்று என்னைக் கேட்டால், நான் அதிகம் சிந்திக்க வேண்டியிருக்காது. ஏனெனில் அவர் மார்டின்லூதர் கிங்காக மட்டுமே இருக்க முடியும்.



மார்டின் லூதர் என்ற அமெரிக்கக் கறுப்பரைப் பற்றி என் பள்ளி நாட்களில் நான் கேள்விப்பட்டிருந்தேன். எனினும் அவரை அறியாதவர்களும் அவரை அறியச் செய்தது அவரது மரணம்தான். 1968ம் ஆண்டு ஏப்ரல் நான்காம் திகதி நிகழ்ந்த அப்படுகொலைச் சம்பவம். இதன் பின்னரேயே நான் மார்டின் லூதர் கிங் என்ற அமெரிக்க அகிம்சைப் போராளியைப் பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்.

அமெரிக்கா என்றதும் முக்கியமான சில பிரமுகர்கள் ஞாபகத்துக்கு வருவார்கள். ஜோர்ஜ் வொஷிங்டன், ஆபிரகாம் லிங்கன், ஹென்றி தோரோ, மார்க் ட்வைன், மார்ட்டின் லூதர் கிங், ஜோன் கென்னடி, ஒபாமா இப்படிச் சிலர். 1988ம் ஆண்டு அமெரிக்க புலமைப்பரிசில் ஒன்றைப் பெற்று அமெரிக்காவின் பல பாகங்களுக்கு செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அமெரிக்க சிறுபான்மையினரும் அமெரிக்க அரசியல் சாசனமும் என்பதே நான் பெற்றிருந்த புலமைப் பரிசில் சுற்றுலாவாகும். அப்பயணத்தின்போது மார்டின் லூதர் கிங்கை முழுமையாக தரிசிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அப்பயணம் முடிந்து நாடு திரும்பியபோது கிங் என்னை முழுமையாக ஆக்கிரமித்திருந்தார்.

மார்டின் லூதர் கிங் ஒரு அமெரிக்க கறுப்பினத்தவர், கிறிஸ்தவ மதபோதகர். அவர் வாழ்ந்த காலம், கறுப்பு-வெள்ளை பேதம் அமெரிக்காவின் சில மாநிலங்களில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தது. பஸ்சில் கறுப்பர் வெள்ளையருடன் ஒரே இருக்கையில் அமர முடியாது. வெள்ளையர் சாப்பிடும் ஹோட்டல்களில் கறுப்பருக்கு அனுமதி கிடையாது. இதை மாற்றி, சகல அமெரிக்கப் பிரஜைகளும் சரிசமமானவர்களே என்பதை நடைமுறைப்படுத்துவதற்காக பாடுபட்டவரே மாட்டின் லூதர் கிங். இந்த இலக்கை நோக்கி அவர் வன்முறையற்ற போராட்டமொன்றை நடத்தினார். எனினும் முழு வெற்றியை தரிசிக்கு முன்னரேயே அவர் இனவெறியனின் துப்பாக்கிக்கு பலியானார்.

ஆபிரகாம் லிங்கன் 1864ம் ஆண்டு அடிமைத்தனத்தை அறுக்கும் அந்த 13ஆவது சட்டத் திருத்தத்தை ஏற்படுத்தினார். எனினும் நூறு வருடங்கள் கடந்த பின்னரேயே அமெரிக்காவில் சிவில் உரிமைகள் சட்டம் நடைமுறைக்கு வந்தது. கறுப்பு-வெள்ளை பாகுபாடு முற்றிலுமாக ஒழித்துக் கட்டப்பட்டது. இதற்கு மார்டின் லூதர் முன்னோடியாக, அதன் ஆத்மாவாக செயல்பட்டார்.



வீ. புத்திரசிகாமணி
(முன்னாள் நீதி, சட்ட மறுசீரமைப் பு பிரதி அமைச்சர்)

அப்துல் கலாம் இளைஞர்களை கனவு காணச் சொன்னார். கிங்கோ, கனவு-களை அவரே கண்டார். அக்கனவுகளை நிறைவேற்ற மக்களுடன் இணைந்து அவர் போராடினார். கிறிஸ்தவம், சாத்விகம், கொள்கை உறுதி, அஞ்சா நெஞ்சம், வழியில் தெளிவு என்பன அவரது ஆயுதங்களாக இருந்ததால் கறுப்பர்கள் வெள்ளமென அவர் பின்னால் அணி வகுத்தனர். கறுப்பினத்தவர் மத்தியில் அவர் எழுச்சியை ஏற்படுத்தினார். எதிலும் ஆர்வமின்றி சுருண்டு கிடந்த கறுப்பர்கள் Black power என்ற மையப் புள்ளியில் ஒன்று திரண்டனர்.

கிங் புகழ் பெற்ற உரைகளை நிகழ்த்தி இருக்கிறார். I have a dream என்பது (நான் ஒரு கனவு கண்டேன்) மிகப் பிரபல்யமான உரை. அதில் அவர், ''நான் மரணத்தைக் கண்டு அச்சப்படவில்லை. ஏனெனில் மலை உச்சியில் நான் இருக்கிறேன். கீழே வாக்களிக்கப்பட்ட அந்த ராச்சியம் உள்ளது. அங்கே நீங்கள் (கறுப்பர்கள்) செல்லும்போது நான் உங்களுடன் வராமல் போகலாம்..." என்று குறிப்பிடுகிறார். இன்னொரு உரை How long not long (எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்? அதிக காலமல்ல) என்பதாகும்.

அமெரிக்க மாநிலங்கள் அனைத்திலும் நிறபேதம் ஒழித்துக் கட்டப்பட்ட பின்னர் இசை, விளையாட்டு, நடிப்பு, உயர் கல்வி, உயர் பதவி, அரசியல் என சகல மட்டங்களிலும் கறுப்பினத்தவர்கள் முன்னணி இடங்களைப் பிடித்து, ஐக்கிய அமெரிக்காவுக்கு பலம் சேர்ந்தனர், என்பது குறிப்பிடத்தக்கது.

மார்டின் லூதர் கிங் ஆரம்பித்து வைத்த இன சமத்துவத்துக்கான சிவில் உரிமை இயக்கத்தின் இறுதி வெற்றியாக, ஒபாமா அந்நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதைக் குறிப்பிடலாம். மலையகத் தமிழர்களை தனி தேசிய இனமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்ற எனது கோரிக்கையில் இன்னும் நான் அழுத்தமாக இருப்பதற்கு அவர் காரணமாக இருக்கிறார். நான் 13ம் திருத்தச் சட்டத்தை அமெரிக்காவின் 13வது திருத்தச் சட்டத்துடன் அடிக்கடி ஒப்பிட்டுப் பேசுவேன். எனது உரைகளில் மாட்டின் லூதர் பற்றி குறிப்பிடத்தவறுவதில்லை. ஆபிரிக்காவில் இருந்து கறுப்பர்கள் அழைத்து வரப்பட்ட மாதிரியே இந்தியத் தொழிலாளர்க-ளும் இங்கு அழைத்து வரப்பட்டனர். ஆனால் இன்றைக்கும் இத்தொழிலாளர்கள் பரம்பரை தினக்கூலிகளாகத் தான் இருக்கிறார்கள் என்பது வேதனையானது.

நான் விரும்பும் இன்னொரு கறுப்பினத் தலைவர், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஜெக்கி ஜெக்சன். எதிர்க்கட்சி பிரமுகராக இருந்தபோதிலும் பராக் ஒபாமா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டபோது ஜெக்சன் அதைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் உகுத்ததைக் கண்டு நான் மெய்சிலிர்த்துப் போனேன். நாம் என்றைக்கு இந்த இடத்துக்கு வரப்போகிறோம்?

## 2013ஆம் ஆண்டு பலாபலன்கள்

ஜனவரி 2012 தொடக்கம் டிசெம்பர் 2012 வரை

சோதிடமாமணி நவா

**2013 ஆம் ஆண்டு அபர பக்கத்து பஞ்சமி திதி, மகம் நட்சத்திரம் கன்னி லக்கினம் சிங்க இராசியில் பிறந்துள்ளது. இதன்படி பனிரெண்டு இராசியினருக்கும் எத்தகைய பலாபலன்கள் ஏற்படும் என்பதை அவதானிப்போம்.**

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இவ் வருடம் நன்மையும் தீமையும் கலந்த வருடமாக அமையும். ஜூன் மாதம் வரை நற்பலன்களையும், அதன் பின் மார்கழி வரை ஓரளவு பலன்கள் குன்றியும் காணப்படுகின்றது. செய்தொழில்களில் முன்னெச்சரிக்கை தேவை. பணவிடயங்கள் சீராக அமைந்தாலும் கடன்படும் நிலை உண்டாகும். குடும்பத்தில் சுப காரியங்களை ஜூன் மாதத்திற்குள் செய்வது நன்மை தரும். உத்தியோகஸ்தர்கள் மாணவர்கள், போராட்டத்தின் மத்தியில் முன்னேற்றம் காண்பர். முதலீட்டாளர்கள், முதலீடுகளில் அதிக அக்கறையுடன் செயற்பட்டால் கூடிய இலாபத்தினை பெறமுடியும். மேட இராசியினர் திட்டமிட்டுக் கருமமாற்றுதல் நன்மை தரும்.

### இடபம்

கார்த்திகை பின்முக்கால், ரோகினி, மிருகசீரிடத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு ஜூன் மாதம் வரை சுமாரான பலனையும் அதன்பின் மார்கழி வரை சிறந்த நற்பலன்களையும் தரக்கூடிய வருடமிது. செய்தொழில்கள் யாவும் சீராக அமைந்தாலும் அடிக்கடி மனக்குழப்பங்களை ஏற்படுத்தும். பணக்கஷ்டங்கள் தலைதூக்கும். புதிய முயற்சிகள் யாவும் ஜூன் மாதத்தின் பின்பு தொடங்குவது நன்மைதரும். குடும்பத்தில் தடைப்பட்டிருந்த பல கருமங்கள் நிறைவேறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் கடின உழைப்பினால் நன்மையடைவர். முதலீட்டாளர்கள், மனச்சோர்வின்றி செயலாற்றிட வாய்ப்புண்டாகும். இடப இராசியினருக்கு பல நன்மைகள் கிடைத்திட வாய்ப்பேற்படும்.

### மிதுனம்

மிருகசீரிடத்து பின்னரை, திருவாதிரை புனர் பூசத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சுமாரான பலன்களை தரும் வருடம். செய்தொழில்கள் ஆரம்பத்தில் நன்மையைத் தந்தாலும் ஜூன் மாதத்தின் பின்பு மனக்கஷ்டங்களைத் தரும். பணவருவாய் ஓரளவு திருப்தியாக அமையும். புதிய முயற்சிக-ளில் கவனம் தேவை. குடும்பத்தில் எதிர்பார்த்த பல விடயங்கள் தடைகளின் பின்பு நிறைவேறும். உத்தியோகஸ்தர்கள் மாணவர்கள் முன்னெச்சரிக் கையுடன் நடந்துகொள்வது நல்லது. முதலீட்டா ளர்கள் கூடிய முதலீடுகளை தவிர்த்து அளவு டன் வைத்துக் கொண்டு கூடிய முயற்சியுடன் செயற்படுவது நல்லது. மிதுன இராசியினருக்கு சிறிது மனக்குழப்பங்கள் தந்து மறையும்.

### கடகம்

புனர்பூசத்து நாலாங்கால், பூசம் ஆயிலியம் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சுமாரான பலன்களைத் தரக்கூடிய ஆண்டாக அமையும். ஜூன் மாதம் வரை நற்பலன்களைக் காட்டினாலும், அதன் பின் மார்கழி வரை, இடையிடை தொல்லைகள் தலை காட்டிடும். செய்தொழில்களில் மிகுந்த கவனம் தேவை. பணவரவுகள் மந்தமாக அமையும். குடும்பத்தில் அனாவசிய செலவுகளும், வீண் பகைமைகளும் தோன்றி மறையும். உத்தியோகஸ்த்தர்கள், மாணவர்கள் மிகவும் உற்சாகத்துடன் செயற் பட்டு கருமங்களில் வெற்றி காண்பர். முதலீட்டா ளர்கள் பாரிய முதலீடுகளால் சிறிது மனங்கலங்க நேரிடும். அவதானமாக செயற்படுவது நல்லது. கர்க்கடக இராசியினருக்கு சிறிது கஷ்ட நிலையை வருடப் பிற்பகுதியில் தோற்றுவிக்கும். அவதானத்துடன் நடந்துகொள்வது நல்லது.

### சிங்கம்

மகம், பூரம், உத்தரத்து முதற்கால் நட்சத்தி ரங்களில் பிறந்தவர்களுக்கும் வருட முற்பகுதி சுமாரான பலனையும், பிற்பகுதி, சிறந்த நன்மைகளையும் தரும். செய்தொழில்களில் முன்னேற்றமும், பணவரவுகளும் கிடைக்கும் கொடுக்கல் வாங்கல்களில் அவதானத்துடன் நடந்துகொள்வது நல்லது. குடும்பத்தில் இருந்து வந்த தொல்லைகள் மறந்து நன்மைகள் தோன்றும். தடைப்பட்டிருந்த சுபகாரியங்கள் நிறைவேறும். உத்தியோகஸ்தர்கள் மாணவர்கள், தமது கருமங்களில் மனநிறைவு பெறுவர். பதவி உயர்வுகளுக்கும் இடமுண்டாகும். முதலீட்டாளர்கள் கடின உழைப்பினால் முன்னேற்றம் அடைவர். சிங்க இராசியினருக்கு இருந்துவந்த கஷ்டங்கள் தொல்லைகள் யாவும் மறைந்து நன்னிலை உருவாகக்கூடிய வருடமாக அமையும்.

### கன்னி

உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இந்த வருடம் மிகவும் அவதானமாக நடந்து கொள்வது நன்மைதரும். செய்தொழில்கள் சீராக அமையாது மனக் கவலை தரும். இடையிடை பணக் கஷ்டங்க ளினால் கடன்பட நேரிடும். வருடமுற்பகுதி வரை சில நன்மைகளைக் காட்டினாலும் ஜூன் மாதத்தின் பின் கஷ்டங்கள் தோன்றி மறையும். குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு மனக் கஷ்டங்களை உருவாக்கும். உத்தியோகஸ்த் தர்கள், மாணவர்கள், கருமங்களில் ஓரளவு முன்னேற்றம் ஏற்படும். பதவி உயர்வுகளில் சிலருக்கு தடையுண்டாகும். முதலீட்டாளர்கள் எதிலும், விழிப்புடன் நடந்து கொள்ளாவிடில் இழப்புக் களை சந்திக்க நேரிடும். கன்னி இராசியினருக்கு ஏழரை சனி கடைக்கூறு நடப்பதும் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டிய வருடமிது.

### துலாம்

சித்திரையில் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சோதனை மிகுந்த ஆண்டாக இவ்வாண்டு அமையும். செய்தொழில்கள் சீராக அமையாது. பணச் செலவையும், இழப்பையும் தரும். எதையும் திட்டமிட்டு செய்யும் நிலையால் ஓரளவு நன்மையடைவர். குடும்பத் திலும் தேகசுகத்திலும் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது. பதவி இழப்புகள். இடமாற்றங்களை சிலர் எதிர்கொள்ள நேரிடும். முதலீட்டாளர்கள் மனக் குழப்பங்களுக்கு ஆளாகுவதுடன், பங்காளர்களுடன் பகைத்துக் கொள்ளவும் நேரிடும். துலா இராசியினருக்கு ஏழரைச்சனி, நடுக்கூறு, ஜென்ம சனிக்காலம் ஆதலால், மிகுந்த அவதானத்துடன் இவ்வருடம் நடந்து கொள்வது நல்லது.

### விருச்சிகம்

விசாகத்து நாலாங்கால். அனுஷம், கேட்டை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மனக் கஷ்டங்கள் நீங்கி நன்மைகளைக் கொடுத்திடும் வருடமாக அமையும். செய்தொழில்களில் இருந்து வந்த கஷ்ட நிலைமை மறையும். செய்தொழில்களில் இருந்து வந்த கஷ்ட நிலைகள் மறையும். கொடுக்கல், வாங்கல் சீராக நடைபெறும். பணவரவுகள் ஓரளவு திருப்தி தரும். குடும்பத்தில் எதிர்பார்த்த விடயங்கள் நடந்தேறும். சுபகாரிய நன்மைகள் இடம்பெறும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தக் கூடிய நிலை தோன்றும். பதவி உயர்வுகள் சிலருக்கு கிடைத்திடும். முதலீட்டாளர்கள் முதலீடுகளால் மனமகிழ்ச்சி அடைவதுடன் ஆதாயமடைவர். விருட்சிக இராசியினருக்கு வீண் தொல்லைக-ளைக் கொடுக்காது. விடிவு தரும் வருடமாக இவ்வருடம் அமையும்.

### தனுசு

மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இவ்வாண்டு ஜூன் மாதம் தொடக்கம் சிறந்த நன்மைகளைக் கொடுக்கும். அதுவரை சுமாரான பலன்கள் காட்டினாலும் தீமை செய்யாது. செய்தொழில்க ளில் சிறிது மந்த நிலையும், பணக்கஷ்டமும், வருட முற்பகுதியில் காணப்படும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் இல்லாவிட்டால் இழப்புகளுக்கு இடமுண்டாகும். குடும்பத்தில் மனமகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உறவினர்களின் உதவிகளும் கிடைக்கும்.

(31ஆம் பக்கம் பார்க்க)

## வானவில் மருத்துவம்

பதில் தருபவர் :
**எஸ். எப். எல். அக்பர்,** *MBBS (Cey) MS (Cey)*
*MRCOG (UK) மகற்பேற்று மருத்துவம், பெண் நோய் மருத்துவம்*

# பெண் தாய்மை அடைவதற்கான சரியான காலம் எது?

**ஒரு பெண் தாய்மை அடைவதற்கு பொருத்தமான காலம் எது?**

**- எஸ். என். ராஜம், ஹேவாஹெட்ட**

ஒரு பெண் பூப்படைந்த பின்னர் அவரது மாதவிலக்கு முற்றுப்பெறும் காலம் வரையிலான காலப்பகுதி தாய்மை அடைவதற்கு வாய்ப்பான காலப்பகுதியாகும். இக்காலப் பகுதியில் அவள் கருவளம் கொண்டவளாக இருப்பாள். ஆனால் பூப்பெய்தியதும் உடனடியாக மாதவிலக்கு ஒழுங்கு முறையில் செயல்பட ஆரம்பிக்காது. பெண் கரு முட்டைகளை உற்பத்தி செய்யும் சூலகங்கள் ஒழுங்காக செயல்படுவதற்கு இரண்டு மூன்று ஆண்டுகள் பிடிக்கும். அதேபோல மாதவிலக்கு முற்றுப்பெறக் கூடிய 47-50 வயது காலப்பகுதியிலும் மாதவிலக்கு ஒழுங்காக அமையாது. அதாவது பூப்பெய்திய பின்னர் சில வருடங்களையும் மாதவிலக்கு முற்றுப் பெறுவதற்கு முன்னரான காலப் பகுதியையும் தவிர்த்து விட்டுப் பார்த்தால் மிகுதியான காலப்பகுதியை தாய்மை அடைவதற்கான காலம் எனக் கொள்ளலாம். இன்னும் சிறப்பாகச் சொல்வதானால் 18 வயது முதல் 24 வயது வரையிலான காலப்பகுதி தாய்மை அடைவதற்கான மிக வாய்ப்பான காலமாகும்.

விவசாய, பண்ணைப் பொருளாதார யுகத்தில் வாழ்ந்த நமது முன்னோர்களுக்கு தமது குடும்பத் தொழில், வருவாய் நிமித்தம் அதிக பிள்ளைகள் பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. தாய் சேய் மரண வீதமும் அக்காலத்தில் அதிகம். இதுவும் அதிக எண்ணிக்கையில் பிள்ளைனகள் பெற்றுக்கொள்வதற்கான காரணியாக இருநதது. குறைந்த வயதில் பெண்கள் திருமணம் செய்து கொடுப்பதற்கு, தாய்மை அடைவதற்கான சிறந்த பருவத்தை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எமது முன்னோரின் பொருளாதார சிந்தனை காரணமாக இருந்தது.

ஆனால் இன்று நிலை தலைகீழாக மாறிவிட்டது. சீதனம், வேலைவாய்ப்பு, குடும்பச்சுமை, பொருளாதாரக் கஷ்டம் போன்ற பல காரணங்களால் பெண்களின் திருமண வயது 28-35 என்பதாகப் போய்விட்டது. ஆண்களும் இதே காரணங்களினால் 30 வயதுக்கு பின்னரே திருமணம் செய்துகொள்ளும் ஒரு பொதுவான நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைய அவசர உலகில், ஒரு பெண் தாய்மைப் பேற்றை அடைவதற்குத் தன்னைத் தயாராக்கிக் கொள்வதற்கு கால அவகாசம் தேவை என்பதாலும், திருமணத்துக்கு முற்பட்ட பருவத்தை சுதந்திரமாக இஷ்டபடி அனுபவிக்க வேண்டும் என்ற வேட்கை பெண்களிடம் ஏற்பட்டு இருப்பதாலும் இள வயதில் திருமணம் செய்வதைப் பெண்கள் தவிர்த்து வருகிறார்கள்.

தாயின் காலடியே சொர்க்கம் எனத் திருக்குர்ஆன் மறை நூல் குறிப்பிடுகிறது. எல்லா மதங்களுமே தாய்மைக்கு பெரும் கௌரவம் அளிக்கின்றன. பிள்ளையை வயிற்றில் சுமக்கும் பெருந்தொல்லை தமக்கில்லை என ஆண் நினைக்கலாம். ஆனால் எந்தப் பெண்ணுமே. கருவைச் சுமப்பதை தொல்லையாகவே கருதுவதில்லை.

**எனது மனைவியின் கழுத்தில் சில வருடங்களாக தைரோயிட் கட்டி காணப்பட்டது. வைத்தியசாலையில் முதலில் மருந்து கொடுத்து பின்னர் அறுவை சிகிச்சை செய்யவேண்டும் எனக்கூறி அறுவை சிகிச்சை நடைபெற்றது. மூன்று நாட்களில் வெளியேற வேண்டிய மனைவி கடும் கழுத்து வருத்தம் ஏற்பட்டதால் மேலும் தங்க வேண்டியதாயிற்று. இப்போது மாதம் ஒருமுறை மருந்து தருகிறார்கள். கடந்த ஆறு ஆண்டுகளாக மாத்திரை பாவித்து வருகிறார். மாதத்துக்கு 750 வில்லைகள் எடுக்கவேண்டும். கூட்டிப்பார்த்தால் இதுவரை 54 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வில்லைகளை விழுங்கியும் குணம் இல்லை. மருந்து பாவிக்காவிட்டால் முழு உடம்பிலும் ஒரு வகை நடுக்கம் ஏற்படுகிறது. கை, கால், விரல், முகம் மரத்துப்போகும். அதிக வியர்வை ஏற்படும். இது தொடர்பாக விவரம் அறிய விரும்புகிறேன்.**

**- கே.டி.வி, கண்டி**

உங்களுக்கு தைரோயிட் கட்டி அறுவை சிகிச்சை நடந்தபோது தொழில்நுட்பரீதியான சிரமம் எதிர் நோக்கப்பட்டிருக்கவேண்டும். அதனால்தான் மூன்று நாட்களில் வீடு திரும்பவேண்டிய உங்கள் மனைவி மேலும் சிலநாட்கள் தங்க வேண்டியிருந்திருக்கிறது. இவ்வாறான சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் அறுவை மருத்துவத்தின்போது எப்போதாவது ஒரு முறை நிகழ்வதுண்டு. ஆகவே உங்கள் மனைவி வாழ்நாள் முழுவதும் இம்மாத்திரைகளை எடுத்து வரவேண்டும். தைரொக்சின் எடுக்கப்படும்போது அளவு அதிமானாலும் அது வியர்வை மற்றும் உடல் நடுக்கம் போன்ற விளைவுகள் ஏற்படலாம்.

ஆகவே மருந்துவம் சரியில்லை என்று கருதி கண்ட கண்ட வைத்தியர்களை நாடவும் வேண்டாம். அவர் சொல்கிறார், இவர் சொல்கிறார் என்பதற்காக கண்ட வைத்தியங்களை செய்து பார்க்கவேண்டாம். முதலில் வைத்தியம் சரி வரவில்லையே என்ற பாதகமான எண்ணங்களை விட்டுவிடுங்கள். யதார்த்தத்துக்கு முகம் கொடுங்கள். மீண்டும் சத்திரச்சிகிச்சை நிபுணரிடம் சென்று உங்கள் பிரச்சினையை எடுத்துச் சொல்லி தைரோய்ட் எனப்படும கேடய சுரப்பியில் என்ன பிரச்சினை, ஏன் ஒழுங்காக தொழில்படவில்லை என்பதை கேட்டுத் தெரிந்துக் கொள்ளுங்கள். மனைவியின் பிரச்சினைகளை அவரிடம் எடுத்துச்சொல்லி மருந்துகளை குறைக்க வேண்டுமா என்பதையும் ஏனைய விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். சத்திரசிகிச்சை நடைபெற்ற அதே நிலையத்துக்கு 3 அல்லது 4 மாதத்துக்கு ஒரு தடவை தைரொய்ட் சுரப்பி செயல்பாடு பற்றி இரத்தப் பரிசோதனை செய்து கிடைக்கும் ரிப்போட்டை எடுத்துச் சென்று காட்டுவது சிறந்தது. தைரோய்ட் சுரப்பியின் தொழில்பாட்டை இவ்வாறு தொடர்ந்து கண்காணித்து வருவது நல்லது. இதுபற்றியும் சத்திரசிகிச்சை வைத்தியரிடம் நீங்கள் சொல்லி அபிப்பிராயம் கேட்கலாம்

*கர்ப்பம் தொடர்பான நோய்கள், வருத்தங்கள், பெண் நோய்கள் தொடர்பான உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்*
**எஸ். எப். எல். அக்பர்**
*பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். உங்கள் கேள்விகளை தெளிவாகவும் சுருக்கமாகவும் நெடுநாள் நோயானால் ஏற்கனவே எடுத்துக் கொண்ட சிகிச்சைகளின் போட்டோ பிரதிகளையும் இணைத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். வயதை குறிப்பிட மறக்க வேண்டாம். பெயர் குறிப்பிட விரும்பாதவர்கள் அதை தனிக் கடிதத்தில் தெரிவிக்கலாம். எனினும் பெயர் முகவரி குறிப்பிட மறக்க வேண்டாம். . இது எமது தேவைக்காக.*

வானவில் மருத்துவம்,
த.பெ. எண். 1218
கொழும்பு.
e-mail: vannavaanavil@gmail.com




**அவன்:** புது வீடு கட்டி இன்னும் ஏன் குடி போகலை?

**இவன்:** ஆடி போகக் கூடாது.

**அவன்:** உங்களை யாரு ஆடிட்டு போக சொன்னது? ஆடாமல் போங்களேன்!

**- வை. ஸ்ரீகாந்த், மத்துகமை**

## 'வானவில்' குறுக்கெழுத்துப் போட்டி 26



### இடமிருந்து வலம்

1. மன்னன் (8)
2. திசை (3)
6. நடராஜன் ஆடும் இடம் (3)
7. சிலர் அவுஸ்திரேலியாவில் தேடுகிறார்கள் (5)
10. எருமையில் வருபவன்(3)
12. அடித்தால் சத்தம் வரும் (3)
13. 100000 (4)
14. மாத இறுதியில் கிடைக்கும் (5)
15. பணம் இதில் இருக்கும் (3)
16. நீண்ட பாறையாக இருக்கும் (4)
17. வேண்டா வெறுப்பு (4)
18. அப்பிள் கீழே விழ இதுதான் காரணம் (6)
20. பெண்கள் கைகளில் அணிவார்கள் (4)
21. கீர்த்தி (3)
23. நூறு (3)
24. சொர்க்கம் (4)

### மேலிருந்து கீழ்

1. உண்மை (5)
2. துக்கம் (3)
3. வீண் சண்டை (3)
4. செயல்முறை (4)
5. பயிற்றப்பட்ட யானை (3)
7. தங்கத்தை இது போடுவார்கள் (3)
8. குளிரைத் தாங்கும் (4)
9. மன்னர் தலையில் சூடுவார் (4)
11. பூ (3)
12. சுவைகளில் ஒன்று (4)
15. ஏமாற்று வார்த்தைகள் (4)
16. மலை (5)
18. இளஞ்சிரிப்பு (4)
19. பலத்த காற்று (3)
22. விறகு எரிந்தால்...(2)
23. கழித்தல் அடையாளம் (2)

*சரியான விடைகளை எழுதி 25. 01. 2013க்கு முன்*

குறுக்கெழுத்துப் போட்டி - 26
வண்ண வானவில்
த.பெ. இலக்கம் 1218
கொழும்பு

*என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடை எழுதுபவர்களில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர், முகவரி பிரசுரமாகும்.*

**குறுக்கெழுத்துப் போட்டி இல 25க்கான விடைகளும் பரிசு பெற்றவர்கள் விபரங்களும் 22ஆம் பக்கத்தில்....**




**பெண்:** லவ் பண்றது தெரிஞ்சா எங்க வீட்டுல சூடு வைப்பாங்க..

**ஆண்:** இப்படியெல்லாம் செய்வாங்களா?

**பெண்:** பாருங்க ஏற்கனவே ஐந்து சூடு வாங்கிட்டேன்!

**- நந்தினி, கெக்கிராவை**



# புலம்பெயர் நாடுகளில் குடும்ப உறவுகள் படும்பாடு!

லண்டனில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி முடிந்து வெளியில் வந்தபோது எனக்கொரு தொலைபேசி அழைப்பு வந்தது.

''அண்ணா! உங்கள் நிகழ்ச்சி என்னைப் போன்றவர்களைப் பற்றியது. நான் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேச முடியாமல் போனதற்கான காரணம் எனது கவலைகளின் காரணமாக அழுது விடுவேனோ என்ற அச்சமே! உண்மையில் குடும்பங்கள் தொடர்பான அதன் அர்த்தப்பாடுகள் பற்றிய நிகழ்ச்சிகளை நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டும். அப்பொழுதாவது எமது தமிழ் சமூகத்துக்கு விளங்குமா என்ற ஏக்கமே எனது நெஞ்சில் இருக்கிறது. எனக்கு இரண்டு பிள்ளைகள்; கணவன் என்னை விட்டுப் போய்விட்டார். நான் இரண்டு பிள்ளைகளோடும் பெண்கள் நலன்புரி நிலையத்தில் இருக்கிறேன். ஏதோ சுவிற்சர்லாந்தில் இப்படி வசதி இருக்கப்போய்ச் சரி. இல்லாவிட்டால் நானும் பிள்ளைகளும் எமது அடுக்குமாடி வீட்டிலிருந்து குதித்து செத்திருப்போம்,'' என்று சொல்லி முடித்தார் அப்பெண்.

''உங்களுக்கு என்ன பிரச்சினை?'' என்று கேட்டேன்.

''கணவன் சுவிஸில் வேலை பார்த்துக்கொண்டிருக்கும் போது திருமணம் பேசப்பட்டது. நான் வவுனியாவில் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவள். எனக்கு மூன்று சகோதரிமார். அப்பா விவசாயி... சீதனமில்லாமல் என்னைக் கேட்டார்கள். அப்படியே கட்டி வைத்து விட்டார். ஆனால்...'' அழத்தொடங்கி விட்டாள் அந்தப் பெண்.


''சுவிற்சர்லாந்து வந்து இரண்டு பிள்ளைகள் பிறக்கும் வரை என்னோடு நன்றாக இருந்தவர், பின்னர் ஒரு சுவீஸ் பெண்ணோடு தொடர்பு உண்டாகி எனக்கு அடி உதை என்று ஆரம்பித்து விட்டார். தினமும் வீட்டுக்கு நேரம் சென்று வருவார். ஆரம்பத்தில் கேட்டபோது அடித்தார். என்னை அடிக்கத் தொடங்கியவர் பிள்ளைகளையும் விளாசினார். என்னைப் பைத்தியக்காரியென்று சொல்லிச் சொல்லி ஏசுவார். உண்மையிலேயே எனக்கு பைத்தியம்தானா என்று யோசித்து யோசித்தே என் தலைக்குள் ஏதோ செய்ய ஆரம்பித்தது. உண்மையிலேயே நான் பைத்தியக்காரி ஆகிவிட்டேன் அண்ணா!''

எமது கிராமங்களில் இருந்து தினமும் ஐக்கிய இராச்சிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான விமானங்களில் தமிழ்ப் பெண்கள் திருமணத்திற்காகப் போகிறார்கள். அவர்கள் போய் இறங்கியவுடன் முதலில் ஒரு கலாசார அதிர்ச்சிக்கு முகம் கொடுக்கிறார்கள். அது படித்த படிக்காத பெண்கள், ஆண்கள் எல்லோருக்கும் ஏற்படுகிறது.

புலம் பெயர் நாடுகளில் உள்ள ஆணாதிக்க மனோபாவம் மற்றும் கலாசார ஒவ்வாமை, மொழி அறியாமை இவற்றினால் அதிகம் துவண்டு போவது பெண்கள் தான்.

எல்லாம் சரி, அது அப்படித்தான் இருக்கும் என்ற மனோபாவத்துக்குள் எமது பெண்களை கொண்டு செல்லவும் தைரியப்படுத்தவும் முடியாது.

எனது நண்பன் உளவியல் சார்ந்த படிப்பை மேற்கொண்டிருப்பவன். ''ஏன் வெள்ளைக்காரப் பெண்கள் ஆண்களுடன் (லிவ்விஸ் டு கெதர்) சேர்ந்து வாழ்வது போல எமது பெண்களும் ஆண்களும் சேர்ந்து வாழ்ந்து தைரியமாக இருக்கலாம் தானே! பிரிவது என்றால் தைரியமாக பிரிவது பின்னர் உறுதியாக வாழ்வது...'' என்று யோசனை சொன்னான்.



இதில் ஒரு பாரிய சிக்கல் இருக்கிறது. எமது தேசத்தின் பாரம்பரியம், பண்பாடு எம்மில் ஒட்டிக்கொண்டு எமது உயிரோடு எமது அணுக்களோடு இணைந்திருப்பவை. அவற்றை லேசாகச் சொல்லவதிலும் எழுதுவதிலும் எனக்கு உடன்பாடில்லை. அதேசமயம் எமது கலாசாரப் பின்னணி மற்றும் வாழ்வியல் அமைப்புகள் எமது பெண்களை இன்னும் தைரியசாலிகளாக ஆக்கவில்லை என்பதும் உண்மையே. அதற்கு பெண்கள் இயக்கங்கள் கிராமம் கிராமாக வேலைசெய்ய வேண்டும். பெண்கள் அமைப்புகள் தொடர்பான வேலைத்திட்டங்கள் போதாது.

புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள பெண்ணியவாதிகள் தமிழ்ப் பெண்கள் மத்தியில் வேலை செய்யவேண்டும். பொதுவாக பெண்ணியவாதிகள் என்றால் ஆண்களுக்குச் சமமாக உரிமை கோருபவர்கள் அத்தோடு சிகரெட் புகைப்பவர்கள் அல்லது மது அருந்துபவர்கள் என்ற மனோநிலை மட்டும் புலம்பெயர்தமிழ் பெண்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகிறது. அதனை அகற்றி பெண்கள் அமைப்புகள் வேலை செய்ய வேண்டிய பாரிய தேவை இருக்கிறது.

இந்தக் குடும்பப் பிளவுகள் சாதாரண குடும்பங்களிடையே மட்டுமல்ல; படித்த அல்லது பிரபல்யமான எழுத்தாளர்கள் சமூகத்திலும் அஸ்தஸ்துள்ளவர்கள் மத்தியிலும் எழுவது தான் பிரச்சினையே!

ஏன் அவர்களால் கூட இதனைச் சரி செய்ய முடியாமல் இருக்கிறது? ஒரே சிந்தனை ஓட்டமுள்ளவர்களாலும் இந்தச் சிக்கலில் இருந்து மீள முடியவில்லை. அண்மையில். எனது நண்பர்கள் இருவர், நல்ல அறிவாளிகள். எழுத்தாளர்களும் கூட. ஒன்றாக வாழ முடியாமல் பிரிந்து போய்விட்டார்கள். கணவன் மனைவியிடையே கவலைகள், பிரச்சினைகளுக்கான வடிகால்கள் மூடப்படுவது ஏன்? ஒருவருடைய கருத்து இன்னொருவருடைய கருத்துக்கு ஒவ்வாமல் இருப்பது இயற்கை. அதனை ஒன்றும் செய்ய முடியாது. இதனை ஏன் கணவன், மனைவி இறுக்கமாகப் பிடித்துக் கொள்கிறார்கள்? அவர்களுக்கு மத்தியில் புரிந்துணர்வு ஏற்பட ஏன் வழி அமைவதில்லை? இருவரும் ஒன்றாக தனித்து பேசி ஒரு தீர்வு காண்பதற்கு ஏன் முடிவதில்லை? என்ற கேள்விகள் எழுகின்றன.

வெள்ளைக்காரருடைய சுதந்திரத்தன்மை எமது ஆண், பெண்கள் மத்தியில் ஒரு அதீத துணிச்சலை ஏற்படுத்துகிறது. ஆனால், பிரச்சினைகள் வரும்போது, அவர்களைப் போல் தீர்க்க முடியாமல் போய்விடுகிறது.

கணவன் மனைவியிடையே விட்டுக்கொடுப்புகள் இல்லாமல் பிளவுகள் ஏற்பட முக்கிய காரணம், இரண்டு பேருமே கருத்துக்களையும் அன்பையும் பகிர்ந்து கொள்ளாமல் முரண்டு பிடிப்பதாகும்.

இருந்து பேசி ஒரு கருத்தொற்றுமைக்கு வராதிருப்பதும் விட்டுக்கொடுக்காதிருப்பதும் ஒரு பெரிய குறையாகும்.

ஆண்கள் இந்த விடயத்தில் பெரிதும் முரண்டு பிடிப்பதை லண்டனில் நான் எத்தனையோ குடும்பங்களில் நேரடியாக கண்டிருக்கிறேன். குடும்பத்தில் பிரச்சினை வரும்பொழுது கூட இருக்கும் துணையை திருப்திபடுத்தாமல் தங்களோடு தாங்களே பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாமல் தத்தமது நண்பர்களிடம் போய் மனக்கவலையை முறையிடுகிறார்கள்.

அநேகமாக, புலம்பெயர் நாடுகளில் கணவன்- மனைவி இருவருமே வேலைக்கு போகிறவர்களாகவே இருக்கிறார்கள். காரணம் அழுத்தும் பொருளாதாரச்சுமை. வேலை செய்யும் இடத்தில் ஆண்கள் நண்பிகளோடு பழகுவதும், பெண்கள் நண்பர்களோடு பழகுவதும் தவிர்க்க முடியாததாகி பின்னர் ஆண் தன் கவலைகள், கஷ்டங்களைப் பகிர்ந்துகொள்ள நண்பிகளோடு பழகுவதும், பெண் நண்பரை நாடும்பொழுது இக்கவலைப் பரிமாற்றம் ஆழமான உறவுகளை ஏற்படுத்துகிறது.

இது கணவன்- மனைவியிடையே சந்தேகத்தை தோற்றுவிக்கும் ஒரு காரணியாக மாறிவிடும் அபாயம் உள்ளது. அதிலும், வெள்ளைக்கார நண்பர்கள்- நண்பிகளின் ஆலோசனை, அவர்களுடைய நாட்டு பின்னணியை பிரதிபலிப்பதாக இருப்பது தவிர்க்க முடியாது.





'**விஸ்வரூபம்**' படம் திரையில் வெளிவருவதற்கு முன்னரே DTH மூலம் தொலைகாட்சியில் காட்டுவதற்கு கமலஹாசனுக்கு அதீத தைரியத்தை கொடுத்திருப்பது 'விஸ்வரூபம்' படத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் Auro 3D முப்பரிமாண ஒலியமைப்புத்தான். இதைத்தான் கமல் தனது துருப்புச் சீட்டாக பயன்படுத்தியிருக்கிறார்.

Auro 3D ஒலி அமைப்பு சாதாரண தனி (MONO) இரட்டை (STREO) 5 ஸ்பீக்கர்கள் மூலம் ஒலியை வழங்கும் ஆனால் 11 ஸபீக்கர்களைப் பயன்படுத்தும் Auro 3D ஒலியமைப்பு நேரிலும் பக்கவாட்லும் மட்டுமன்றி மேலே உச்சத்தில் இருந்தும் விசேட ஸ்பீக்கர் மூலம் தலைக்கு மேல் இடம்பெறும் சத்தத்தை தனியொரு ஸ்பீக்கர் மூலம் உணரச் செய்கிறது. மேலே பறக்கும் விமானங்கள் மற்றும் பறவைகளின் சப்தத்தை இந்த அமைப்பின் மூலம் தெளிவாக கேட்க முடியும்.

விஸ்வரூபம் படத்தின் விமானங்கள், ஹெலிகொப்டர்கள் பறக்கும் காட்சிகள் பல இடம்பெறுகின்றன. இந்த விமானங்களின் சப்தம் இயற்கையாகவே இருப்பதைப்போல் Auro 3D ஒலியமைப்பு வழங்குகிறது.

DTH மூலம் இந்த ஒலியமைப்பை மிகச் சிறந்த Home Theater System மூலமே அனுபவிக்கலாம். இல்லையேல் திரையரங்குகளில் மட்டுமே சரியான முறையில் அனுபவிக்கலாம்.

அமெரிக்காவில் பல திரையரங்குகளில் இந்த Auro 3D ஒலியமைப்பு பொருத்தப்பட்டுள்ளது. சென்னையிலும் 10 தியேட்டர்களில் 'விஸ்வரூபம்' படத்துக்காக இந்த ஒலியமைப்பு பொருத்தப்பட்டுள்ளது.

DTH மூலம் தொலைக்காட்சியில் 'விஸ்வரூபம்' படத்தை பார்ப்பவர்கள் அதனை சரியான முறையில் அனுபவிப்பதற்கு மீண்டும் தியேட்டர்களுக்கு வருவார்கள் என்பது கமலின் கருத்து. இதனால்தான் DTH மூலமாக 'விஸ்வரூபம்' ஒளிபரப்பு படத்துக்கான ஒரு trailer ஆகி இருக்கும் என்று தைரியமாக கூறுகிறார்.

VIDEO ON DEMAND (VOD)

அமெரிக்காவில் உள்ள சில தனியார் விநியோக நிறுவனங்கள் திரைப்பட விநியோக செனல்களை நடத்தி (ex-Netflex) வருகின்றன. இவை சில படங்களை வாங்கி தொலைக்காட்சியில் இண்டர்நெட் செனல்களில் விநியோகித்து வருகின்றன. DVD யில் தயாரிக்கப்பட்ட பல படங்களை (ஆங்கிலம் மட்டுமல்லாத பல படங்களும் இதில் அடங்குகின்றன)

# விஸ்வரூப கமலின் AURO 3D ஒலியமைப்பு

இவை விநியோகித்து வருகின்றன.

தனது செனல்களில் உள்ள படங்களை அச் செனல்களுக்கான தகவல் பக்கங்களின் trailer மூலம் அவை விளம்பரப்படுத்துகின்றன. குறிப்பிட்ட அந்தப் படத்தை பார்க்கும் தனது இணை சந்தாதாரர் குறிப்பிட்ட ஒரு கட்டணத்தை செலுத்தி படத்தை பார்க்கலாம்.

இவ்வாறான கட்டண வழி முறை விடியோ பட செனல்களுக்கு அமெரிக்காவில் இப்போது நல்ல செல்வாக்கு உள்ளது.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட சிங்கள படங்களான 'Train to Kandy', 'Egillena Maluwo' ஆகிய படங்கள் ஆங்கில சப்டைட்டில்களுடன் இவ்வாறான செனல்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு போட்ட காசை ஏற்கனவே பெற்றுத் தந்துள்ளன.

இந்தப் படங்கள் இனி இலங்கையில் திரையரங்குகளில் திரையிடப்போவதில்லை. ஏனெனில் இவை இப்போதே லாபம் பார்த்துவிட்டன. இவ்வாறான நடைமுறையில் இலங்கையில் மேலும் சில படங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த V.O.D நடைமுறை கூட கமலுக்கு அதீத நம்பிக்கையையும் தைரியத்தையும் கொடுத்திருக்கலாம்.

**- சினிமானந்தா**



# பாபிலோ… தொங்கு… தோ…

கனல் என்…
பாபிலோனா…
ஆட்டம் …
ஜோலார்…
ஒரு கிரா…
தோட்டத்…
பாடலை…
கொட்டு…
ஊர்மக்…
பாடல் …
பார்த்தார்…
னாவும் …
இடைவேளை…
கால் அழகை…
தரிசனம் காட்…
உசுப்பேத்தி …
இப்போது அந்…
பாபிலோனா …
தோட்டம் என்…
அழைக்கப்படுக்…



"உருகி உருகி …
மண வாழ்க்கை…
கலந்து சொ…
படத்…
ஆரம்…
கார்த்திக். …
லி…
வசந்த …
இயக்கு…
இவ…



# சொக்க வைக்கும் ஹன்சிகா

ஹன்சிகா எப்படி சான்ஸ் பிடிப்பது என்ற கலையில் தேறிவிட்டார். தன்னிடம் கதை சொல்ல வரும் இயக்குனர்களிடம் சொக்க வைக்கும் கிளாமர் சீன் வேண்டும் என கண்டிஷன் போடுகிறாராம். விதவிதமான காஸ்ட்யூம் வேண்டும். முன் அழகு தாராளமாய் காட்டலாம்னு அவர் போடும் இனிப்பான நிபந்தனைகளில் இயக்குநர்கள் சொக்கிப் போகாமலா இருப்பார்கள்! அப்படித்தான் பிரியாணி படவாய்ப்பையும் பெற்றாராம் ஹன்ஸி!



# DIET EXPERT

அனுஷ்கா ஆரம்பத்தில் யோகா மாஸ்டராக இருந்தவர். இதனால் படப்பிடிப்பு குழுவில் உள்ள ஒரு சிலர், அவரிடம் டயட் குறித்த சந்தேகங்களுக்கு ஆலோசனை கேட்க கியூவில் நிற்கிறார்களாம். அவற்றுக்கு முகம் சுளிக்காமல் பதிலளிக்கும் அவர், உணவு கட்டுப்பாடுகளை எப்படி கடைபிடிக்க வேண்டும் என்பதையும் தெளிவாக எழுதிக் கொடுக்கிறாராம்.

# ரம்யா நம்பீசன்

பீட்சா படத்திற்கு பிறகு தமிழில் வாய்ப்பு குவியும் என எதிர்பார்த்த ரம்யா நம்பீசனுக்கு வாய்ப்பு இல்லை. பிரியாணி படத்தில் நடிக்க அழைப்பு வந்துள்ளதாம். உடலை குறைக்க பிரியாணி சாப்பிடாமல் இருக்கிறார் ரம்யா.

## னாவின்
## கும்
## ட்டம்

ன்ற படத்தில்
னா ஒரு பாட்டுக்கு
போட்டுள்ளார்.
ர்பேட்டை அருகே
கிராமத்தில் ஒரு
டத்தில் இரவு நேரம்
லை எடுத்தார்களாம்.
ட்டும் பனியில்
மக்கள் விடிய விடிய
எடுப்பதை
ார்களாம். பாபிலோ-
பாடலின்
ளையில் கூட தனது
க மறைக்காமல்
ட்டி ஊர் மக்களை
இருக்கிறார்.
அந்த தோட்டம்
தொங்கும்
ன்று
டுகிறதாம்.


# புதிய வார்த்தைகளை சொல்லும் கெஸ்ட்



ி காதலிக்கும் காதலர்களின்
கயை சஸ்பென்ஸ், த்ரில்லர்,
சால்லும் படம்தான் 'கெஸ்ட்'
டத்தின் மையக்கரு..." என்று
ரம்பிக்கிறார் இயக்குநர் ராஜா
க். இவர் ஆர்.கே செல்வமணி.
லிங்குசாமி, 'தெனாவட்டு' கதிர்,
ந்த பாலன், உள்பட சுமார் பத்து
இயக்குநர்களிடம் உதவி
க்குநராக பணியாற்றியவர். இதில்
பெரும்பாலான இயக்குநர்கள்
இவருடைய அறை நண்பர்களாம்.

"காதலர்களாக இருந்து கணவன், மனைவியாக மாறும் ஏராளமான இளம் தம்பதிகள் மண வாழ்க்கைக்கு பிறகு தங்கள் உறவை செல்ஃபோனில்தான் வளர்த்துக் கொள்கிறார்கள். இருவரும் மனம் விட்டு பேசுவதற்கான வாய்ப்பு குறைவாக இருப்பதனால் அவர்களிடையே ஓர் இடைவெளி ஏற்படுகிறது. அதுப்போல் இதில் காதலித்து கல்யாணம் செய்துக்கொள்ளும் ஒரு ஜோடியின் வாழ்க்கையில் கெஸ்ட் ரூபத்தில் ஒரு ஆணும், பெண்ணும் வில்லங்கத்தை உண்டாக்குகிறார்கள். அந்த பிரச்சினையில் இருந்து அவர்கள் எப்படி வெளியே வருகிறார்கள் என்பதை உணர்வுப்பூர்வமாக சொல்லியுள்ளேன்," என்கிறார் இயக்குநர்.

நாயகனாக 'சிந்துவெளி' ஹரிஷ் கல்யாண் நடிக்கிறார். நாயகியாக பூனம் கவுர். இருவருக்குமான கெமிஸ்ட்ரி இதில் முழுமையாக இருக்குமாம். இரண்டாவது நாயகியாக நடிக்கும் ஜியா சித்திக், தமிழில் ரீமா சென் போல் க்ளாமரில் வலம் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது. தெலுங்கு சினிமாவில் முன்னணி வில்லனாக திகழும் பரணி தமிழுக்கு முதன் முறையாக வருகிறார். சிங்கம் புலி, சாம்ஸ் காமெடி போர்ஷன், பிரமாதமாக வந்துள்ளதாம். சுமார் 500 படங்களுக்கு மேல் கோட்டியியுடன் இணைந்து இசையமைத்துள்ள ராஜ், இதில் காகா-னியுடனும் இணைந்து தகுந்த இசையை வழங்கியிருக்கிறார். இது குடும்பத்துடன் இளைஞர்கள் ரசிக்கும் பொழுதுப் போக்கு படமாக இருக்கும் என்கிறார்கள்.



# தாராவின் கோபம்



இந்த உலகத்தில் எல்லாமே வெறுத்துப்போச்சாம், 'தாரா'வுக்கு. அவரைச் சுற்றி இருப்பவர்கள் எல்லோருமே ஏதோ சுய ஆதாயத்துக்காகவே இருக்கிறார்களாம். ஒருவர் கூட தூய அன்புடனோ, பாசத்துடனோ பழகுவது இல்லையாம். எனவேதான் இப்போது அவர் யாருடனும் மனம் விட்டுப் பேசுவதே இல்லையாம். குறிப்பாக, மீடியாக்களிடம் பேசுவதை அறவே வெறுக்கிறாராம். சமீபத்தில் தனக்கு எல்லாமுமாக இருந்த மேக்கப்மேனை கூட நீக்கி விட்டாராம். இந்த திடீர் நடவடிக்கைக்கு காரணம் தெரியாமல் திரையுலகினர் விழிக்கிறார்கள்.

# நான்கு கோடி வாங்கும் இலியானா



இடையழகி இலியானா 'ப.ஃர்பி' படத்தை அடுத்து 'ஸ்மார்ட் டிவி' படத்தில் நடிக்கிறார். இந்தியில் 4 கோடி சம்பளம் வாங்கும் இலியானா. தன்னுடைய உடை தேர்வு செய்யும் பொறுப்பு என்னுடையதுதான் என்கிறார். கவர்ச்சியான உடைகளையே தேர்வு செய்கிறாராம். இதனால் இலியானாவை வைத்து இயக்கும் இயக்குநர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லையாம்.

# வட்டிக்கொடுமையை விளக்கும் துட்டு



"கந்து வட்டியின் கொடுமையை வைத்து உருவாகும் படம்தான் 'துட்டு' என்கிறார் இயக்குநர் முரளி கிருஷ்ணா. இவர் 'பார்வை ஒன்றே போதுமே', 'பேசாத கண்ணும் பேசுமே', 'பலம்' உட்பட ஏராளமான படங்களை இயக்கியவர்.

"தனி மனித வாழ்க்கையில் கந்து வட்டியின் கொடுமை பிரிக்க முடியாத ஓர் அங்கமாகிவிட்டது. ஏழ்மையில் இருந்து மீள்வதற்காக வட்டிக்கு பணம் வாங்கும் அப்பாவி மக்கள், கந்து வட்டி கொடுமையால் வாழ்க்கையை முடித்துக் கொள்ளும் நிலைமைக்கு தள்ளப்படுகிறார்கள். அவர்களின் அந்த வாழ்க்கையத்தான் இதில் ஆக்ஷன், காமெடி கலந்து சொலலியுள்ளேன்.

எதைப் பற்றியும் கவலைப்படாமல் ஊர் சுற்றித் திரியும் கதாபாத்திரத்தில் ஆரியன் ராஜேஷ் நடிக்கிறார். இவர் 'ஆல்பம்' படத்துக்கு பிறகு மீண்டும் தமிழுக்கு வந்துள்ளார். அப்பாவி இளைஞராக படம் முழுக்க ரவுசு மண்ணியுள்ளார். நாயகியாக நடிக்கும் சோனா சோப்ரா, கல்லூரி ரோலில் ஹீரோவுக்கு இணையாக ரகளை பண்ணியுள்ளார்.

பூனைக்கும் எலிக்கும் இடையே நடக்கும் மோதல் போல் ஆரம்பிக்கும் இவர்களின் காதல் சுவாரஷ்யமாக இருக்கும். முக்கிய வேடத்தில் நடிக்கும் தயாரிப்பாளர் கோபால்ஜி, கோட்டா சீனிவாசராவ், கஞ்சா கருப்பு, மனோ பாலா, டெல்லி கணேஷ், சீதா என அனைவருமே தங்கள் பாத்திரத்தை உணர்ந்து நடித்துள்ளார்கள்.

இந்தப் படத்தின் உச்சமாக நகைச்சுவையையும் பாடல்களையும் சொல்லலாம். என்னுடைய முந்தைய படங்களை போல் இதிலும் அனைத்துப் பாடல்களும் பிரமாதமாக வந்துள்ளன. முதன் முறையாக நான் இசையமைத்துள்ளேன். நானும் தயாரிப்பாளர் கோபல்ஜியின் மகன் ஹரிஜியும் சேர்ந்து பாடல்களை எழுதியுள்ளோம்..." என்கிறார் முரளி கிருஷ்ணா.

# கவி முற்றம்

## கண்டுகொள்ளாத பக்கங்கள்



நீ
கண்டு கொள்ளாத பக்கங்களின்
எண்ணிக்கை அதிகரித்துக்
கொண்டேயிருக்கிறது...

பாரிய தவறுகள் எல்லாம்
பதிவாகிக் கொண்டிருப்பதையோ
அநியாய விபத்துக்களால்
இழக்கப்படும் உயிர்கள் பற்றியோ
நீ கவனமெடுப்பதில்லை...

ஆபாசத்தை இல்லாமல் செய்யவோ
துஷ்பிரயோகத்தை துவம்சம்
செய்யவோ
நீ துணிவதே இல்லை...

உன் பேனா பேசுவதெல்லாம்
வாராந்த பத்திரிகையின் சிறு
அச்சுப்பிழை பற்றியும்
சினிமா நடிகனின் வாழ்க்கை முறை
பற்றியும்தான்...

இன்னும்
நீ
கண்டுகொள்ளாத பக்கங்களின்
எண்ணிக்கை அதிகரித்துக்
கொண்டேயிருக்கிறது...

கேயெல். நப்லி
அட்டாளைச்சேனை

## புலம்பல்!

வைரம் வைரத்தை
அறுத்துக் கொண்டிருந்தது
அரம் இரும்பைத்
தேய்துக்கொண்டிருந்தது.
மாமியார்கள் மருமகள்களை
வதைத்துக் கொண்டிருந்தனர்
கோடரிக் காம்பு புலம்பியது
எனக்கு மட்டும் ஏன்
அவப்பெயர்
குலத்தைக் கெடுப்பதாக!

- ஹிதாயா பாரிஸ்
களனி


## நீங்காத நினைவுகள்



காதோரம் கவிதை பேசிய
இரவுகள்...
குரலோடு காதல் செய்த
காலங்கள்...
மழையோடு சின்னச்சின்ன
தீண்டல்கள்...
உறவோடு நாம் செய்த
தேடல்கள்...
இவையெல்லாம் நான்
மறப்பேனா...

- சுரேஷ்யோகா, வவுனியா

## அனுபவம்



இறைக்காத கேணியும்
ஓர்நாள் தூர்ந்திடும்!

இறைக்கிற கேணியும்
ஓர்நாள் தூர்ந்திடும்!

கொடுக்காத செல்வமும்
ஓர்நாள் தீர்ந்திடும்!

கொடுக்கிற செல்வமும்
ஓர்நாள் தீர்ந்திடும்!

நுகராத இளமைக்கும்
ஓர்நாள் முதுமை வரும்!

நுகர்ந்த இளமைக்கும்
ஓர்நாள் முதுமை வரும்!

அனுபவமற்ற
முதிர்வை விட
அனுபவம் பெற்ற
முதிர்வு...

அற்புதமானதாக இருக்கும்!

- இரா. த. சக்திவேல்

## உன் நினைவுகள்



இருண்டவானில் ஒளிரும்
விண்மீன்களைப்போல்
என் இதயத்தில் உன் நினைவுகள்
இன்றும் மறையாமல் ஒலிக்கின்றன
என் வாழ்க்கை நீ அமாவாசையாக
மாற்றினாலும்- உன் நினைவுகளை
நான் பௌர்ணமி நிலவைப் போல்
ரசிக்கிறேன்
சில கணமேனும் என் வாழ்வில்
நீ ஒளியேற்றிச் சென்றதால்

- எஸ். பாஹிரா பாருக்

## மணப்பெண்



கல கல கொலுசு சத்தம்
கண்ணாடி முகம் பார்ப்பாள்
அழகிய அருவிகொட்ட அதிலும்
நீந்த பார்ப்பாள்
சிதறிய கொலுசுமணி சீதனங்கள்
சொல்லி கேட்பாள்
மாப்பிள்ளை வரம் வரவே
மணப்பெண் மாறிடுவாள்

- சத்தியராஜ்,
என்பீல்ட், டிக்கோயா

## என் உறவு

தாயின் உறவு
தொப்புள் கொடி போல
தந்தையின் உறவு
ஆல் வேர் போல
சகோதர பாசம்
நம் அறிவு போல
பள்ளி நட்பு
கல்வெட்டு போல
என் உறவு
ஆழ் கடல்போல
என்றும் ஆழமானது.

த.சசி, திருநாவற்குளம்,
வவுனியா

## என் இனிய நண்பி!



உலகம் பெரிதென்பதால்தானே
பிரிவு வருகிறது.
வேண்டாமே இவ்வுலகம்.
பூ மொட்டை திறப்போம்.
பூவினுள்ளே வசிப்போம்.
பூந்தேனை ருசிப்போம்.
நம் உயிர் நட்பை சுவாசிப்போம்.

- ஊ. அபிராமி, அக்கரைப்பற்று

## என் தாய்

என் இதயத் தோட்டத்தில்
பூத்துக் குலுங்கிய என் இனிய
தேவதைக்கு

என்னை கருவறையில்
பத்திரமாய் பாதுகாத்து
கால் பதித்ததும் பவ்வியமாய்
பராமரித்தவள்
நான் உனக்காக வடிக்கும்
கண்ணீர் துளியைத் தவிர
வேறொன்றும் இல்லை -
உன்னிடம்
பட்ட கடனைத் தீர்ப்பதற்கு...

- பி. செரின்ரோஸ்
மஸ்கெலிய



## கனவான நிஜங்கள்



கனவென்று நினைத்திருந்தேன்
வர்ணங்கள் நீ தந்தாய்!

தவமென்று நினைத்திருந்தேன்
வரமாக உனை தந்தாய்!

உறவென்று நினைத்திருந்தேன்
உணர்வாய் உயிர் தந்தாய்!

பிரிவொன்றை நான் கண்டேன்
விதி என்று நீ சொன்னாய்!

சதி என்று நான் சொன்னேன்
விடை சொல்ல நீ இல்லை!

கனவாகவே கலைகிறதே
'கறை படிந்த என் காதல்!!

எஸ். சுபாஜினி
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

## அறிவிப்பு!

மழை பொழியும்
புயல் வீசும் என
வானிலை அறிக்கை
வாசித்தார் அதிகாரி!
நீ வரும்போது
தென்றல் வீசும் எனும்
அறிக்கையை வாசிக்க
அவருக்குத்
தெரியவில்லையே!

- கல்லொளுவை பாரிஸ்

## வாசக கவிஞர்களுக்கு...


பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com

# ஹலோ மைடியர் ரோங் நம்பர்...3





# என்னை ஆட்டிப்படைத்த அந்த தேன்மதுரக் குரலோசை

''குவா குவா''
என் இரண்டாவது குழந்தை அழவே நான் ஓடோடி வந்து தூக்கி முத்தமிடவும், வாசல் மணி ஒலிக்கவும் சரியாயிருந்தது. கதவைத் திறக்க ஒரு அழகான முஸ்லிம் பையன். ''மேடம் பீட்ஸா ஓர்டர் பண்ணினீங்களா?'' என்றான். தெத்துப் பற்கள் தெரிய சிரித்துக்கொண்டே! ''ஓமோம்'' என்றபடி அவசரமாக அவனிடம் பணத்தை கொடுத்து சிரித்துக் கொண்டே நன்றி என்றேன். பீட்ஸாவை மூத்தவன் கைகளில் கொடுத்ததும் அவன் பறந்தோடினான்.

பீட்ஸாவை கொண்டு வந்தவனின் முகம் மனதில் மின்னி மறைந்தது. ஒருவேளை அவனாக இருக்குமோ?... சீசீ அவனாக இருக்காது. இவன் ரொம்ப இளமையாக இருக்கானே! மனதில் அந்த 'அவனைப்' பற்றி எண்ணம் வட்டமிட்டது.

நான் ஒரு தொலைத்தொடர்பு அலுவலகத்தில் வேலை செய்த காலமது. மூன்று மொழிகளும் எனக்கு அத்துப்படி! பாத்திமா ஆயிஷா எனது முழுப்பெயர். அலுவலகத்தில் எல்லோரும் ஆஷ் ஆஷ் என்று செல்லமாக அழைப்பார்கள். நானும் வேலையில் கெட்டிக்காரிதான். சொந்த இடம் கண்டி. கொழும்பில் வேலை. பெரியம்மாவின் கொழும்பு வீடு எனது வசிப்பிடம். வேலை முடிந்து வந்ததும் பெரியம்மாவுடன் கதைத்து சிறிது நேரம் இளைப்பாறிய பின் சாப்பிட்டு தூங்கச் செல்வது என் வழக்கம். என்னிடம் செல்போன் இருந்தபோதும் அதனோடு நேரம் செலவிடுவதில் எனக்கு இஷ்டமில்லை. தொலைத்தொடர்பில் வேலை செய்தபடியால் வாடிக்கையாளர்களிடம் பேசிப்பேசியே வெறுத்துப் போயிருந்தது. எனவே ஓய்வில் மௌனமாக இருக்கவே விரும்புவேன்.

ஒருமுறை கைப்பேசி சிம் காட்டில் பழுது ஏற்படவே அந்த சிம்முக்குரிய வாடிக்கையாளர் சேவைப் பகுதிக்கு அழைத்தேன். மறுமுனையில் ஒரு ஆண்குரல். வசீகரமாக குரல் ஒலித்தது. இந்தக் குரலில் மெய்மறந்து போனது உண்மைத்தான்! இருந்தாலும் அதனைக் காட்டிக் கொள்ளாமல் எனது தேவையை மட்டும் கதைத்து விடை பெற்றேன். இருந்தபோதிலும் அவன் எனது பெயரை மூன்று நான்கு தடவை கேட்க மறுக்கவில்லை. அந்த வாடிக்கையாளர் பிரிவுக்கு கதைக்கவேண்டிய தேவை பின்னர் எனக்கு ஏற்படவே இல்லை.

பிரதீப்

இப்படியே நாட்கள் கடந்தன. ஒரு முறை இரவு நேர உணவை முடித்துவிட்டு தூங்கச் சென்றேன். படுக்கையில் புரண்டு படுத்ததும், தூக்கம் வரவில்லை. மொபைல் சிணுங்கியது. எடுத்துப்பார்த்தால் unknown number என்று விழுந்தது. சரி கதைத்துத்தான் பார்ப்போமே என்று ஒன் பண்ணினேன். வசீகரமான ஆண் குரல் 'ஹலோ' என்றது. யாராக இருக்கும் என்று குழம்பினேன். அடுத்த கணமே ஆஹா இந்தக் குரலுக்குரியவன் அன்று நான் பேசிய வாடிக்கையாளர் சேவைப்பிரிவுக்குரியவன் அல்லவா என்ற உண்மை பளிச்சிட்டது. ''யார் வேண்டும்...? என்றேன் அதட்டலுடன்.

மிக பவ்வியமாக கதைக்கத் தெரிந்தவன் போலும், ''சொரி உங்களை தொந்தரவு பண்ணுவதற்கு... நான் அக்ரம் பேசுறன். எனக்கு உங்ககூட பேச ஐந்து நிமிஷம் தாறிங்களா?'' பணிவுடன் கேட்டான். சொல்லுங்கள் என்றேன் சிறிது நேரம் தாமதித்து! உம் என்றதும் பேச ஆரம்பித்தான்.

''உங்கட குரல் என்னை எங்கேயோ கூட்டிக்கொண்டு போனது போல் உணர்வு. நான் இன்னமும் உங்களோடு பேசுவது போல் உணர்கிறேன். இது மட்டுமே எனது வாழ்க்கையின் சந்தோஷம் என்று எடுத்த எடுப்பிலேயே உருக ஆரம்பித்தான்.

''ப்ளீஸ் நீங்கள் என்னோடு தொடர்ந்து பேசவேண்டும். ப்ளீஸ் மாட்டேன் என்று மட்டும் சொல்லாதீங்க! நீங்க எப்படி இருப்பீங்க எண்டு கூட தெரியாது ஆனால் நான் உங்கள் குரலுக்கு அடிமை'' என்று அள்ளி வீசினான்.

எனக்குள் ஆச்சரியம் முட்டியது. அவனது குரலின் வசீகரத்தை எண்ணி நான் வியக்கையில் அவன் எனது குரலையும் அல்லவா இரசித்திருக்கிறான்!

யோசித்திருக்கையில் ''ஹலோ'' என்று மீண்டும் கவனம் கலைத்தான். நான் சிறு அலட்டலுடன் ''இதோ பாருங்க இப்படி எனக்கு முகம் தெரியாமல் நட்பு பாராட்டுவதில பெரிதாக இஷ்டமில்லை. அப்புறம் இதை யோசிக்க எனக்கு டைம் வேணும்'' என்று சொல்லி அழைப்பை கட் பண்ணினேன்

எனினும் இத்தனை குரல் வளம், பணிவு என்பன என்னைக் கட்டிப்போட்டிருந்தது. முகம் தெரியாத அவன் என்னை வியாபித்திருந்தான்.

மறுநாள் இரவு படுக்கைக்குச் சென்றதும் அவன் குரல் என் ஞாபகத்துக்க வந்தது. முக்காலி மீதிருந்த செல்போனை அடிக்கடி பார்த்துக்கொண்டேன். நானே அவனுக்கு அழைப்பு எடுத்தால் என்ன என்று தோன்றினாலும் அடக்கிக்கொண்டேன். ஒரு வழியாக கண்கள் செருகிக்கொண்டு செல்கையில் கைபேசி சிணுங்கியது. பனி விலகியதுபோல தூக்கம் கலைந்து ஹலோ என்றேன். மறுமுனையில் அந்த மதுரக்குரல்தான்! என் உடல் விதிர்த்து அடங்கியது. தயக்கம் இல்லாமல் பேசினேன்... அவனும் பேசினான்... பேசினோம்...

நாள் கிழமையானது, கிழமை மாதமானது, மாதம் வருடமாகியது. ஆம்; எங்கள் தொடர்பு வருடத்தைக் கடந்திருந்தது. அக்ரம், ஆயிஷா- பெயருக்கேற்றாற்போல நல்ல நண்பர்கள் இப்போது. ஆனால் ஒரு விஷயத்தை நீங்கள் நம்பித்தான் ஆகவேண்டும். இத்தனைக்கும் அவன் முகத்தை நான் பார்க்கவில்லை. என் முகத்தை அவனும் பார்க்கவில்லை. அதுவும் எங்களை நெருங்கிவரச் செய்தது.

ஒரு நாள் அவன் என்னை சந்தித்தே ஆகவேண்டும் என்றான் விடாப்பிடியாக! நாங்கள் பேசத் தொடங்கி ஒரு வருடம் பூர்த்தியாவதால் அன்றைக்கு இருவரும் நேரில் சந்திக்கவேண்டும் என்று அவன் கூறி சம்மதம் கேட்டான்.

நானும் சரி என்றேன். அலுவலக விசிட்டர் அறையில் எனக்காக அவன் காத்திருந்தான்.

மாடிப்படி தாண்டும்போதே எனக்குள் இனம்புரியாத மகிழ்ச்சி. விருந்தினர் அறையில் பத்து பேர் வரை அமைர்ந்திருந்தனர். சரி நாமும் விருந்தினர் மாதிரி இருந்தே அவனைக் கவனிப்போம் எனத் தீர்மானித்து மொபைலை சைலன்ட் மோடில் போட்டுக்கொண்டேன். அறையின் கடைசிக் கதிரையில் அமர்ந்தேன். பத்திரிகையை எடுத்துக்கொண்டேன்.

என் அருகில் ஒரு 18 வயது மதிக்கத்தக்க பையன் உட்கார்ந்திருந்தான். அவனிடம் தம்பி நேரம் என்ன என்று கேட்டேன். கையை காட்டி சைகை செய்தான். watch கட்டியிருக்கவில்லை- புரிந்துக்கொண்டேன் மீண்டும் பத்திரிகையை புரட்டினேன். இதோ இந்த அறையில் இருக்கும் பத்துபேரில் அவனும் ஒருத்தன். மூன்று, நான்கு 25 வயது மதிக்கத்தக்க பெண்களும் அமர்ந்திருந்ததால் என்னை இனம் காண்பது கடினம். பத்து நிமிடங்களுக்கு பிறகு எனது மொபைல் சிணுங்கியது. Answer பண்ணினால் அவன் என்னைப் புரிந்துக்கொள்வான் என்பதால் சென்சிட்டிவ் மொபைலை நைசாகத் தொட்டேன். ஆன்ஸ்வர் ஆகியது.

இந்த கூட்டத்தில் யார் மொபைலை காதில் வைத்து ஹலோ என்கிறார்களோ அவன்தான் அக்ரம். ஆன்ஸ்வர் பண்ணியதும் சுற்றும் முற்றும் பார்த்தேன். அந்தக் காட்சி எனக்குள் இடி இறங்கியது போல் இருந்தது. எனக்கு அருகில் இருந்த சின்னப் பையன் ஹலோ என்றான் அதே வசீகரக் குரலில்!

என் தம்பி அன்சாரின் அதே உருவ அமைப்பு! முகத்தில் இன்னும் அரும்பாத மீசை. கண்களில் சிறுபிள்ளைத் தனம் இன்னும் மாறாதது தெரிந்தது.

பேப்பரை சீரியஸாக படிப்பதாக பாவனை செய்துவிட்டு அவசரஅவரசமாக எழுந்து சென்று விட்டேன். அவன் இன்னும் அழைப்பில் இருந்தான். நடுக்கத்துடன் ஹலோ என்றேன்.

''நான் வந்து ரொம்ப நேரமாயிட்டு... ஆஷ் வாங்களேன் கீழ'' என்றான். சுதாகரித்துக்கொண்டு எனது அருகில் அமர்ந்திருந்த சின்ன பையனின் அடையாளங்களை சொல்லிக்கேட்டேன் நீங்களா அது என்று. அவன் மறுப்பு எதுவும் சொல்லவில்லை. ஆமாம் என்றான். அவ்வளவுதான். அழைப்பை துண்டித்து போனை அணைத்தேன்.

என்ன கொடுமை, என் தம்பியை விட இளையவன் அல்லவா! நிச்சயமாக இதனை இத்தோடு நிறுத்திக்கொள்வது தான் சரி. இன்னும் கொஞ்ச காலம் நீண்டிருந்தால் நான் நிச்சயமாக காதலில் விழுந்திருப்பேன். ஏனென்றால் எனது மனவேதனைகளுக்கு அவன் சிறந்த சுமைதாங்கியாக இருந்தான். ஆனால் என் தம்பியை விட இளமையான ஒருவனை காதலனாக கருதுவது எப்படி?

முதல் வேலையாக சிம்மை அகற்றி உடைத்தெறிந்தேன்.

குழந்தை வீறிட்டு அழவும் நனவுலகம் வந்தேன் அவர் வரும் நேரம். மீண்டும் சமையலில் மும்முரமானேன்.

## அவர்கள் அப்படித்தான்!

எனது தங்கை கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நேரம். விடுமுறைகளின்போத அவள் வீட்டிற்கு வந்தால் நானும் அவளும் பெற்றோருடன் சேர்ந்து நிறைய அரட்டை அடிப்பதுண்டு. அப்படி ஒரு நாள் அரட்டை அடடிக்கையில் அவனது கல்லூரியில் அவளை சைட் அடிக்கும் தேவா என்ற பையனை பற்றி பேசினாள். நாங்களும் அவளை கிண்டல் பண்ணியதோடு 'நீ ஓம் எண்டு சொல்லேன் பார்ப்போம்' என்றோம். ஆனாலும் காதலில் நாட்டமில்லாத அவள், ''அவன் கல்லூரி ரோமியோ! என்னிடம் போலவே பல பெண்களை சுற்றுகிறான்'' என்று ஒரே போடாய்ப் போட்டாள். ''எனக்கென்று பிறந்த ராமன் எங்கோ இருக்கிறான்...



# ராமனைத் தேடிய சீதை

அவன் வரும் வரையில் காத்திருப்பேன்'' என்றாள்.

காலம் கடந்தது. எங்கள் பெரியம்மாவின் மகனின் கல்யாண அழைப்பிற்கு சென்றிருந்தோம். அங்கு பெரியம்மா என்னையும் தங்கையையும் தட்டுகள் தூக்க கொல்லைப் புறம் போக சொன்னாள். நாமும் வீட்டின் கொல்லைப் புறத்திற்கு சென்று கல்யாண சீர் தட்டுக்களை எடுத்துக்கொண்டிருந்தோம். தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த கன்னங்கரேலென்ற, பானை வயிறு, பெரிய மீசை, உருண்டை விழி, கிட்டத்தட்ட சுடலைக்காப்பாளன் மாதிரி இருந்தவனை, உள்ளிருந்து வந்த பெரியப்பா ''ராமன் நீ போய் வாழை மரத்தை வாசலில் கட்டிவிடு!'' என்று கட்டளைப் போட்டுச் சென்றார். நானும் தங்கையும் எம்மையறியாமலே சிரித்துவிட்டோம். அவன் அகன்றதும் பெரியப்பாவைக் கூப்பிட்டோம்.

இவர் பெயர் என்ன பெரியப்பா? என்றோம். பெரியப்பா அலட்சியமாக ராமன் என்று சொல்லிவிட்டுச் சென்றார். நான் தங்கையை நோக்கினேன். அவள் அவசரமாக ''இந்த ராமனை நான் தேடவில்லை அக்காச்சி'' என்றதும் இருவருக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. அன்றிலிருந்து கல்யாண பேச்சை எடுத்தாலே என் தங்கை எனக்கு ராமன் மட்டும் வேணாம். நான் ஒன்றும் சீதையல்ல என்று நழுவ முயல்வாள். ஆனாலும் ராமன் மனைவி என்ற அந்த பெயர் மட்டும் அவளுக்கு அப்படியே நிலைத்து விட்டது.

கஸ்தூரி






சரியான விடை:

**விஜய் அன்டனி**

1. எஸ். தினேஸ்- ஹல்வத்துர
2. ஜே. சந்திரசேகரன்- பூண்டுலோயா
3. ஆர். சரோஜினி- பொத்துவில்-09
4. ஜெகநாதன்- வவுனியா
5. ஆர்த்தி- இணுவில்
6. சப்பானா- தர்காடவுன்
7. கே. திவ்யா- கல்கிஸ்ச
8. டீ. ஜெசி- இறக்குவானை
9. எஸ்.வினோ- இணுவில்
10. உஸ்மான்- கண்டி
11. ஜி. கேதீஸ்வரி- எட்டியாந்தோட்டை
12. எம்.எம். அஸ்ஸார்- கலேவலை
13. மதுரா- சங்கானை
14. டீ.எஸ். சுகந்தன்- அக்கறைப்பற்று
16. சுகன்யா- திருகோணமலை
17. கே. சதீஸ்- கிளிநொச்சி
18. ஹரிஸ்மா- வெல்லம்பிட்டிய
19. தர்ஷிகா- வவுனியா
20. ரிப்கான்- பத்தாம்பிட்டி
21. ஏ. லக்ஷ்மி- வெல்லம்பிட்டிய
22. அஸ்ரா- கொழும்பு- 10
23. சுதர்ஷன்- யாழ்ப்பாணம்
24. பாயிஸ்- பள்ளிவாசல் து றை
25. எஸ். யோகேஷ்வரி- ராஜகிரிய
26. காந்தன்- விஸ்வமடு
27. எஸ். தேவி- மட்டக்குளிய
28. கிரிஷிகா- பருத்தித்துறை
29. நிஷாந்தினி- கோண்டாவில்
30. கே.பிரவீண்- கிளிநொச்சி

# நட்சத்திரங்களின் எண்ணிக்கை



விண்வெளியில் நட்சத்திரங்களின் எண்ணிக்கை, விஞ்ஞானிகளால் முன்பு கணிக்கப்பட்டதைவிட 20 மடங்கு அதிகம் இருப்பது தெரிய வந்துள்ளது. 10,000 கோடி முதல் ஒரு லட்சம் கோடி வரை விண்வெளியில் நட்சத்திரங்கள் இருக்கலாம் என்பது அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அந்த எண்ணிக்கையைவிட 10 முதல் 20 மடங்கு அதிக நட்சத்திரங்கள் இருப்பது ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. அதாவது 3க்கு அடுத்து 23 பூஜ்யங்களை சேர்த்தால் வரக்கூடிய எண்ணிக்கையில் நட்சத்திரங்கள் விண்வெளியில் உலவிக் கொண்டிருப்பதாக தெரிகிறது. இது ஆங்கிலத்தில் மில்லியன், பில்லியன், ட்ரில்லியன் என்பதைப் போல 300 செக்ஸ்டிலியன் என்று அழைக்கப்படுகிறது.

எங்க வீட்டுக் கல்யாணம் என்ற புதிய பகுதியில் வானவில் குடும்பத்தைச் சேர்ந்த புதுத் தம்பதியினர் தமது திருமண புகைப் படத்தை இலவசமாக பிரசுரித்து மகிழலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உங்கள் திருமண அழைப்பிதழ், தபால் முகவரி, தொலைப்பேசி எண் மற்றும் திருமணபதிவு நகல் ஆகிய விவரங்களுடன் உங்கள் திருமண புகைப்படத்தை

**எங்க வீட்டுக் கல்யாணம்**
**The Edior**
**Vanna Vaanavil Editorial**
**Lake House**
**Colombo-10**

என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பது மாத்திரமே!

எங்கள் வாசகரின் திருமண புகைப்படத்தை பிரசுரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

## சொல் விளையாட்டு - 25

சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**

சப்ரகமுவ, முத்திரை, கண், கதவு, தினம், விரைவு, ரப்பர், சிகப்பு

**மேலிருந்து கீழ்**


சமுத்திரம், ரதி, கரை, முகவுரை, வண்டு, தவிர், பசி

சரியான விடை அனுப்பியோரில் பெயர்கள் இடம்பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்

மினுஷா குணரத்தினம், யாழ்ப்பாணம்

கதிரவன் இன்பராசு, மட்டக்களப்பு

பீ.எச். ஏ. தாஹீர், காத்தான்குடி-03







ஆசிரியர்: சுத்தம் சோறு போடும்னு தானே பழமொழி இருக்கு. நீ என்னடான்னா பரிசுத்தம் சோறு போடும்னு எழுதி இருக்கியே, ஏன்?

மாணவன்: பரிசுத்தம்ங்கறது என் அப்பா பெயர் சேர். அவர்தான் எனக்கு சோறு போடுறாரு!


# படம் சொல்லும் கதை



ஹொரனையில் புனித பிலமினா கல்லூரி இயங்கி வந்தது இன்று பலருக்குத் தெரியாத விஷயம். இது ஹொரனை கல்லேதண்டுகொட என்ற இடத்தில் அமைந்திருந்தது. அன்றைக்கு இது ஒரு பிரபல தமிழ், சிங்கள இரு மொழி பாடசாலை. கத்தோலிக்க திருச்சபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்த இப்பாடசாலையில் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த ஹொரனை, இங்கிரிய, புளத்சிங்கள, மத்துக ஆகிய பிரதேசங்களில் உள்ள றைகம், மில்கந்த, எல்லகந்த, சொறனை, நியூச்செட்டல் மற்றும் தோட்டங்களைச் சேர்ந்த பிள்ளைகள் இங்கு கல்வி கற்றனர். 1960களில் இங்கு கல்வி கற்ற இந்த மாணவர்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த சென் பிலமினா சிலைக்கு முன்னால் இருந்து எடுத்துக்கொண்ட படம் இது. எம். ராமச்சந்திரன், வே. சுப்ரமணியம், தங்கசாமி, சுப்பையா, கணபதி, ராஜகோபால், பெரியசாமி, வீ.மூர்த்தி ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். ஆனால் படத்தில் காணப்படுபவர்களில் பலர் தமிழகம் திரும்பி பல வருடங்கள் ஆகிவிட்டன. மூர்த்தியாகிய நான் றைகம் கீழ்ப்பிரிவில் வசிப்பதுடன், தற்போது தினகரனின் இங்கிரிய பிராந்திய செய்தியாளராக பணியாற்றி வருகிறேன். இப்படத்தில் சென் பிலோமினா சிலை காணப்பட்ட போதிலும் இப்போது அந்த சிலை அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டது. படத்தில் மாணவர்களாகத் தோற்றமளிப்பவர்களில் பலர் காலவெள்ளத்தில் சிக்கி சிதறிப்போய் விட்டார்கள். எனினும் விடாமுயற்சியுடன் நடைபெற்றத் தேடுதலின் பின்னர் பழைய மாணவர்களின் ஒரு பகுதியினர் தேடிக்கண்டுபிடிக்கப்பட்டு கடந்த மே 12ந் திகதி இப்பாடசாலையில் ஒன்றுகூடல் ஒன்று நடைபெற்றது. உணர்வுபூர்வமாக அமையப்பெற்ற இந்த 'ஆட்டோகிராப்' ஒன்றுகூடலில் பலர் உணர்ச்சி வசப்பட்டு கண்ணீர் உகுத்தனர். இப்பாடசாலைக் கட்டடம் இன்று இரண்டு மாடிக் கட்டடமாக மாறி செலமினா என்ற பெயரில் முன்பள்ளிப் பாடசாலையாக இயங்கி வருகிறது. 1967ம் ஆண்டிலேயே இது மூடப்பட்டு கல்வி நடவடிக்கை நின்று போய்விட்டது. அச்சமயத்தில் உரியவர்கள் முயன்றிருந்தால் பாடசாலையை மூடாமல் அபிவிருத்தி செய்திருக்கலாம் என்ற ஆதங்கம் எங்களுக்கு ஏற்பட்டது உண்மை.

**படமும் தகவலும்: இங்கிரிய மூர்த்தி**

உங்களுடன் அல்லது உங்கள் குடும்பத்துடன் தொடர்புடைய மறக்க முடியாத நிகழ்வுகளை பின்புலமாகக் கொண்ட பழைய புகைப்படங்கள் இருக்குமானால் அந்த சுவாரசியமான கதையை எங்களுக்கு படத்தின் பிரதியுடன் அனுப்பி வைத்தால் அல்லது இமெயில் மூலம் அனுப்பி வைத்தால் உங்கள் மகிழ்ச்சியை நாங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.



ஆறு அதிர்ஷ்டசாலிகள்

1. ரா உஷாந்தினி- புத்தூர்
2. எஸ். நவநீதன்- கொழும்பு-11
3. கே. ஜீவன்- கிளிநொச்சி
4. ஆர். கீர்த்தனா-இறக்குவானை
5. வி. தீபன்- அட்டன்
6. ஏ. லக்ஷான்- வவுனியா




கடந்த இதழில் வெளியான படத்திலுள்ள ஆறு தவறுகள் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

## குறுக்கெழுத்து போட்டி - 25

விடைகள்

**இடமிருந்து வலம்**

பஞ்ச பாண்டர்கள், சைகை, கில்லி, ரிஷி, பல்லி, வலம்புரி, கஞ்சன், திட்டம், மாதவி, வில்வித்தை, கண், சதம், கன்னன், பிடில்

**மேலிருந்து கீழ்**

பச்சை, சங்கிலி, பாடல், வசம்பு, கவரிமான், பத்தியம், வடம், கல்விமான், டமாரம், கவிஞன், கதை, விண்கல், தைமாதம், சபி, தடி

**சரியான விடைகளை எழுதி பெயர் தெரிவான மூவர்**

வஸந்தா பாலேந்திரா, கொழும்பு- 06

பத்ர பிரபா, கெகிராவை

எஸ் ஷிபானா, சம்மாந்துறை

நானும் என் யாழ். பயணங்களும் 24

# வடக்கையும் தெற்கையும் இணைக்கும்



தெளிவத்தை ஜோசப்




வவுனியா தாண்டியதும் பஸ்ஸுக்குக் குஷி வந்து விட்டது போல் தெரிகின்றது. குண்டு குழிகளில் விழுந்தெழுந்தாலும் ஜிவ்வென்று பறக்கிறது. ஒரே நேர்கோடு போல் கண்ணுக்கெட்டும் தூரம் வரை பாதை ஓடுகிறது. ஓடுகின்ற பாதையில் கண்ணை மூடிக்கொண்டு பஸ்ஸும் ஓடுகிறது. உள்ளே இருக்கும் சிங்கள நண்பர்களும் குஷியாகவே இருந்தனர்.

இப்படி வளைவுகள், முடக்குகள் இல்லாமல் ஒரே சீரான நேர்கோட்டுப் பாதையை இவர்கள் இப்போதுதான் பார்க்கின்றார்கள் போலிருக்கிறது. சின்னச் சின்ன ஊர்கள் தொலைவுக்குத் தொலைவில் இருக்கின்றன. ஊர்களைத் தாண்டுகையில் பஸ் ஒரு வித்தியாசமான ஒலியுடன் விரைகின்றது.

ஓமந்தை, புளியங்குளம், கனகராயன்குளம், மாங்குளம், கொக்காவில், இரணைமடு என்று ஓடுகிறது பஸ். முறிகண்டி ஒரு வணக்கஸ்த்தலம். பிரசித்தி பெற்ற விநாயகர் ஆலயம் முறிகண்டியின் முக்கியத்துவம். இரணைமடு தாண்டியதும் கிளிநொச்சி வருகிறது.

வளம் நிரம்பிய மண் கொண்ட கிளிநொச்சி மாவட்டம் வரலாற்று சிறப்புடையது. அடர்ந்து செறிந்த காடுகளையும், வற்றாத குளங்களையும், சிற்றாறுகளையும் கொண்ட பிரதேசம் இது. பொன் கொழிக்கும் பூமியாக இருந்த இந்தப் பிரதேசம் தென்னிந்திய தமிழ் மன்னர்களினதும் தென்னிலங்கை சிங்கள் மன்னர்களினதும் போர்பூமியாக மாறிவிட்ட ஒரு காலம் இருந்தது.

சோழ மன்னர்களின் ஆட்சிக்காலங்களில் தென்னிலங்கையின் சிங்கள மன்னர்களைத் தாக்குவதற்கு யாழ்ப்பாணம் ஒரு தளமாக அமைந்துவிட்டது. சோழர்கள் தங்களது படைகளை யாழ் மண்ணில் நிறுத்தி தெற்கு நோக்கி நகர்த்துவர். சோழர்களின் படை எடுப்பு பற்றி அறிந்ததும் தெற்கின் சிங்கள மன்னர்கள் தங்களது படைகளை வடக்கு நோக்கிக் கிளப்புவார்கள்.

இரண்டு படைகளும் கிளிநொச்சி மாவட்டத்தில் சந்திக்கையில் உக்கிரமான போர் நடக்கும். மன்னர்கள் சண்டையிட்டுக் கொள்வதால் மக்கள் அவதிகளுக்குள்ளாயினர். இப்படி அடிக்கடி சண்டை நடப்பதால் மத்திய வன்னிப் பிரதேச மக்கள் கரையோப் பகுதிகள் நோக்கி நகரத் தொடங்கினர். முல்லைத்தீவு, பூநகரி, யாழ்ப்பாணம் என்று மக்கள் வெளி-யேறிச் சென்றனர். நிலப்பரப்பில் பெரிய தாகவும், குடிசனப்பரப்பில் சிறி யதாகவும் மாறியது கிளிநொச்சி.

19ம் நூற்றாண்டு வரையும் கூட இப்பிரதேசம் கைவிடப்பட்ட பிரதே-தசமாகவே காடடர்ந்து கிடந்து விட்டது.

கிளிநொச்சி பிரதேசத்தில் காணப்படும் சிதைவுற்ற குளங்களும், அனைக்கட்டுக்களும், இடிந்து தகர்ந்த கட்டிடங்களும், தரிசாகி கிடக்கும் விவசாய நிலங்களும், ஒரு காலத்தில் செழிப்புற்ற வளமான பூமியாக இருந்து பிறகு மன்னர்க-ளின் போர்க்களமாகி சிதைவுற்றுப் போன வரலாற்றை சமூகவியல் ஆய்வாளர்கள் குறித்து வைக்கின்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் கிளிநொச்சிப் பிரதேசத்துக்கு ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டு வந்தது. 1920களுக்குப்பின் படிப்படியாக மக்கள் குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன. என்றாலும் நிரந்தா குடியேற்றம் குறைவாகவே இருந்தது.

வளம் மிக்க விவசாய நிலங்களைப் பயன்படுத்திய யாழ்க்குடா நாட்டின் விவசாய மக்கள் கூட விதைப்புக்கும், காவலுக்கும், அறுவடைக்கும் வந்து போகிறவர்களாகவே இருந்தனர். கிளி-நொச்சி மவட்ட மலேரியா அவர்-களைப் பயமுறுத்தி வைத்திருந்தது.

50களுக்குப் பிறகே பாரிய அளவிலான விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. குடியேற்றங்கள் ஆரம்பிக்கத் தொடங்கிய பின் மண்டிக்கிடந்த காடுகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டன. குடா நாட்டு தீவுப் பகுதிகளிலிருந்து வடக்குத் தமிழர்க-ளும், தென்பகுதியின் இந்தியத் தமிழர்களும் குடியேறத் தொடங்கினர்.

கிளிநொச்சிப் பிரதேசக் குடியேற்றம், ஆதிக் குடியேற்றம், விவசாயக் குடியேற்றம், அகதிகள் குடியேற்றம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் குடிசன வளர்ச்சிக்கு விவசாயத்திட்டங்கள் முக்கிய காரணியாவதைப் போலவே இலங்கையின் இனக்கலவரங்களும் இன்னொரு முக்கிய காரணியாக விளங்குகின்றது. தென்பகுதியில் நடத்தப்படும் ஒவ்வொரு இனக்கலவரத்தின் போதும் பெருவாரி யான மலையக மக்கள் கிளிநொச்சி நோக்கி குடிபெயர்ந்துள்ளனர். எழுபதுகளின் பின் மலையக மக்களின் கிளிநொச்சிக் குடியேற்றம் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாய நிலப்பற்றாக்குறை, குடியிருப்பு வசதிக்குறைகள், சமூக அழுத்தம் போன்ற காரணங்களினால் கிளிநொச்சி நோக்கி நகரும் மக்களுக்கு விவசாயக் குடியேற்றத்திட்டம், மத்திய வகுப்புக் குடியேற்றத் திட்டம், படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம், கிராம விஸ்த்தரிப்புத் திட்டம் என்று பாரிய அளவிலான குடியேற்றத் திட்டங்கள் இருப்பதைப் போல் அகதிகளாக ஓடி வந்து குடியேறும் மலையக மக்களுக்கான குடியேற்றத் திட்டங்கள் ஏதும் உருவாக்கப்படவில்லை. உருவாக்கப்படுவதாகத் தெரியவும் இல்லை. என்றாலும் கிளிநொச்சிப் பிரதேசத்துக் குடித்தொகையில் மலையக மக்களின் இணைவு பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியே உள்ளது.

வடக்கிலிருந்தும், மலையகத்திலி ருந்தும் வந்து குடியேறிய தமிழ் மக்களை இருகரம் கூப்பி வரவேற்று வாழ வைத்த கிளிநொச்சியை 'விஸ்க்' கெனத் தாண்டி பரந்தன் நோக்கி ஓடியது எங்கள் குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ். பரந்தன் தாண்டி நேராக ஓடி ஓடி சிறு கடல் மேலோடும் பாலம் கடந்து இருபக்க உப்பளங்கள் உப்புக் காற்று வீச ஓடி வரும் இடம் ஆணையிறவு.

ஆணையிறவு என்றாலே சண்டைதான். வவுனியாவுக்கப்பால் யாழ்ப்பாணம் வரையிலான பாதையில் இலங்கை அரசின் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள ஒரே இடம் இந்த ஆணையிறவு இராணுவ முகாம்தான். அதைத் தக்க வைத்துக்கொள்வது அவர்களுடைய கௌரவப்பிரச்சினை. பிடித்துக்கொள்ளவேண்டும், பிடுங்கிக்கொள்ள வேண்டும் என்பது அவர்களது கௌரவப் பிரச்சினை. ஆகவேதான் இடைவிடாத சண்டை. எத்தனையோ முறை சண்டை.

இராணுவப் பாதுகாப்புக் கருதி கிளி-நொச்சிப் பாதையை பரந்தனில் இராணுவம் மூடிவிட்டது. பரந்தனூடான பாதையையும்; பூநகிரி ஏரியினூடான பாதையையும் இராணுவம் மூடிக்கொண்ட காலத்தில் பரந்தனில் இருந்து முல்லைத்தீவுப் பாதையில் முரசுமோட்டையூடாக ஆனையிறவு தாண்டி இயக்கச்சிக்குச் சென்று யாழ் செல்லப் புதுப்பாதை கண்டுபிடித்து பயணம் மேற்கொண்டனர் அவசரப் பயணிகள்.

எங்களுக்கு அப்படி ஏதும் சிரமங்கள் இல்லை. யாழ்ப்பாணத் தீபகற்பத்தை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் பாலம் தாண்டி ஆனையிறவின் அழகிய முகம் தாண்டி ஓடிக் கொண்டிருந்தோம்.

(தொடரும்)

# யாழ்ப்பாணத்தில் தமிழ் புத்தகக் கண்காட்சி



இம்மாதம் சென்னையில் வருடாந்த புத்தகக் கண்காட்சி விமரிசையாக நடைபெறவிருக்கிறது. மிகச் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டு இன்று பல்கோடி ரூபா பெறுமதயான நூல்களை விற்றுத் தீர்கின்றன பிரமாண்டமான புத்தக சந்தையாக இக்கண்காட்சி மாறியுள்ளது. இதன் வெற்றி, ஏராளமான புதிய நூல்களின் வருகைக்கும், அச்சு நேர்த்தி, வடிவமைப்பு, தொழில்நுட்பத் தரம் போன்ற ஏனைய அம்சங்களின் வளர்ச்சிக் கும் வழி கோலியது. புத்தகம் வாங்குவோரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதோடு, ஏராளமான தலைப்புகளின் கீழ் பல்துறை சார் நூல்கள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. இந்த விழிப்பை சென்னை நூல் கண்காட்சிதான் ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

சமீபகாலமாக கொழும்பிலும் பிரமாண்ட நூல் கண்காட்சி ஒவ்வொரு செப்டெம்பரிலும் நடை-பெற்று வருகிறது. இலங்கை நூல் வெளியீட்டாளர் சங்கம் இதை ஏற்பாடு செய்து வருகிறது. சென்னையைப் போலல்லாது நமக்கென ஒரு பண்டாரநாயக்க சர்வ-தேச மாநாட்டு மண்டபம் உள்ளது. இக்கண்காட்சியின் பலனாகத் தூங்கிக் கொண்டிருந்த சிங்கள பதிப்புத்துறை இன்று எழுச்சி பெற்றுள்ளது. சென்னை கண்காட்சி என்னென்ன நன்மைகளை ஏற்படுத்தினவோ அவற்றை எல்லாம் இலங்கையிலும் கொழும்பு கண்காட்சி உருவாக்கியுள்ளது. இன்று ஏராளமான சிங்கள நூல்கள் உள்ளடக்கத்திலும் வடிவமைப்பிலும் சிறப்புற்றதாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஒரு பதிப்பாளரிடம் இது பற்றி பேசிக்கொண்டிருந்தபோது, ''தூர இடங்களில் இருந்தது வாகனம் பிடித்துக்கொணடு சிங்கள குடும்பங்கள் இங்கே வருகின்றன. பலர் சொந்த வாகனங்களில் குடும்பத்தினர், நண்பர்களுடன் வருகிறார்கள்'' என்று கூறினார்.

இக்குடும்பங்கள் முழு நாளையும் இங்கே செலவிடுகின்றன. சாப்பிட்டு, குடித்து, புத்தகம் தெரிவுசெய்து, இளைப்பாறி, சிற்றுண்டி அருந்தி நூல் வாங்கி என நாளைச் செலவிடுகிறார்கள். இதை ஒரு இலக்கிய சுற்றுலாவாக அவர்கள் கருதுகிறார்கள். சிங்கள வாசகர்கள் மத்தியில் இந்தக் கலாசாரம் வந்து விட்டது. நான் இவர்களை மெய்மறந்து அவதானித்துக் கொண்டிருப்பேன் என்கிறார் இவர்.

சரி, தமிழ் வாசகர்கள் எப்படி? என்று அவரிடம் கேட்டேன்.

''இந்தக் கலாசாரம் இன்னும் நம்மிடம் உருவாகவில்லை. தமிழர்கள் குடும்பத்தோடு கோல்பேசுக்கும் படம் பார்க்கவும் போவார்களே தவிர புத்தகம் வாங்க வரமாட்டார்கள். ஒவ்வொரு வருடமும் அதே குறிப்பிட்ட சனம்தான் வந்து கொண்டிருக்கிறது. அவர்க-ளும் கொழும்புவாசிகள். அறுபதுகளில்தான் புத்தகம் வாசிப்பது வீண் வேலை என பெற்றோர் நினைத்துக் கொண்டிருந்தார்கள் என்றால் இன்றைக்கும் அடிப்படையில் இந்த எண்ணத்தில் பெரிய மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. பாடசாலைகளின் வருகையால் காலம் ஓடிக்கொண்டிருக்கிறது'' என்கிறார் இன்னொரு நூல் விற்பனையாளர்

பெற்றோர் மட்டுமல்ல; மாணவர்களும் புத்தகம் என்றால் அது பாடபுத்தகம்தான். படிப்பு முடிந்ததும் வேறு எதையும் படிக்கவேண்டியதில்லை. நூல், சஞ்சிகை வாங்குவது வீண் செலவு என்றே எண்ணுகி-றனர். இதனால் சிங்கள புத்தக விற்பனை நிலையங்களில் மக்கள் மொய்த்துக் கொண்டிருக்க, தமிழ் புத்தக ஸ்டோல்களில் ஈ விரட்ட வேண்டியிருக்கிறது.

பல வருடங்களாக நாட்டில் நிலவிய அசாதாரண நிலை, பீதி போன்ற காரணங்களை இன்னும் எத்தனை காலத்துக்கு சமாதானமாக சொல்லிக்கொண்டிருப்பதாம்?

''வாசிப்பு கலாசாரத்தையும் நூல் வாங்கும் பழக்கத்தையும் நம் தமிழர் மத்தியில் உருவாக்கியே ஆகவேண்டும். அதற்கான ஏற்பாடுகளையும் திட்டங்களையும் வகுக்கவேண்டும். வேறு வழி கிடையாது'' என்கிறார் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் ஸ்ரீதர்சிங்.

தமிழ்ப பதிப்பகங்கள், நூல் விற்பனையாளர்கள் ஒன்றிணைந்து நூல் கண்காட்சி ஒன்றை யாழ்ப்பாணத்தில் பரீட்சார்த்த ரீதியாக நடத்தவேண்டும். அதன் வெற்றியைப் பார்த்து கொழும்பு, மட்டக்களப்பிலும் நூல் கண்காட்சியை நடத்தவேண்டும். சரியாகத் திட்டமிட்டு நடத்தினால் வெற்றி கிடைக்கும் என்பது அவரது யோசனை.

ஸ்ரீதர்சிங்கின் யோசனை பொன்னானது. ஆனால் இதற்கான முன்முயற்சிகளை தமிழ்ச்சங்கத்தின் ஆதரவோடும் யாழ். பல்கலைக்கழக அனுசரணையோடும் அவர்தான் ஆரம்பித்து வைக்கவேண்டும். ஏனெனில் அதற்கான தகுதியும் ஆளுமையும் அவரிடம்தான் உள்ளது. இந்த முயற்சிக்கு அனைவருமே ஆதரவு வழங்க முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீதர் ஐயாவின் யோசனையை பகிரங்கப்படுத்தி விட்டோம். ஆரம்ப நடவடிக்கைகள் உற்சாகமாக நடக்கட்டும், இந்தப் புத்தாண்டில்!

- சத்யா

# எம்.எஸ்.எக்ஸலில் இரண்டு தேதிகளுக்கிடையே வித்தியாசத்தைக் கண்டறிய

வானவில் dot.com

ஜீசா

எம்.எஸ்.எக்ஸலில் இரண்டு தேதிகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தை ஒன்றிலிருந்து மற்றொன்றைக் கழிப்பதன் மூலம் இலகுவாக நாட்களில் கணித்து விடலாம். எனினும் இரண்டு தேதிகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தை வருடங்களில் மாதங்களில் நாட்களை எப்படி கண்டறிவது? அதற்கும் ஒரு இலகுவான வழி முறை எக்ஸ்லில் உள்ளது..

இதற்கு எக்ஸலில் உள்ள DATEDIF எனும் பங்ஸன் (function) பயன்படுத்தப்படுகிறது. இந்த Datedif எனும் பங்ஸனை = Datedif (திகதி1, திகதி2, விடை காண வேண்டிய வடிவம்) =DATEDIF(Date1, Date2, OutputRequirement) எனும் ஒழுங்கிலேயே வழங்க வேண்டும். OutputRequirement எனுமிடத்தில் மேற்கோள் குறிகளுக்கிடையே "Y" என வழங்கும் போது வருட வித்தியாசத்தையும் "M" என வழங்கும்போது மாதங்களின் வித்தியாசத்தையும் "D" என்பது நாட்களின் வித்தியாசத்தையும் தரும். இங்கு திகதி1 ஐ விட திகதி2 பெரிதாக இருக்க வேண்டும் என்பதையும் கவனத்திற் கொள்ளுங்கள்..

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | வயதைக் கணிக்க.. | | |
| 2 | பிறந்த திகதி | 28/07/1993 | |
| 3 | இன்றைய திகதி | 31/12/2012 | |
| 4 | | | |
| 5 | வருடங்கள் | 19 | B5=DATEDIF(B2,B3,"Y") |
| 6 | மாதங்கள் | 5 | B6=DATEDIF(B2,B3,"YM") |
| 7 | நாட்கள் | 3 | B7=DATEDIF(B2,B3,"MD") |
| 8 | | | |
| 9 | இன்று உன் வயது 19 வருடங்கள்,5 மாதங்கள்,3 நாட்கள். | | |

உதாரணமாக 28/07/1993 எனும் திகதிக்கும் 31/05/2012 எனும் திகதிக்கும் இடையில் எத்தனை வருடங்கள் உள்ளன? எத்தனை நாட்கள் உள்ளன? எத்தனை மாதங்கள் உள்ளன எனக் கணக்கிட முதலில் எக்ஸல விரிதாளில் B3 எனும் செல்லில் 28/07/1993 எனும் திகதியையும் B4 எனும் செல்லில் 31/05/2012 எனும் திகதியையும் உள்ளீடு செய்யுங்கள். திகதியை உள்ளீடு செய்யும்போது உங்கள் கணனியில் திகதி உள்ளீடு செய்யும் வடிவத்தையும் (Date format) கவனத்திற் கொள்ள மறந்து விடாதீர்கள் அனேகமாக விண்டோஸில் MM/DD/YYYY (மாதம்/திகதி/வருடம்) எனும் திகதி வடிவமே இயல்பு நிலையில் இருக்கும்

அடுத்து இரண்டு திகதிகளுக்கிடையிலுள்ள வருட வித்தியாசத்தைக் கண்டறிய B6 எனும் செல்லில் =DATEDIF(B3>B4 "Y") எனும் சமன்பாட்டை டைப் செய்யுங்கள். விடையாக 9 (வருடங்கள்) வரக் காணலாம். அதேபோல் இரண்டு திகதிகளுக்கிடை-யேயுள்ள மாதங்களின் எண்ணிக்கையைக் காண B7 எனும் செல்லில் =DATEDIF (B3,B4,"M") எனவும் நாட்களின் வித்தியாசத்தைக் காண B8 எனும் செல்லில் =DATEDIF (B3,B4,"D") எனவும் வழங்குங்கள்.

இன்னும் சற்று மாறுதலாக இன்றைய திகதிக்கு உங்கள் வயது என்ன என்பதைக் கண்டறிய வேண்டுமானால் மேற் சொன்ன சமன்பாட்டில் சிறிய மாற்றத்தைச் செய்ய வெண்டும்.

உதாரணமாக B2 எனும் செல்லில் உங்கள் பிறந்த திகதியையும் B3 எனும் செல்லில் இன்றைய திகதியையும் டைப் செய்யுங்கள். B5 எனும் செல்லில் =DATEDIF(B2,B3,"Y") எனும் சமன் பாட்டை வழங்கும் போது வருட வித்தியாசம் கிடைக்கும். அவ்வாறே B6 எனும் செல்லில் =DATEDIF(B2,B3,"YM") என வழங்குங்கள். வருடங்கள் நீங்களாக மாத வித்தியாசம் கிடைக்கும். B7 எனும் செல்லில் =DATEDIF(B2,B3,"MD") எனும் சமன்பாட்டை வழங்க வருடங்களையும் மாதங்களையும் தவிர்த்து நாட்களின் வித்தியாசம் மாத்திரம் கிடைக்கும்.

இதே சமன்பாட்டை இன்னும் சற்று மாற்றி இன்று உன் வயது வருடங்கள், மாதங்கள், நாட்கள் எனவும் காட்டலாம்.

அதற்கு எக்ஸ்லில் உள்ள TEXT எனும் பங்ஸனையும் பிரயோகிக்க வேண்டும். இந்த பங்ஸன் என் பெறுமானத்தை டெக்ஸ்டாக மாற்றி விடுகிறது.


அதற்கு வேறொரு செல்லில் = "இன்று உன் வயது & TEXT(B5, "0") & " வருடங்கள், & TEXT(B6, "0") & " மாதங்கள்," & TEXT(B7, "0") & " நாட்கள்." என வழங்குங்கள்.

இன்று உன் வயது 19 வருடங்கள், 5 மாதங்கள், 3 நாட்கள். எனும் விடையை எக்ஸல் காண்பிக்கும்.

## திகதி வடிவத்தை மாற்றுவது எப்படி?

எம்.எஸ்.எக்சல் விரிதாளில் ஒரு திகதியை உள்ளீடு செய்யும் போது விண்டோஸ் இயங்கு தளத்தில் என்ன திகதி வடிவம் உள்ளதோ அதே வடிவிலேயே உள்ளீடு செய்ய வேண்டும்.. அப்போதுதான் திகதி சார்ந்த கணிப்புக்களை மேற்கொள்ள முடியும்.

வழமையாகப் பயன்பாட்டிலுள்ள திகதி- மாதம்- வருடம் (DD-MM-YYYY) எனும் வடிவத்தில் திகதியை வழங்கும் போது அதனை ஒரு திகதியாக எக்ஸல் ஏற்றுக் கொள்வதில்லை. காரணம் விண்டோஸ் இயங்கு தளத்தில் மாதம்- திகதி- வருடம் (MM-DD-YYYY) எனும் அமைப்பே இயல்பு நிலையில் இருக்கும்.




எனினும் நீங்கள் விரும்பும் திகதி வடிவிற்கு அதனை மாற்றிக் கொள்ளும் வசதியை விண்டோஸ் தருகிறது.

விண்டோஸ் 7 இயங்கு தளத்தில் திகதி வடிவை மாற்ற முதலில் கன்ட்ரோல் பேணலில் நுழையுங்கள். அங்கு Clock, Region and Language என்பதைத் தெரிவு செய்யுங்கள். தோன்றும் டயலொக் பொக்ஸில் Formats டேபை க்ளிக் செயது Date and Time Formats என்பதன் கீழ் Short Date மற்றும் Long Date என்பவற்றின் கீழ் உரிய திகதி வடிவைத் தெரிவு செய்யுங்கள்.

## Scroll Wheel பட்டன் எதற்கு?




மவுஸின் இரண்டு பட்டன்களுக்கு நடுவே உள்ள Scroll Wheel பட்டனை நீங்கள் இது வரை திரையை மேலும் கீழும் நகர்த்தவே (scroll) பயன்படுத்தியிருய்பீர்கள். எனினும் அதனைத் தவிர மேலும் சில செயற்பாடுகளுக்கும் Scroll Wheel பட்டனைப் பயன் படுத்தலம்.

இந்த ஸ்க்ரோல் பட்டனைக் கொண்டு ஒரு இணைய தளங்களைப் பார்வையிடப் பயன்படும் ப்ரவுஸரில் ஏதேனும் ஒரு இணைய பக்கத்தில் ஒரு இணைப்பின் மேல் க்லிக் செய்ய அந்த லின்ங் ஒரு புதிய டேபைத் திறந்து கொள்ளும்.



அதேபோன்று திறந்து கொண்ட டேபை மூடி விடவும் இதே ஸ்க்ரோல் பட்டனைப் க்ளிக் செய்து மூடலாம்.

மேலும் இதே பட்டனைக் கொண்டு பிரவுசா, மற்றும் எம்.,எஸ்,வர்ட் போன்ற பயன் பாட்டு மென்பொருள்களில் விசைப் பலகையில் [CTRL] விசையை அழுத்தியவாறே ஸ்க்ரோல் பட்டனை மேலும் கீழும் சுழற்றும் போது அப்பக்கம் பெரிதாகத் தெரிவாவதையும் (zoom in) மறுபடி சிறிதாவதையும் (Zoom out) காணலாம்.

## Akura SMS பாடசாலை நிர்வாக மென்பொருள்

அக்குர - என்பது நவீன தொழில் நுட்பங்களைப் பயன் படுத்தி ஒரு பாடசாலைச் சூழலைத் திற மையாகவும் வினைத் திறன் மிக்கதாகவும் நிர்வகிக்க வல்ல இணையம் சார்ந்த ஒரு பாடசாலை முகா மைத்துவ மென்பொருளாகும். (School Management System). இது இலங்கையின். அரச மற்றும் தனியார் பாடசாலைகளை இலக்காகக் கொண்டு உருவாக் கப்பட்டுள்ளது. இம்மென்பொருள் பாடசாலைக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் பாடசாலை நிர்-வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பெற் றோர்களை ஒன்றிணைக்கக் கூடிய ஒரு தளமாக அக்குர மென்பொருள் உருவக்கப்பட்டுள்ளது.

ஒரு பாடசாலையின் நாளாந்த நடவடிக்கைகளான மாணவர்களின் வரவு பதிதல், மாணவர்களின் கல்வி மற்றும் இணைப் பாட விதான நடவடிக்கை களை அவதானித்தல், முன்னேற்ற அறிக்கைகள் உருவாக்குதல் போன்ற ஏராளமான விடயங்கள் அக்குர மென்பொருளில் உள்ளடக்கப்ப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவனினதும் கல்வி விருத்தியை அவதானிக்கக் கூடிய அதே வேளை அதிபா் ஒவ்வொரு வகுப்பு மற்றும் தரங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கக் கூடியதாக இது உருவாக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், அதிபர்கள் மாத்திரமன்றி பெற் றோர்களும் வீட்டிலிருந்தவாறே இணையம் மூலம் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை அவ தானிக்கக் கூடிய வசதியையும் அக்குர தருகிறது.

மேலும் பெற்றார் மற்றும் ஆசிரியர்களுக்கிடை யிலான தொடர்பாடல் அரிதாக இடம்பெறும் இக் கால கட்டத்தில், பெற்றார் மற்றும் ஆசிரியர்களுக்கி டையிலான உறவைப் பேணுவதில் அக்குர மென்பொருள் ஒரு பாலமாக அமைவதுடன் மாண வர்களின் கல்வி விருத்திக்கு ஒரு அளப்பரிய சேவையை வழங்குகிறது. இலங்கையின் பல பிரபல பாடசாலைகளில் தற்போது அக்குர மென்பொருள் நிறுவப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் அக்குர என்பது ஒரு இணையம் சார்ந்த மென்பொருளாயிருப்பதனால் அதனை உலகின் எப்பாகத்திலிருந்தும் எந்நேரத்திலும் அணுக கூடியதாயிருப்பது அதன் சிறப்பம்சமாகும்.

அக்குர மென்பொருளை ஐக்கிய அமெரிக்க நாட்டில் தலைமையகத்தைக் கொண்ட Virtusa எனும் மென்பொருள் தயாரிப்பு நிறுவனத்தின் இலங்கைப் பிரிவினரால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் உருவாக்கத்தில் நம் நாட்டு இளைஞர்களே முழுமையாகப் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் இவ்வாறான ஒரு மென்பொருளைக் கொள்வனவு செய்ய இலங்கை நாணயத்தில் சுமார் ஒரு இலட்சம் ரூபா வரையில் செலவு செய்ய நேரி டும். எனினும் Virtusa நிறுவனம் இதனை அரச மற்றும் தனியார் பாடசாலைகளுக்கு இலவசமாகவே வழங் குகிறது. அதாவது இதனை மேலும் மேன்படுத்தும் நோக்கில் ஒரு இலவச திறந்த மூல மென்பொரு ளாக (Free Open Source Software) வடிவமைத் துள்ளது 33.3 MB பைல் அளவு கொண்ட இம்மென்பொருளை http://akuraschools.org எனும் இணைய தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

அக்குர மென்பொருள் பல்வேறு வசதிகளைக் கொண்டிருந்தாலும் இதனைக் கணனியில் நிறுவு-வதிலும் பயன்பாட்டிலும் பாடசாலை நிர்வாகத்தினர் சற்று சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் என்பதால் பாடசாலை நிர்வாகத்தினருக்கு உரிய பயிற்சியை வழங்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என் எதிர்பார்க்கப்படுகிறது.

# face பக்கம்


Share

FaceBook, Twitter, Blog பிரியர்களே!
இப்போது வண்ணவானவில் Facebook, Twitter, Blog உடன் நீங்களும் சுவாரஷ்யமான விடயங்களை Share, Tag பண்ணலாம். சிறந்தவை இங்கே பிரசுரமாகும்.

வண்ண வானவில் விலாசங்கள்:

facebook :- vannavaanavil@facebook.com
Twitter :- vannavaanavil@twitter.com
Blog :- vannavaanavil@blogspot.com






sarath@ facebook




Balaji Pillai@ facebook

Love சொல்லி
பதில் வரலைன்னா கூட தாங்கிக்கலாம்..
exam ல கூப்பிட ...... கூப்பிட .......
நண்பன் திரும்பாம
இருக்கிற வலிய தாங்கவே முடியாது...




Nithila Devi1 @ facebook




Arun Kumar@ facebook




Nirmal Kumar@ facebook




பெண்ணை காதலித்தேன்
நண்பனை மறந்தேன்

ஒரு நாள் விபத்து

காதலி வந்தால்
முத்தம் கொடுத்தால் !!

நண்பன் வந்தான்
ரத்தம் கொடுத்தான் !!



Sugu Teddy@ facebook

லவ்வர் ஒரு Rubber band மாதிரி

லூசா விட்டா கலண்டு போய்டும்....!
டைட்டா பிடிச்சா அத்துட்டு போய்டும்....!!!




கலைஞர் | சோ | MGR | மன்மோகன் சிங் | TR

1) கருப்பு கண்ணாடி இல்லாமல் கலைஞர்
2) முடியுடன் சோ
3) குல்லா இல்லாமல் MGR
4) டர்பன் இல்லாமல் மன்மோகன் சிங்
5) தாடி இல்லாமல் T.R

Mani Srikanthan
Cartoonist@ facebook



Srinivasan Jayaraman@ facebook

கீழ் வரிசையில் இடப்புறத்தில் கமல்ஹாசனின் தாயார் ராஜலக்ஷமி வலது புறத்தில் கமலின் தந்தை ஸ்ரீநிவாசன் இருப்பதை பார்க்கலாம். இவர்களுக்கு நடுவில் குட்டி கமல் அமர்ந்திருப்பதையும், நிற்பவர்களில் வலதுபுறத்தில் முதலாவதாக சாருஹாசன், அடுத்ததாக சந்திரஹாசன் இருப்பதையும் காணலாம்.

தொகுப்பு:
பா. பிரதீப்

தொகுப்பு: ஜெயா



## வானவில் மங்கை



# தாயே குழந்தையின் முதல் ஆசான்

குழந்தைக்கு யாதுமாகி நிற்பவள் தாய். அவள்தான் குழந்தையின் முதல் டீச்சர். மற்றவர்கள் எல்லாம் அப்புறம்தான். எனவே ஒரு பெண் தாயானதும் தன் பழக்க வழக்கங்களையும் பேசும் முறைகளையும் தகுந்த மாதிரி மாற்றிக்கொள்ளவேண்டும்.

பெண்ணின் ஒப்பற்ற வடிவமாக தாய் கொள்ளப்படுகிறாள். அதனால்தான் மாதா, பிதா,குரு,தெய்வம் என அவளை முதன்மைப்படுத்துகின்றார்கள். ஒரு குழந்தை கருவிலிருக்கும்போது தாயின் பேச்சை கேட்டு கற்றுக்கொள்ள ஆரம்பித்து விடுகின்றது. இதனால் ஒரு தாய் கருவுற்றிருக்கும்போதே அவள் நல்ல இசையை கேட்க வேண்டும். நல்ல வார்த்தைகளை பேச வேண்டும். நல்ல எண்ணங்களை வளர்த்து கொள்ள வேண்டும் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பிறந்ததும் குழந்தை தாயுடனேயே நிறைய நேரத்தை கழிப்பதால் அவளின் நடை உடை பாவனைகள் மட்டுமன்றி பேச்சையும் கற்றுக்கொள்ள முற்படுகிறது. தவறான பேச்சை கற்றுக்கொண்டால் குழந்தைகள் பாடசாலையிலும் பொது இடங்களிலும் சரி அவமதிப்பை பெறுகின்றனர். இது அவர்களுக்கு மட்டுமல்ல தாய்தந்தைக்கும் இது இழுக்கேயாகும். வீடே குழந்தையின் முதற்பள்ளிக்கூடம். அதில் தாயே முதல் ஆசான். ஆகவே அவளுக்கே பெரிய பொறுப்பு உண்டு. தன் பேச்சிலும், நடத்தையிலும் அவள் வெகு கவனமாக இருக்க வேண்டும்.

குழந்தைகளின் முன்னால் மற்றவர்களின் குறைகளை பேசக்கூடாது. காலை வணக்கம் செய்யப் பழக்குவதுடன், இரவு வணக்கம், எதையாவது பெற்றுக்கொண்டால் நன்றி, வீட்டிற்கு வருபவர்களை புன்முறுவலுடன் வரவேற்றல், தவறு இழைத்துவிட்டால் மன்னிப்பு கேட்டல் போன்ற பண்புகளை கற்றுக்கொடுங்கள். முக்கியமாக பெரியவர்களை மதிப்பதற்கு கற்றுக்கொடுங்கள்.

மேலும் எல்லோருடனும் பகிர்ந்துண்ண பழக்குங்கள். காக்கை, குருவி, ஊனமுற்றோருக்கு உணவளித்து அறம் செய்ய பழக்குங்கள். தற்போது சிறுவர்களிடம் குறைந்துவரும் சேமிப்பு பழக்கத்தை ஊக்கப்படுத்துங்கள். அக்காலத்தைப் போலன்றி இன்று வீட்டுக்கு வீடு உண்டியல் இருக்கிறது. அதுமட்டுமல்ல, பொழுது போக்காக முத்திரைகள், பல நாட்டு நாணயங்கள் சேகரிக்கும் பழக்கமும் மறைந்துகொண்டே போகின்றது.

இதேசமயம் இன்று குழந்தை வெளியில் விளையாடக்கூட போகாமல் கணினியில் விளையாடிக்கொண்டிருக்கின்றது. கணனியே கதி என்றிருப்பது நல்ல பழக்கம் அல்ல. இதனால் கண்ணாடி அணியவும் சிலருக்க ஏற்படுகின்றது. பலருக்கு உடல் பெருத்து விடுகிறது.

இதைத் தவிர்க்க குழந்தைகளை சில மணி நேரமாவது ஓடி ஆடி விளையாட விடுங்கள். இது அவர்களுக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் மகிழ்ச்சியைத் தரும். அவர்களின் சிறிய செயலையும் பாராட்டி ஒரு கைத்தட்டலோ அல்லது அணைத்து முத்தமிட்டாலோ போதும்! அதுவே அவர்களுக்கு நாம் கொடுக்கும் உற்சாக டொனிக்காகும்.

பாடங்களை அவர்கள் ஞாபகம் வைத்துக்கொள்ள பாடமாகவோ, பாட்டாகவோ சொல்லிக்கொடுக்கலாம். ஞாபகம் வைத்துக்கொள்வதற்காக பாடத்தை பலமுறை கூறி அவர்களை வெறுப்புக்குள்ளாக்காமல் சிலநாள் கழித்து திரும்ப அதை ஞாபகப்படுத்துவது மிகச் சிறந்தது.

கடவுளை வணங்கும் போது அவர்களையும் அருகில் அமர்த்தி வணங்கினால் அவர்களும் நாளடைவில் தாமாகவே வணங்க ஆரம்பித்துவிடுவார்கள். முக்கியமாக உணவு பழக்க வழக்கதை கற்றுக்கொடுக்க வேண்டும். எல்லா வகையான உணவுகளையும் உண்பதற்கு பழக்கவேண்டும். கடைகளில் உணவை வாங்கிச் சாப்பிடும் பழக்கத்துக்கு குழந்தைகளை அடிமையாக்க வேண்டாம். இது அவர்களின் உடல் நலத்திற்கு மட்டுமல்ல உங்களை பற்றிய தவறான அபிப்பிராயத்தையும் ஏற்படுத்திவிடும். இதனால் இயலுமானவரை சுத்தமாக அவர்கள் விரும்பிய வடிவில் சத்தான உணவுகளை நீங்களே உங்கள் கைகளால் குழந்தைக்கு செய்து கொடுப்பதால் அது பாசம் நிறைந்த ஒரு முழுமையான உணவாக இருக்கும்.

## டிப்ஸ்



தேங்காயை உடைத்த உடனேயே துருவியெடுத்து பிளாஸ்டிக் பையில் போட்டு ப்ரீசரில் வைத்தால் ஒரு வாரம் வரை கெடாது.

~



இட்லிமா புளிக்காமலிருக்க மாவில் இரண்டு அல்லது மூன்று வெற்றிலைகளைப் போட்டு வைக்கலாம்.

~



சில துளி தேங்காய் எண்ணெயைக் கண்களைச் சுற்றி தினந்தோறும் தடவி வந்தால் கண்களைச் சுற்றியுள்ள கரு வளையம் மறைந்தே போய்விடும்.

~



முள்ளங்கிச் சாற்றினை தேன் கலந்து சாப்பிட்டால் இருமல் நீங்கும்.

~

தையல் ஊசியைப் பயன்படுத்தி விட்டு முடிந்த பவுடர் டப்பாவில் போட்டு வைத்தால் ஊசி துருப்பிடிக்காது.



# ஹீல்ஸ் அணியலாமா?

சந்தையில் விதவிதமான பல வர்ணங்களிலும் பல வேலைப்பாடுகளுடனும் வருகின்ற இவ்வகையான காலணிகள் பெரியவர்களை மட்டுமல்ல சிறுவர்களையும் வெகுவாகவே கவர்கின்றது. இது குள்ளமானவர்களை உயரமாகக் காட்டுவதால் அவர்களுக்குள் தன்நம்பிக்கை வளர்ப்பதாக உள்ளது. இதனால் ஆசிரியைமார் உட்பட பலர் இக்காலணிகளை அணிந்து கம்பீரமாக நடப்பதை காணலாம். ஆனால் இதன் பின் விளைவுகளைப் பற்றி தெரிந்தாலும் அதன் பாதிப்பை உணர்ந்தாலும் வெளியில் காட்டிக்கொள்வதில்லை.

முன்னங்கால் பதிந்து பின்னங்கால் அதிகமாக உயர்வதால் பின்னங்கால் சிலருக்கு சிவந்து காணப்படலாம். வெளியில் தெரியாவிட்டாலும் உள்ளே உள்ள எலும்பில் காயமோ, முறிவோ ஏற்பட்டிருக்கலாம். நிறைய நேரம் அணிந்திருந்தால் இரத்த ஓட்டம் சீராக நடைபெறாமல் சுளுக்கு, கால் வலி, பிடிப்பு, முழங்கால் வலி, இடுப்பு வலி ஏற்படலாம். நடக்கும்போது உடல் முன்தள்ளப்பட்டு கூன் விழும் சாத்தியமும் முள்ளந்தண்டில் விரிசல் ஏற்படக்கூடிய வாய்ப்பும் ஏற்படலாம். சிலருக்கு குதிகால் நரம்பு பாதிக்கப்பட்டு நியுரோமா எனப்படும் வலி கூட ஏற்படலாம். இவற்றை முடிந்தவரை தவிர்த்துக்கொள்ள இவ்வகை குதியுயர்ந்த காலணியின் உயரம் 2 அங்குலத்தை விட அதிகமாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதிக நேரம் அணிவதை தவிர்த்து கொள்வது நன்று. தோல்களால் செய்யப்பட்ட காலணிகளை வாங்கவதே சிறந்தது. இது ஈரத்தன்மையை உறிஞ்சி காற்றோட்டத்தை பாதங்களுக்கு தரும்.

அதைவிட முக்கியம் வீட்டிற்கு வந்ததும் காலை இளஞ்சுடுநீரில் 5 நிமிடம் வைத்து எடுத்து கழுவிவிட்டு துடைத்து பின் கால்களை நீட்டி அமர்ந்து பாதங்களை வட்டவடிவில் சுழற்றி நன்கு அழுத்தி விடவேண்டும். விரும்பினால் ஏதாவது கிரீமை தடவி மசாஜ் செய்து விட்டு உறங்கச் செல்லலாம். பாதங்களுக்கும் நல்ல ஓய்வு கிடைக்கும். இதனால் உடல் முழுவதும் நன்மை பெறும். காரணம் எல்லா நரம்புகளும் பாதங்களுடன் தொடர்புடையது. இதனால் நாங்கள் பாதங்களிலுள்ள நரம்பு முடிச்சு உள்ள மையங்களை அழுத்தும்போது பல வியாதிகளுக்கு நிவாரணம் கிடைக்கும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அழகிற்காக மட்டும் ஒரு காலணியை தேர்ந்தெடுக்காமல் ஆரோக்கியத்தையும் சற்று மனதில் இருத்தி தெரிவு செய்யுங்கள்.



# மரக்கறி பணிஸ்

## நீங்களும் செய்யலாம்!

**கறி செய்வதற்கு**

| | |
|---|---|
| அவித்த கிழங்கு | - 250g |
| பெரிய வெங்காயம் | - 1 |
| மல்லித்தூள் | - 1 தேக்கரண்டி |
| மஞ்சள் தூள் | - ½ தேக்கரண்டி |
| இஞ்சி, பூடு விழுது | - 1 தேக்கரண்டி |
| மிளகுத் தூள் | - 1 தேக்கரண்டி |
| கடுகு | - ½ தேக்கரண்டி |
| பெருஞ்சீரகம் | - ½ தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | - தேவையானளவு |
| உப்பு | - தேவையானளவு |
| எண்ணெய் | - தேவையானளவு |
| தேசிக்காய்ச்சாறு | - 1 தேக்கரண்டி |


**பண் செய்வதற்கு**

| | |
|---|---|
| கோதுமை மா | - 400g |
| ஈஸ்ட் | - 2 மேசைக்கரண்டி |
| சீனி | - 2 மேசைக்கரண்டி |
| பட்டர் | - தேவைக்கேற்ப |
| இளஞ்சூட்டு நீர் | - 2 மேசைக்கரண்டி |

**செய்முறை:**

ஒரு கிண்ணத்தில் ஈஸ்ட்டையும் சீனியையும் சேர்த்து இளஞ்சூட்டு நீரை சேர்த்து மூடி 10 நிமிடம் கழித்து பார்த்தால் அது பொங்கியிருக்கும். அதை மாவில் சேர்த்து உப்பு, பட்டர் கலந்து நீர்விட்டு பிசைந்து ஈரத்துணியால் மூடி 2 மணித்தியாலங்கள் வைத்துவிட்டு எண்ணெய் விட்டு பாத்திரத்தில் கடுகு, பெருஞ்சீரகம், கறிவேப்பிலை போட்டு பொரிந்ததும் வெங்காயம், பச்சை மிளகாய், சேர்த்து வதக்கி பின் மஞ்சள், மிளகு, மல்லிப்பொடிகளை தூவி கலக்கவும். பின் அவித்த கிழங்கை மசித்து சேர்த்து உப்பு கலந்து அடுப்பை நிறுத்தி தேசிக்காய் சாறு கலந்து பிசைந்து மாவின் நடுவில் வைத்து முக்கோணமாக மடித்து விரும்பினால் முட்டைத் தடவி அவனில் 180C யில் 20 நிமிடம் பேக் செய்யவும்.

# வாய்மையே வெல்லும்



கையில் பையோடு சோர்வாக வீடு திரும்பிய கதிரிடம் அவனது அப்பா வேலு கேட்டார்,

''என்னடா, உன்னோட ஏ.எல் மார்க்ஷீட்டை எடுத்துக்கிட்டு என்ஜினியரிங் காலெஜில சேரப்போனாயே, என்ன ஆச்சு...?

என்னோட மார்க் குறைவா இருக்காம். கல்லூரியிலே சேர்த்துக்க முடியாதுன்னு சொல்லிட்டாங்கப்பா..."

''சரி, அப்போ புதுசா ஆரம்பிச்சிருக்கிற பொறியியல் கல்லூரியை பார்த்திருக்கலாமே!"

அங்கேயும் என்னோட மார்க் குறைச்சலா இருக்கிறதாலே. ஐந்து லட்சம் ரூபாய் கல்லூரிக்கு டொனேஷன் கொடுத்தால்தான் சேர்க்க முடியும்னு சொல்லிட்டாங்கப்பா."

''உன்னோட அப்பாவின் ஆஸ்தி எல்லாத்தையும் மொத்தமாச் சேர்த்துப் பார்த்தாக்கூட ஐந்து லட்சம் தேறாது. இதிலே டொனேஷன் ஐந்து லட்சத்துக்கு நான் எங்கேடா போவேன்? நல்லாப்படி, படின்னு சொன்னேனே... கேட்டியாடா. இப்ப பாரு மாட்டிக்கிட்டு முழிக்கிறே." உஷ்ணமாய் வார்த்தைகளை உமிழ்ந்தார் அப்பா.

''சும்மா அவனை மிரட்டாதீங்க... அவன், நல்லாதான் படிச்சான். பாஸ் பண்ணினான். மார்க்தான் குறைச்சல்," கதிரின் அம்மா காயத்ரி, அங்கலாய்த்தாள்.

அப்போது கதிரின் எதிர் வீட்டுப் பையன் விகாஸ் வீட்டினுல் நுழைந்தான்.

''ஹலோ! அங்கிள், ஆன்ட்டி பாஸ் செய்திட்டேன். நல்ல மார்க். மெடிகல் காலேஜில் இடம் கிடைச்சிருக்கு. இந்தாங்க கேக். டேய் கதிர் நீயும் எடுத்துக்கோடா" என்றவன் அனைவருக்கும் இனிப்பு வழங்கிவிட்டு சென்றான்.

கதிரின் அப்பாவுக்கு பிளட் பிரஷர் எகிறத் தொடங்கியது. ''டேய் கதிர், விகாஸும் உன் வயதுக்காரன் தானே. படிச்சி நல்ல மார்க் வாங்கி, நல்லபடியா மருத்துவக் கல்லூரியிலே சேர்ந்திட்டான். இனி நீ உதவாக்கரையாகி ஊர் சுற்ற வேண்டியதுதான்" என கதிரைப் பார்த்து சீறினார் வேலு.

''அப்பா எனக்கு படிப்பும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். என்னை விட்டுருங்க. நான் எங்கேயாவது போயிடறேன்," கதிர் விரக்தியுடன் குமுறத் தொடங்கினான்.

அப்போது தெருவில் பொலிஸ் ஜீப் ஒன்று சீறிக் கொண்டு வந்து நின்றது.


பொலிஸ் ஜீப்பிலிருந்த காவலர்கள் இறங்கி, விகாஸின் வீட்டுக் கதவை 'தடதட'வென தட்டினர்.

கதவு திறந்தவுடன் உள்ளே சென்ற காவலர்கள் விகாஸின் சட்டையை பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே வந்தனர்.

''ராஸ்கல் ஏ.எல் பரீட்சையில் பெயிலாகிவிட்டு பாஸானது மாதிரி போலி மார்க்ஷீட் தயாரிச்சு திருட்டுத்தனமாய் மெடிக்கல் காலேஜிலே சேர்ந்திருக்கே. உனக்கு இனி ஜெயில் தான்டா கல்லூரி. ஏறுடா ஜீப்பிலே" என்ற காவலர், விகாஸை ஜீப்பிலே ஏற்றிக் கொண்டு பறந்தனர்.

காயத்ரி கணவனிடம் ''பார்த்தீர்களா, விகாஸின் யோக்கியதையை. பித்தலாட்டம் செய்து ஏமாற்றி இருக்கிறான். நம்ப பிள்ளை குறைஞ்ச மார்க் எடுத்திருந்தாலும், நியாயமாப் படிச்சிப் பாஸ் பண்ணியிருக்கான். அவனுக்கு அந்த கல்லூரியில் இடம் இல்லேன்னா பரவாயில்ல. இன்னொரு இடம் கிடைச்சிட்டுப் போவுது," என்றாள், பெருமை பொங்க.

## சொல் விளையாட்டு 26




### இடமிருந்து வலம்

1. இலங்கையில் வசிக்கும் பெரிய பாம்பு (6)
4. போதும் என்ற மனப்பாங்கு (4)
6. பயம் (3)
8. திரைப்படங்களை பார்ப்பவன்(4)
11. ஆகாயம் (3)
12. வேதனை (2)
13. சமாதான பேச்சு நடந்த இடம் (3)
14. முறைப்பாடு (3)

### மேலிருந்து கீழ்

1. மந்திரங்களை ஜெபிப்பவன் (6)
2. எட்டயப்புரத்து கவிஞர் (3)
3. அசைவம் (3)
5. பழாப்பழம் --யாக இருக்கும் (2)
7. வயதானவர் (4)
9. கோபம் (3)
10. தடி (3)

சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 25ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...

## சிறுவர் சித்திரம்



A.K.M. சஹானா
தரம் 04
பு/காரைதீவு முஸ்லிம் மகா வித்தியாலயம்



உமைர் ரம்ஸான்
வெஸ்வூட் சர்வதேச கல்லூரி,
உடத்தலவின்னை



பிரகல்யா
தரம் 04
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை,
வெள்ளவத்தை

## விடுகதைகள்

1. மணிக்ணக்காய் போடும் கணக்காய் இருந்தாலும் மனக் கணக்காய் போட்டுவிடும் கணக்குப் பிள்ளை. அவன் யார்?
2. காடெங்கும் முளைத்த புல் அறுக்க அறுக்க வளரும். அது என்ன?
3. ஆண்டவனுக்கு கேட்க ஆலயத்தில ஒலிப்பான். அவன் யார்?
4. செத்தப் பிறகே சந்தைக்கு வருவான். அவன் யார்?
5. மழைக்கு உதவாத குடை; மழைக்கால குடை. அது என்ன?
6. நீரில் உயிர் வாழும்; நிலத்தில் சவமாகும். அது என்ன?
7. கால் இல்லாமல் பறக்கும் வால் உள்ளவன், வால் அறுந்தால் தரையில் விழுவான். அவன் யார்?
8. காலால் நீரருந்தி தலையால் தாகம் தணிக்கும் கொடையாளி. அவன் யார்?
9. ஊரெல்லாம் சுமந்து உடன் வருவான் என்றாலும், வீட்டுக்குள் வராமல் வீதியிலேயே நின்றுவிடும் அடிமை. அவன் யார்?
10. காட்டுக்குள் குடியிருக்கும் இரவுப் பாட்டுக்காரி, ஊருக்குள் வந்து ஒப்பாரி வைப்பாள். அவள் யார்?
11. சொந்தப் பிள்ளையென அழைத்து சொந்தம் கொண்டாடினாலும், சிறைபட்டே வளரும் சிறுபிள்ளை. அவன் யார்?
12. நாள்தோறும் வேட்டையாடும், காட்டில் வசிக்காத வீட்டுப்புலி. அது என்ன?
13. ஊர் சுற்றும் ஊர்க்காவலன் தெருவோரம் நாதியற்று கிடப்பான். அவன் யார்?
14. ஆயிரம் கொத்தனார்கள் அடுக்கடுக்காய் வீடுகட்டி குடியிருக்கும் அழகான கோட்டை. அது என்ன?
15. வாசமலர் காட்டுக்குள் வண்ண வண்ண சேலை உடுத்தி வந்தாள் மங்கை ஒருத்தி. அவள் யார்?

## வழிகாட்டுங்கள்




இந்த அழகான மீனைப் பிடிப்பதற்கு பூனையாருக்கு வழிகாட்டுங்கள் பார்க்கலாம்!

## விடைகள்

1. கால்குலேட்டர்
2. தலைமுடி
3. கோயில் மணி
4. கருவாடு
5. காளான்
6. மீன்
7. காற்றாடி
8. தென்னைமரம்
9. மிதியடி
10. ஆந்தை
11. கிளிப்பிள்ளை
12. பூனை
13. நாய்
14. தேன்கூடு
15. வண்ணத்துப்பூச்சி


## திராட்சை



ஞாபக மறதி, இதய நோய், ஆஸ்துமா, மலச்சிக்கல், ஒற்றைத் தலைவலி, சிறுநீரக நோய் போன்றவற்றிற்கு மருந்தாக திராட்சை பயன்படுகிறது. திராட்சைப் புரதம், கார்போஹைட்ரேட், கல்சியம், இரும்பு, மங்கனீசியம், சி மற்றும் கே விட்டமின் சத்துக்கள் நிறைந்துள்ளன. திராட்சையை உலர வைத்து அதன் நீர்த்தன்மையை போக்கினால் உலர் திராட்சை கிடைக்கும். உடலில் பழுதடைந்த செல்களுக்கு பதிலாக புதிய செல்களை உருவாக்கும் ஆற்றலோடு ரத்தத்தை தூய்மைப்படுத்தும் தன்மையும் திராட்சைக்கு உண்டு.

| | |
|---|---|
| ஸ்டார் பேபி பகுதிக்கு உங்கள் குழந்தைகளின் படங்களையும் அனுப்பலாம். | முகவரி: STAR BABY, Editor, Vanna Vaanavil Editorial, Lake House Colombo - 10 |

## வண்ணம் தீட்டுங்கள்



நண்பன்: மச்சான் என் காதல சொல்லப்போய் எனக்கு ஐந்த ரூபாதான் செலவாச்சு!
but அவளுக்குத்தாண்டா 750 ரூபா செலவானது...
நண்பன்: எப்படிடா உனக்கு மட்டும் ஐந்து, அவளுக்கு 750?
நண்பன்: நான் லவ் சொல்லப்போக ஒரு சிங்கிள் ரோஸ் மட்டும்தாண்டா செலவு!
but அவளுக்கு தாண்டா அவளோட செருப்பு பிஞ்சு போச்சி...!

- மஹீஷா, குருநாகல்

# SMS பூக்கள்

*நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்.எம்.எஸ். கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம். இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம். முகவரி 3ஆம் பக்கத்தில்.*

0778021501

## ஜன்னலுக்கு வெளியே...



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய நடிகை

A. தமன்னா
B. ஹன்சிகா
C. இனியா
D. மீனா

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்

இந்த உலகத்தில இருக்கிற முக்கால்வாசி பயலுக நாசமா போறதுக்கு முக்கியக் காரணம், நண்பன் சொல்லும் அந்த வார்த்தைதான் ''மச்சான் அவ உன்னைதான்டா பார்க்கிறா...''

- தபோஷினி, அச்சுவேலி

ரன் எடுக்காமல் போனால் டக் அவுட். டிக்கெட் எடுக்காமல் போனால் வித்தவுட் உங்க SMS வரலை என்றால் நான் மூட் அவுட்

மாணவன்: சேர் ஒரு கோழி 10 முட்ட போட்டுச்சாம், அதில் ஒன்பது முட்டை கோழி முட்டை ஒரு முட்டை வாத்து முட்டை, எப்படி?
ஆசிரியர்: எனக்கு தெரியலப்பா.
மாணவன்: அந்த கோழியின் நடத்த சரியில்லை.

- எஸ்.ஜே.எஸ்தர், வவுனியா

தூங்கும்போது அன்டனா பக்கத்தில் தூங்குங்க... அப்பத்தான் கனவு நல்லா தெளிவா தெரியும்.

- நந்தன், வவுனியா

### காதல்

ஒரு குளத்தில் கொக்கு இருக்கும் (பொண்ணு) மீன் இருக்கும் (பையன்) தண்ணி இருக்கும் (பணம்) தண்ணி வற்றிப் போனால் கொக்கு பறந்து போய்விடும். மீன் செத்து விடும். இதுதான் காதல்.

யார் கூட இருந்தா நல்லா இருப்போம்னு நினைப்பது பொண்ணுங்க மனசு... யார் கூட இருந்தாலும் நல்லா இருக்கட்டும்னு நினைப்பது பசங்க மனசு

ஒரு ஜப்பான்காரன் ஸ்ரீலங்கா வந்தான். அவன் விமான நிலையம் போவதற்கு ஆட்டோ பிடிச்சான், but போறவழியில், ஒரு ஹொண்டா ஓவர்டேக் பண்ணிச்சி.
ஜப்பான்காரன்: ஹொண்டா ஜப்பான்ல செய்தது, சோ ஃபாஸ்ட். நெக்ஸ்ட் ஒரு டொயோட்டா ஓவர்டேக் பண்ணிச்சி, அவன் சொன்னான் டொயோட்டா ஜப்பான்ல செய்தது, சோ வெரி ஃபாஸ்ட். ஏர்போர்ட் வந்த பிறகு ஜப்பான்காரன் எவ்வளவு ஆச்சு என்றான். ஆட்டோ டிரைவர் 1900 என்றான். எப்படி இவ்வளவு ஆச்சு?
டிரைவர்: மீட்டர் ஸ்ரீலங்காவில செய்தது சோ வெரி ஃபாஸ்ட்

- ஏ. நுஸ்ரத், மூதூர்

(ஆரம்ப பாடசாலை மாணவர்கள்)

1. மச்சான் நேற்று கிளாஸ்ல ஒரு சப்ப பிகரு என்ன அடிச்சிட்டாடா
2. இது பொண்ணுங்க மேட்டர் நீ மிஸ் கிட்ட சொல்லு.
1. அந்த சப்ப பிகரு அவதாண்டா

- மதிவதினி, புன்னாக்குளம்

குத்தினால் ஏன் ரத்தம் வருது தெரியுமா? குத்தினது யார்னு பார்க்கிறதுக்கு!

- எஸ்.ஏ.சசிகலா, நெரியெல்ல

என்னத்தான் எங்க மாமா குண்டா இருந்தாலும் அவரை துப்பாக்கிக்குள்ள போட முடியாது.

- ஆர். சுரேஸ், மஸ்கெலிய

### லவ்வர் இல்லாமல் இருந்தால் உள்ள நன்மைகள்:

1. நல்லா தூங்கலாம்
2. டைம், பணம் சேமிக்கலாம்
3. நம்ம அழகு பற்றி கவலைப்படத் தேவையில்லை.
4. மிட்நைட்ல மிஸ்ட் கோல் வராது.
5. போன்ல ஸ்பெஷல் ஒ.ஃப்பர் எக்டிவ் பண்ணத்தேவையில்ல.
6. எல்லா பொண்ணு, பையனோடும் பேசலாம்.
7. போன்ல எனிடைம் பேலன்ஸ் இருக்கும்.
8. நோ டென்ஷன்

சோ... பி கூல் என்ஜோய் யுவர் லைவ்

- புவி, கொம்மாதுறை

பிறப்பு ஒரு முறை
இறப்பு ஒரு முறை
காதல் ஒரு முறை
வாழ்க்கை ஒரு முறை
but சாப்பாடு மட்டும் தினமும் மூன்று முறை

சோ... நல்லா சாப்பிடுங்க நலமா இருங்க

- எஸ்.ரொஷாந்தினி, மன்னார்

பெண்ணே! நம் காதல் அருகம்புல் போல வளர்ந்து வரும்போது உங்க அப்பா எருமை மாடு போல தின்று விட்டாரே!

- ஏ.எம்.எம் ஜப்ராஸ், காத்தான்குடி

என்னத்தான் நெருப்பு கோழியா இருந்தாலும் அவிச்ச முட்டையா போட முடியும்.

- ரிப்கான், கஹகம

அவள் என்னை விட்டு பிரிந்தால்
மது குடிக்க மாட்டேன்...
தாடி வளர்க்க மாட்டேன்...
அழுது புலம்ப மாட்டேன்...
அமைதியாக தூங்கி கொண்டு இருப்பேன்...
அதாவது அவள் தங்கையின் மடியில்...

உலகத்தில் பொய்யே பேசாத மூணு குழந்தைங்க பத்தித் தெரியுமா?
1. இன்னும் பிறக்காத குழந்தை
2. இப்போ பிறந்த குழந்தை
3. இந்த மெசேஜை உங்களுக்கு அனுப்பின பச்சைக் குழந்தை!

நோ... நோ... அழக்கக்கூடாது!

டீக்கும், கோப்பிக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா?
டீயில ஒரு E இருக்கும்
கோப்பியில் இரண்டு EE இருக்கும்
So இனிமேல் பார்த்து குடிங்க

- வினோ, முழங்காவில்

பசங்க உண்மையா லவ் பண்ணுவாங்க... ஆனா நல்ல லவ்வர செலக்ட் பண்ண மாட்டாங்க but பொண்ணுங்க நல்ல லவ்வர செலக்ட் பண்ணுவாங்க ஆனா உண்மையா லவ் பண்ண மாட்டாங்க, இது உண்மைங்க...

- எஸ். நிர்மல்ராஜ், வவுனியா



கவுண்டமணி: நா உன்கிட்ட என்னடா வாங்கிட்டு வரச் சொன்னேன்
செந்தில்: இரண்டு டியூப் லைட் வாங்கி வரச் சொன்னீங்க!
கவுண்டமணி: ஒன்று இங்க இருக்கு, இன்னொன்று எங்க?
செந்தில்: இன்னொன்று தான் SMS படிக்குது.

- நித்தி, கிருளப்பனை

## என்னைத் தெரிகிறதா?



காஜல் அகர்வால்

கல்யாணிக்கு கல்யாணம் பண்ண கல்யாணி அப்பா கல்யாண சுந்தரம், கல்யாணிக்கு கல்யாணம் என்ற மாப்பிள்ளையை கல்யாணத்துக்க ஏற்பாடு பண்ணினாரு. 'கல்யாணம்' பிடிக்காம கல்யாணம் வேண்டாம்னு சொல்ல, கல்யாணி கல்யாணம் பிடிக்காமத்தான் கல்யாணம் வேண்டாம்னு சொல்றதா நினைச்சி கல்யாணிக்கு கல்யாணம் செய்ய கல்யாண ராமன் என்ற மாப்பிள்ளையை பார்த்தாங்க. கல்யாணி கல்யாணமே வேணாம்னு கல்யாணராமன்கிட்ட சொல்ல கல்யாணி அப்பா கல்யாணத்தை எப்படி நடத்துவாறு?
யோசிங்கப்பா... யோசிங்க
கல்யாணியும் பாவம்... நீங்களும் பாவம்...

- ஜெகதீபன், கொம்மாந்துறை, மட்டக்களப்பு

டைம்க்கும் ஐட்டத்துக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா? டைம் சும்மா ஓடும். ஐட்டம் யாரையாவது கூட்டிட்டு ஓடும். SO, உங்க ஐட்டத்தை கவனமாக பார்த்துக்குங்க.

- எம்.எஸ்.எப். பஸ்னா, வெலிகம.



சாப்பாட்டுக்கும், காதலுக்கும் என்ன ஒற்றுமை? இரண்டுமே லிமிட்டை தாண்டினா வாந்திதான் வரும்.


- கே. நர்தனன், மாணிப்பாய்



## மலேசியாவில் தமிழர்கள்

க. இராஜசிங்கன்

*மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் என் சகோதரன் பணியாற்றி வருகிறார். அவரது அழைப்பின்பேரில் அங்கே சென்றிருந்தேன். அங்கே எனக்கு வித்தியாசமான அனுபவங்கள் கிட்டின. பல உண்மைகளை நேரிலும் கண்டேன். அவற்றின் தொகுப்பே இக்கட்டுரை.*


தொழிலாளர் வீடுகள்

# மலேசியாவில் இந்தியத் தமிழர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்




கோலாலம்பூரில் பல இடங்களுக்கும் சென்ற நான் கோலாலம்பூர் எல்லையில் அமைந்துள்ள பெடாலிங் நகரத்திற்கும் சென்றிருந்தேன். பெடாலிங்கில் அமைந்துள்ள இறப்பர் தோட்டம், புக்கிட் ஜாலில் தமிழ் பள்ளி, பூஞ்சோங்சாலை ஆகிய இடங்களை பார்வையிட்டேன்.

இத்தோட்டத்தில் 1933களில் குடியேறிய இந்திய தோட்டத் தொழிலாளர்கள் வாழ்கின்றனர். இத்தோட்டம் 1800 ஏக்கர் காணியில் அமைந்துள்ளது. இங்கு 108 தொழிலாளர்கள் வேலை செய்துள்ளனர். இந்த 108 தொழிலாளர்களும் 90 வீடுகளில் குடியிருந்தனர். மலேசியா அரசாங்கத்தினது திட்டமிடலில் இந்திய தோட்டத் தொழிலாளர்களை அப்புறப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இத்தோட்டக் காணிகள் அரசமயமாக்கப்பட்டன. அங்கே இப்போது தொடர் மாடி கட்டட குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்புக்காக காணி சுவீகரிக்கப்படுவதை தொழிலாளர்கள் எதிர்த்து போராடியிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் நினைத்ததை சாதித்துவிட்டது.

எனினும் மன உறுதியுடன் 30 குடும்பங்கள் தாம் வாழும் 29 வீடுகளை விட்டு வெளியேற முற்றாக மறுப்பு தெரிவித்து விட்டன. இக்குடும்பங்களுக்கு தோட்டத்தில் தொழில் வழங்குவதை அரசு நிறுத்தி விட்டது. இறப்பர் தோட்டம் இருந்ததற்கான அடையாளமே இப்போது இல்லை. எனினும் இத்தொழிலாளர்கள் தமது மூதாதையரின் புதைகுழிகளுடனும், தமது கோயில்களுடனும், நாட்டுப்புற தெய்வ வழிபாடுகளுக்கான அடையாளங்களுடனும் இன்றுவரை அதே இடத்திலிருந்து போராடி வருகின்றனர். இங்கு தமிழ்க் கடைகளையும், இந்துக் கோயில்களையும், குருக்கள்மாரையும் நான் கண்டேன். மாணவர்களின்றி கைவிடப்பட்ட பாடசாலைகள் (இதனை மலேசியாவில் தமிழ் பள்ளி என்பர்) உள்ளன. மன உறுதியுடனான இம்மக்களின் போராட்டம் மலேசிய அரசுக்கு சவாலாக விளங்குவதாக என்னிடம் சிலர் கூறினர்.

இப்போராட்டத்துக்கு பல அரச சார்பற்ற நிறுவனங்கள், இயக்கங்கள் ஆதரவு வழங்கி வருகின்றன. இந்தியத் தமிழர்களின் எதிர்காலம் மலேசியாவில் எவ்வாறு அமையும் என்பதை இப்போராட்டம் தீர்மானிக்கும் என்கிறார்கள் இவர்கள்.

எமது நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் மலேசியா, சிங்கப்பூர், ஹொங்கொங் என கிழக்காசிய நாடுகளுக்கு தொழில் புரிவதற்காகவும் சுற்றுலாவுக்கும் செல்கின்றனர்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாண கிராமங்களில் செல்வமும் செல்வாக்குமாக வாழ்ந்த பலர் மலேசிய சிங்கப்பூர் பென்சன்காரர்கள். இன்றைக்கும் தலைநிமிர்ந்து நிற்கும் நாடாக மலேசியா விளங்குகிறது. எனவே நம்மவர் மத்தியில் மலேசியா பற்றி நல்ல அபிப்பிராயம் உண்டு. ஆனால் மலேசியாவின் மறுபக்கம் பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டும்.

நாம் இலங்கை மற்றும் இந்தியாவில் 'லயன்' காம்பரா வாழ்க்கை முறையுள்ளதை தெரிந்திருக்கின்றோம். நம் பெருந்தோட்டங்களில் தேயிலை, கோப்பி, கொக்கோ, இறப்பர் பயிரிடப்பட்டன. இவை எமது தேசிய பயிர்களல்ல. எம்மை ஆட்சி செய்த ஆங்கிலேயர்களினால் அறிமுகப்படுத்தப்பட்டவை. அப்போது தோட்டத் தொழிலுக்காக தமிழ்நாட்டு மக்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். இவர்கள் லயன் காம்பிராக்களில் தங்க வைக்கப்பட்டனர். 1833ஆம் ஆண்டு முதல் 180 வருட வரலாறு இந்த லயன்களுக்கு உண்டு. இவ்வளவு பழைமையான லயங்களைக் கண்ட நம்மவர்களில் பலர், மலேசிய தோட்டத் தொழிலாளர்கள் சிறப்பாக வாழ்வதாகவும் லயன்முறை அங்கு ஒழிக்கப்பட்டு விட்டதாகவும் தோட்டங்களை விட்டு இந்திய வம்சாவளித் தமிழர்கள் வெளியேறி வசதியாக வாழ்ந்து வருவதாகவும் கூறி, இலங்கையில்தான் லயக்காம்பரா அவலம் தொடர்வதாக கூறி வந்துள்ளனர். அதை அப்படியே நம்பியவர்களில் நானும் ஒருவன். இதையே மற்றவர்களிடமும் பெருமையாகச் சொல்லி வந்திருக்கிறேன். இது முற்றிலும் உண்மை அல்ல என்பதை நேரில் கண்டபோது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது!

மலேசியாவில் இறப்பர் தோட்டங்களை ஆங்கிலேயரே திறந்தனர். இத்தோட்டங்களில் பணியாற்ற தென்னிந்தியாவில் இருந்தே தொழிலாளர்கள் மலேசியா அழைத்துச் செல்லப்பட்டனர். இப்படிச் சென்றவர்கள் இறப்பர் தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டனர். ஆனால் லயன்களுக்கு பதிலாக சிறிய வீடுகள் அமைக்கப்பட்டன. இன்று இத்தொழிலாளர்களது நிலையும், இந்தியத் தமிழர்களின் நிலையும் மலேசியாவில் கேள்விக்குறியாகியுள்ளது.

அங்கே தோட்டங்கள் நகரமயப்படுத்தப்படுகின்றன. இறப்பர் தோட்டங்களும் மூடப்பட்டு வருகின்றன. தோட்டத்தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு நகர்புறங்களில் வேறு தொழில்தேடி சென்று நிரந்தர குடியிருப்பின்றி வாழ்கின்றனர். இதனால் தோட்டத் தொழிலாளர்களான இந்தியத் தமிழர் மத்தியில் கலாசார சீரழிவு நிகழ்ந்து வருகிறது.


பழைய தொழலாளர் குடியிருப்புகளுக்கு அருகே ஓங்கி நிற்கும் அடுக்குமாடி குடியிருப்புகள்

எனினும் தமிழ் படப்பிடிப்புகள் நடத்தவும், பாடல் வெளியீடு, ட்ரெய்லர் வெளியீடு நடத்தவும், புத்தகம் விற்று காசு பார்க்கவும் மலேசியாவுக்கு படையெடுக்கும் தமிழக சினமா புள்ளிகளும், இந்திய வர்த்தகர்களும் அத்தமிழர்களின் எதிர்காலம் குறித்து எதையும் பேசியதில்லை. கண்டு கொண்டதும் கிடையாது. இலங்கைத் தமிழர்களின் அவலங்களை முதலீடாகக் கொண்டு பணம் சம்பாதிக்கும் முயற்சிகளில் ஈடுபடும் தென்னிந்திய வர்த்தகர்களும் அரசியல்வாதிகளும் மலேசிய தமிழர்களைப் பற்றிப் பேசுவார்கள் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லைதான். எந்தத் தமிழக ஏடும், மலேசிய மகிமை, பிரமாண்டம் பற்றி எழுதுமே தவிர தமிழர் நிலைபற்றி எழுதுவதில்லை. தமது வியாபாரம் படுத்துவிடும் என்ற பயம்.

பெடலிங்கில் மட்டுமல்ல. மலேசியாவின் பல இடங்களிலும் தோட்டங்கள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர் என்று என்னிடம் சொன்னார்கள். தோட்டத் தொழிலாளர்கள் சிறை பிடிக்கப்பட்டு, சிறை கூடத்தில் அடைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சிறைக்கூடங்களில் கட்டாய மதமாற்றம் செய்யப்படுவதாகவும் அவ்வாறானவர்கள் மரணிக்கும்போது உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படாமல் இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்யப்படுவதாவும் சிலர் தகவல் தெரிவித்தனர். தோட்டங்கள் மூடப்படுவதற்கான பிரதான காரணம், தமிழர்கள் வாழும் சூழலில் காணப்படும் கோயில்களையும், சிலை வழிபாடுகளையும் இல்லாமல் செய்வதே என்றார், இங்கு வசிக்கும் ஒரு பிரமுகர். கோவில் மற்றும் சிலை வணக்க முறைகள் மலேசியாவில் இவ்வளவு காலமாக பிரச்சினையின்றி பின்பற்றப்பட்டு வந்துள்ள போதிலும், மலேசியாவில் சமயத் தீவிரத்தன்மை இன்றைய சமூகத்தினர் மத்தியில் அதகரித்து வருவதால், தற்போது பிரச்சினைகள் எழ ஆரம்பித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)








**விஜய்யின் அடுத்த படம் என்ன? யாரோடு ஜோடி சேருகிறார்?**

**- பிரின்சி, மானிப்பாய்**

விஜய் சினிமாவுக்கு வந்து 20 வருடம் ஆகிறது. 20 வருட சினிமா வாழ்க்கையில் விஜய் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக நடந்து (நடித்து) வருகிறார். துப்பாக்கியை அடுத்து விஜய்யின் படம் 'தங்க மகன்'. இயக்குநர் ஏ.எல் விஜய் (மதராச பட்டணம் இயக்குநர்).

இது ஏற்கனவே ரஜினி நடித்த ஒரு படத்தின் பெயர். ரஜினி நடித்த தங்கமகன் படத்தை தயாரித்த சத்யா மூவிஸ் இந்த தலைப்பை இயக்குநர் விஜய்க்கு கொடுக்க சம்மதித்து விட்டது. இதனால் ஏற்கனவே வைத்திருந்த 'தலைவன்' தலைப்பை மாற்றி இப்போது 'தங்கமகன்' என்று வைத்திருக்கிறார்கள். தங்க மகனில் விஜய்க்கு ஜோடியாக நடிப்பவர் அமலா பால். இவருக்கும் டைரக்டர் விஜய்க்கும் ஏதோவாம்.

**வடிவேலுவுக்கு நல்ல காலம் பிறக்காதா?**

**- எஸ் விஜி, கண்டி**

வடிவேலுவுக்கு ஒரு வருடத்துக்கு மேல் ஓய்வு கிடைத்திருக்கிறதே! எளிதில் கிடைக்கக் கூடியதா இது! ஒரு வருடம் ரூம் போட்டு யோசிச்சவர் இனி சிரிப்பாட்டம் ஆடப்போகிறார். அதேவேளை வடிவேலு ம.தி.மு.கவில் சேரப்போவதாக ஒரு கதை அடிபடுகிறது. சிரிப்பாட்டம் சினிமாவிலா? அரசியலிலா?



**நமீதா அடிக்கடி என் கனவில் வருகிறார்?**

**- பி. கரன், யாழ்ப்பாணம்**

நமீதா எப்படிங்க உங்க கனவில வர முடியும்? கடந்த ஆறு மாசமா நமீதா என்னோட கனவுல தானே வந்தாரு. என்னால அதை நிரூபிக்க முடியும். உங்க கனவுல வர்றதா பொய் சொன்னீங்கன்னா கோர்ட்ல வழக்கு போட வேண்டியிருக்கும் சரியா?



**'போடா போடி' சிம்புவுக்கு சறுக்கலாமே?**

**- சிம்பு ரசிகன் குணா, மஸ்கெலிய.**

நிறையவே யோசிச்சி அவசரத்தில் எடுத்த படம். 'போடா போடி' சிம்புவுக்கு அது தோல்விப் படம் என்று சொல்ல முடியாது. 'DANCE' பற்றிய படம் என்பதால் சிம்புவுக்கும் சரத்குமாரின் மகள் வரலட்சுமிக்கும் வேறு படங்கள் தர முடியாத ஒரு பரிமாணத்தை இது தந்திருக்கிறது. வரலட்சுமிக்கு புதிதாக இரண்டு படங்கள் புக் ஆக போடா போடி வகை செய்திருக்கிறது. இதை இன்னும் நன்றாக செய்திருக்கலாம். இயக்குநர்தான் சறுக்கி விட்டார்.



**நடிகைகள் இயற்கையிலேயே அழகிகளா அல்லது மேக் அப்தான் அவர்களை அழகு படுத்துகிறதா?**

**- என். கிருஷ், முல்லைத்தீவு**

திரிஷாவும், நயனும் மேக் அப் இல்லாமல் உங்கள் ஊருக்கு வந்தா உங்களுக்கு அடையாளமே தெரியாது. கண்டு பிடிக்கவே மாட்டீங்க ஆமா....

**இன்றைய சினிமாக்களை விட அந்தகால எம்.ஜி.ஆர். படங்களில் செக்ஸ் அதிகமாக இருந்ததாக சொல்கிறார்களே?**

**- ஜி. வசந்தன், இரத்தினபுரி**

எம்.ஜி.ஆர் பாடல் மற்றும் காட்சிகள் மூலம் காதலை ரசிகர்களுக்கு புட்டு புட்டு வைத்தார். பாடலை எழுதியவர்கள், இசையமைத்தவர்கள், இயக்குநர், காமிராக்



காரர் ஆகியோருக்கு ஏற்றவாறு அவரது நாயகிகளும் ஒத்துழைத்தனர். அவர்களது முன்னழகும் பின்னழகும் சொல்லாமல் சொன்ன கதைகள் சொல்லி மாளாது.

**'துப்பாக்கி' பற்றி சொல்லுங்களேன்**

**- வினய், பதுளை**

துப்பாக்கியா?



கல்யாணம் வேணும்னு உங்ககிட்ட கேட்டெனான்னு பெத்த தகப்பனையே கன்னத்தில் அடிக்கிற மகள், பெண் பார்க்கும் படலத்தையே கேலிக் கூத்தாக்கியமை, காஜலுக்கு ஜெயராமை ஜோடி சேர்க்கும் முயற்சி, சத்யாங்ற பொலிஸ்காரரோட வீர சாமர்த்தியம். இதையெல்லாம வெட்டி வீசிவிட்டு ஒன்னரை மணிநேர படமாக்கியிருந்தா துப்பாக்கி இன்னும் நல்ல வெடிச்சிருக்கும்.

**திரிஷாவை பார்க்க முடிவதில்லையே? அவருக்கு வயதாகிவிட்டதா?**

**- கே. கீர்த்தனா, கொழும்பு**

திரிஷாவுக்கு வயசாகி விட்டதா? யார் சொன்னது? விஷாலோட சமர், ஜெயம் ரவியோட பூலோகம், ஜீவாவுடன் என்றென்றும் புன்னகை இப்படி மூன்று படங்கள் கைவசம் இருக்கு. திரிஷா ரொம்ப பிசி. அவரோட கால்சீட் 2014ல தான் கிடைக்கும்.



### ஸ்டார் முகவரி

Santhanoo Bhagyaraj
No: 15, 5th cross street, Lake Area,
Nungambakkam,
Chennai - 600 034
TP: 00914428171887, 00914443081206

சினிமானந்தா பதில்களுக்கான சினிமா தொடர்பான உங்கள் கேள்விகளை சுருக்கமாக கீழ்கண்ட முகவரிக்கு தபாலிலோ, எஸ்.எம்.எஸ்சிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்.

சினிமானந்தா பதில்கள்,
வண்ண வானவில்,
த.பெ இல : 1218,
கொழும்பு

மின்னஞ்சல் முகவரி:
vannavaanavil@gmail.com

குறுந்தகவல் இல:
0778 021 501




### மாதம் இரண்டாக மலர வேண்டும்

என்னைப் பொறுத்தவரையில் வானவில் ஒரு அன்னையைப் போன்றது. ஓர் அன்னை எவ்வாறு குடும்ப உறுப்பினர்களின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து மகிழ்கின்றாரோ அவ்வாறே இந்தப் பத்திரிகையும் வாசகர் அனைவரின் தேவைகளையும் உணர்ந்து பூர்த்தி செய்வதாகவே நான் காண்கிறேன். சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவரும் வானவில்லை ரசித்துப் படிக்கின்றனர். அட்டை வடிவமைப்பு அருமை!

வானவில் பகுதிகளில் அனைத்தும் சுவையாக இருக்கின்றபோதிலும் படிக்கும் அனைவரையும் கவரும் வண்ணமாக அமைந்துள்ள பகுதிகளாக எஸ்.எம்.எஸ் பூக்கள், தத்துவப்பித்தன், கவிமுற்றம், அடேங்கப்பா, அன்றும் இன்றும், சினிமா பகுதி, பேஸ்புக் பகுதி, போன்றவற்றை குறிப்பிட முடியும். எனினும் ஒரு குறைபாடு எங்களை உறுத்துகிறது.

தயவு எழுத்துப் பிழைகளை திருத்துங்கள். இது படிக்கும்போது ஏற்படும் சுவாரஸ்யத்தை பாதிப்பதாக உள்ளது. எனவே, எழுத்துப் பிழைகளை கூடுமான அளவு திருத்திக்கொள்ளுங்கள்.

இன்னொன்று. மாதத்துக்கு ஒன்று என்பதற்கு பதிலாக மாதத்துக்கு இரண்டு இதழ்களாக கொண்டு வாருங்கள். மாதம் ஒன்று என்பது நீண்டகாலம். புதுவருடத்தில் இருந்து மாதம் இரண்டாக மலரச் செய்யுங்கள்.

- எஸ்.டி. விருஷன்
சித்தங்கேணி

### மருத்துவ தகவல்கள் அதிகம் வேண்டும்

நான் வானவில்லுக்கு புதுமுகம். வானவில்லை தவறாமல் வாசித்து வருகிறேன். மக்களுக்கு தரமான படைப்புக்களை வழங்குவதில் வானவில்லுக்கே முதலிடம். கவிமுற்றம், எஸ்.எம்.எஸ் பூக்கள், வி.ஐ.பி ஆல்பம், சினிமானந்தா கேள்வி-பதில், சமையல் குறிப்புகள் அருமையிலும் அருமை. மருத்துவம் சம்பந்தமான குறிப்புகள் குறைவாக வருவது வானவில்லின் வர்ணங்களில் ஒன்று குறைந்த மாதிரிதான் தோன்றுகிறது.

ஹுசைன் போல்ட் பற்றிய தகவல்களைப் படித்து வியந்து போனேன்! அனுபவம் பேசுகிறது அருமையாக இருக்கிறது. வானவில் மேலும் தனது படைப்புக்களை அதிகரித்து மக்களின் ஆதரவைப் பெற்று தொடர்ந்தும் முதலிடத்தில் தன்னை தக்கவைத்து கொள்வதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

- டி.சித்ரா, அக்கறைப்பற்று

### எழுதுங்கள் ஜுனைதீன்

எஸ்.எம்.நாயகம் பற்றிய தகவல்களைத் தந்ததோடு அவரது மகளின் புகைப்படத்தையும் வெளியிட்டமைக்கு நன்றி. 'கடவுனு பொறந்துவ' படம் அந்தக் காலத்திலேயே 22 லட்ச ரூபா இலாபத்தைப் பெற்றுத் தந்தது என்ற தகவல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அது இன்று 22 கோடிக்கு சமம். படம் தயாரிப்பது சூதாட்டம் போன்றது என்றும் விரலை சுட்டுக்கொள்வதற்கு சமம் என்றும் சொல்வார்கள். சரியாகப் போனால் கோடிகளைக் குவிக்கலாம் என்பதால்தான் இந்த சூதாட்டத்துக்கு பலரும் வந்து கொண்டிருக்கிறார்கள். பேராதனை ஜுனைதீனிடமிருந்து மேலும் அனுபவங்களை எதிர்பார்க்கிறோம்.

- எம். அக்பர் சாலிஹ், உடுதும்புரை

### இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு

பதினெட்டு மாதங்கள் எப்படி உருண்டோடி விட்டனவோ தெரியவில்லை. மலேசிய மற்றும் காயல்பட்டின இஸ்லாமிய மாநாடுகள் தொடர்பான விவரத்தை மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை தொடர்ச்சியாக வாசித்து வந்திருக்கிறேன். இஸ்லாமியர் அல்லாதவராக இருந்தாலும் கத்தி முனையில் நின்றபடி பழுதில்லாமல் எழுதி முடித்திருக்கிறார் கட்டுரையாளர் மகேஸ்வரன். ஆரம்பத்தில் குறைகளை துணிச்சலுடன் சுட்டிக் காட்டியபடி ஆர்ப்பரித்துச் சென்ற கட்டுரைத் தொடர், பின்னர் ஆழமும் அகலமும் கொண்ட நதியாக பயணித்து முடிந்திருக்கிறது. எடுத்துக் கொண்டதை சிறப்பாக செய்து முடித்திருக்கிறீர்கள்.

- பேருவளை ஹசன் காலித்

### உலகம் அழிந்து விடுமாமே!

வானவில் சஞ்சிகை இதழுக்கு இதழ் மெருகேறி வருகிறது. வாசிப்பதற்கு நிறைய விஷயங்கள் தருகிறீர்கள். பல மாதங்களாக உலகம் அழியப் போகிறது என்ற உங்கள் பயமுறுத்தல் ஒரு வழியாக ஓய்ந்துவிட்டது. உலகம் அழியாது என்று முடித்ததற்கு நன்றி. பூச்சாண்டிக் காட்டுவதை ஒருபுறம் வைத்துவிட்டுப் பார்த்தால் விண்வெளி, உயிரின தோற்றம் மற்றும் விஞ்ஞானத் தகவல்கள் என ஏராளமான பயனுள்ள விஷயங்களை இத்தொடர் மூலம் சொல்லியதற்காக வாழ்த்துகள். யாரோ எப்படியோ கிளப்பிவிட்ட உலக முடிவு பீதி, உலகெங்கும் வெற்றிகரமாக எடுத்துச் செல்லப்பட்டதையும் சாதாரண மக்களுக்கும் இது போய்ச் சேர்ந்திருப்பதும் மலைக்கச் செய்கிறது. உலகம் அழியாமல் இருந்தால் ஜனவரி முதலாம் திகதி இந்தக் கடிதத்தை நான் வானவில்லில் வாசிக்கத் தானே போகிறேன்!

- எஸ். சேகர், நொச்சியாகம

### மாதமிருமுறை வேண்டும்

உங்கள் பத்திரிகையில் வெளியாகும் மனநல மருத்துவக் கதை, மன்றில் கேட்ட கதை, எஸ்.எம்.எஸ். ஜோக்ஸ் மற்றும் இலங்கை தமிழ்ச் சினிமா ஆகியவற்றை ரசித்து படித்து வருகிறேன். வானவில்லை மாதமிருமுறை சஞ்சிகையாகக் கொண்டு வாருங்கள். ஒரு மாதம் என்பது நீண்ட காலம். நத்தார் கட்டுரையாக வந்த 'மேற்குலகில் நத்தார்' என்ற ஆக்கம், பல புதிய தகவல்களைத் தந்தது. கவி முற்றமும் மெருகேறி வருகிறது.

- எம்.சமீரா, எம். முனீரா, சாய்ந்தமருது





வண்ண வானவில் ஊடக அனுசரனையில் மாதகல் பீனிக்ஸ் இளைஞர் கழகம் நடாத்திய 2012 சுனாமி ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் அரையிறுதி மற்றும் இறுதி போட்டிகள் 09.12.2012 அன்று நடைபெற்றது. இப் போட்டியில் மொத்தம் ஐந்து அணிகள் கலந்து கொண்டது. இதன் இறுதிப் போட்டியில் மாதகல் விநாயகர் கழகமும் எதிர்த்து மாதகல் சென் தோமஸ் யூத் கழகமும் மோதியது. இதில் விநாயகர் கழகம் 41 ஓட்டங்களால் வெற்றி பெற்று மாதகலின் 2012க்கான சிறந்த அணியாக தெரிவு செய்யப்பட்டு சுனாமி ஞாபகார்த்த கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இப் போட்டிக்கு சிறப்பு விருந்தினர்களாக ஈழ மக்கள் ஞனநாயக கட்சியின் மானிப்பாய் பொறுப்பாளர் ஜீவாவும், மாதகல் காந்திஜி சனசமூக நிலைய தலைவர் திரு. துரைசிங்கம் மற்றும் மாதகல் காந்திஜி விளையாட்டு கழக தலைவர் திரு.அருமைத்துரை உள்ளிட்ட பலரும் கலந்து இப் போட்டியினை சிறப்பித்துக் வைத்தார்கள். இத் தொடரில் பல விருதுகள் வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும். இதில் சுப்பர் சிக்ஸ், அதிக ஆறு ஓட்டங்களை பெறுபவர், சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், இறுதிப் போட்டி ஆட்ட நாயகன், தொடர் ஆட்ட நாயகன், முதலாவது பரிசு மற்றும் இரண்டாவது பரிசு போன்ற பல விருதுகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதில் தொடர் ஆட்ட நாயகன், சிறந்த மற்றும் இறுதிப் போட்டி ஆட்ட நாயகன் ஆகிய விருதுகளை விநாயகர் கழகத்தினை சேர்ந்த ஜெயந்தன் சொந்தமாக்கி கொண்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக பீனிக்ஸ் கழகத்தின் ஹரிஹரன் தெரிவு செய்யப்பட்டதுடன். சிறந்த பந்து வீச்சாளராக விநாயகர் அணி வீரரும் பெற்றுக் கொண்டனர். விநாயகர் கிரிக்கெட் அணித் தலைவர் பிரதீபனுக்கு மானிப்பாய் ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் ஜீவா வெற்றிக் கேடயத்தை வழங்குவதை படத்தில் காணலாம்.

# காந்திஜி தபால்தலை

காந்திஜியின் 80-வது பிறந்தநாளில் முதல் தபால் தலையை வெளியிடவேண்டும் என்று சுதந்திர இந்தியாவின் தலைவர்கள் ஒன்றுகூடி முடிவு செய்தனர். அது, மகாத்மாவுக்கு நாடு செலுத்தும் மிகப்பெரிய கவுரவமாக இருக்கும் என்று கருதி, நான்கு விதமான முத்திரைகளை வடிவமைத்தனர். காந்திஜிக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கவேண்டும் என்று கருதி, அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு அதை ரகசியமாக வைத்து, தானே முன்நின்று அந்த வடிவமைப்பு பணிகளை மேற்கொண்டார். ஆனால் வெண்ணை திரண்டு வரும்போது தாழி உடைந்த கதைபோல் தபால்தலை வடிவமைப்பு முழுமை பெறும் காலகட்டத்தில் (1948-ம் ஆண்டு ஜனவரி 30-ந்தேதி) காந்திஜி சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார். தனது படத்தோடு தபால்தலை தயாரிக்கபட்டது தெரியாமலே காலமாகிவிட்டார். அந்த நான்கு வித முத்திரைகளும் 1948-ம் ஆண்டு சுதந்திர தின விழாவில் தான் வெளியிடப்பட்டது.

சுதேசியாகவே வாழ்ந்து, முழு வாழ்க்கையையும் நாட்டிற்காக அர்ப்பணித்த மகாத்மாவின் அந்த முத்திரைகள் சுவிட்சர்லாந்தில் அச்சடிக்கப்பட்டது என்பது ஆச்சரியமான செய்தி.

அந்த அபூர்வ முத்திரைகள் காந்திஜியின் நினைவாக 1948-ம் ஆண்டு வெளியிடப்பட்டபோது ராஜாஜி இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தார். அவர் சிறப்பு மிகுந்த அந்த அஞ்சல்தலைகளை அவரது அதிகாரபூர்வ தேவைகளுக்கு பயன்படுத்த விருப்பம் தெரிவித்தார். அதனால் அரசு தேவைகளுக்காக பயன்படுத்தும் 'சர்வீஸ்' என்ற வாசகம் அதில் பொறிக்கப்பட்டது. இதில் இன்னொரு ஆச்சரியம் என்னவென்றால், உலகிலே மிக குறைவாக அச்சிடப்பட்ட முத்திரை என்ற பெருமையை அவை பிடித்திருக்கின்றன. 100 முத்திரைகள் மட்டுமே அந்த டிசைனில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அதனால் அது உலகில் விலைமதிப்புமிக்க அஞ்சல்தலையாக போற்றப்படுகிறது. அரிதான இந்த பொக்கிஷத்தின் மதிப்பு ரூபா ஒரு கோடிக்கு மேல். சமீபத்தில் லண்டனில் இந்த அஞ்சல்தலை ஒன்று ஏலத்தில் விடப்பட்டது. அது 92 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.




## பசுமை உலகுக்காக... (03ஆம் பக்கத் தொடர்)

நமக்கு நன்மைகளை மட்டும் சூரியன் வழங்கி வந்தாலும் அது தரக்கூடிய கெடுதல்களையும் நாம் வலிந்துபெறத் தொடங்கியிருக்கிறோம்.

பொருளாதார வளர்ச்சி என்ற பெயரில் ஓஸோன் படலத்தில் சிதைவை ஏற்படுத்தியதன் விளைவாக சரும நோய்கள், புவி வெப்பமடைதல், அதன் சங்கிலித் தொடர் விளைவுகள் என ஏராளமான பிரச்சினைகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கிறது.

எனவே இப்பொங்கல் நன்நாளில் சூரியனுக்கும் எருதுகளுக்கும் பொங்கி வழிபடும் அதேசமயம், இயற்கையை அதிக இம்சைப்படுத்தினால் அது திருப்பி அடிக்கும். அந்த அடியை மனிதகுலம் தாங்காது.

எனவே பொங்கலின்போது இயற்கை பாதுகாப்பையும் நினைத்துக்கொள்வோம். அதுதான் சரியான சூரிய பொங்கலாக அமையும். புகைக்கும் போகிப் பண்டிகையை மறந்து விடுவோம்!

## 2013ஆம் ஆண்டு பலாபலன்கள்... (15ஆம் பக்கத் தொடர்)

உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், எந்த விடயத்திலும் அவதானத்துடன் நடந்து கொள்வது நல்லது. சிலருக்கு பதவி உயர்வுகள் கிடைத்திடும். முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளைத் தவிர்த்து அளவுடன் வைத்துக்கொள்வது நன்மைத் தரும். தனு இராசியினருக்கு பெரும் கஷ்டம் தராத வருடமிது.

### மகரம்

உத்தராடத்துப பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு நன்மையும், தீமையும் கலந்த வருடமாக அமையும். செய்தொழில்கள் ஆரம்பத்தில் சிறப்பாக இருந்தாலும் பின்னர் மந்தமடையும். பணவிடயங்களில் வீண் கஷ்டங்களும் தாமதங்களும் ஏற்படும். கொடுக்கல் வாங்கல்கள் சீராக அமையாது. குடும்பத்தில் அடிக்கடி குழப்பநிலைகள் தோன்றி மறையும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்யாவிட்டால் தோல்வியடைய நேரிடும். முதலீட்டாளர்கள், முதலீடுகளில் விழிப்புடன் செயற்படுவது நல்லது. வீண் கஷ்டங்கள் ஏற்பட்டு மறையும். மகர இராசியனருக்கு மனக்குறைகள் வருடப் பிற்பகுதியில் ஏற்பட வாய்ப்புண்டு. கவனமுடன் நடந்துகொள்ளவும்.

### கும்பம்

அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு எதிர்பாராத நன்மைகளைக் கொடுக்கக் கூடிய வருடமாக அமையும். செய்தொழில்கள் சீராக அமைந்து சிறப்பு தரும். பணவிடயங்களில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். புதிய முயற்சிகள் கைகூடும். குடும்பத்தில் பலவித நன்மைகள் ஏற்பட்டு மனமகிழ்ச்சி தரும். சுபகாரிய நன்மைகளுக்கும் இடமுண்டாகும். உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், தமது கருமங்களில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட இடமளிப்பதுடன், பதவி உயர்வுகளையும் தரும். முதலீட்டாளர்கள் கூடிய முதலீடுகளை கையாண்டு ஆதாயம் பெற வாய்பண்டாகும். கும்ப இராசியினருக்கு குறைவு எதுவும் தென்படாத வருடமாக இவ்வாண்டு அமைவு பெறும்.

### மீனம்

பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இவ்வாண்டு சோதனையும், வேதனையும் கொண்ட ஆண்டாகும். அட்டமச்சனி, அட்டமத்து இராகு நடைபெறுவதால், சகல விடயங்களிலும், அவதானத்துடன் நடந்துகொள்வதுடன் தேக சுகத்திலும் கவனம் கொள்வது நன்மைதரும். செய்தொழில்கள் சீராக அமையாது கவலை தருவதுடன் பணவிடயங்களும் தடைபட வாய்ப்புண்டாகும். குடும்பத்தில் மனக்குழப்பங்கள் தோன்றும். சிலருக்கு பிரிவுகளையும் ஏற்படுத்தும். சுபகாரியங்களில் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்வது நல்லது.
உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள் தமது கருமங்களை பொறுமையுடனும், முன்னெச்சரிக்கையுனும் செய்து முடிப்பது நன்மை தரும். முதலீட்டாளர்கள் பாரிய முதலீடுகளை தவிர்த்து மிகுந்த கண்காணிப்புடன் செயற்பாட்டால் ஆதாயமடைவர். மீன இராசியனர் மிகுந்த அவதானத்துடன் நடந்துகெள்வது நன்மை தரும்.

## DTH இல் வெளியிடுவது... (10ஆம் பக்கத் தொடர்)

கே டிவி தொடங்கிய போதும் இதே எதிர்ப்பு எழுந்தது. ஆனால் இன்று சேட்டிலைட் உரிமை என்று படம் எடுக்கும்போதே அதனை விற்று தயாரிப்பாளர்கள் பல கோடிகளை பார்த்து விடுகிறார்கள்.

இனிமேல் டி.டி.எச் மூலம் வெளியிட்டு மிகப்பெரிய தொகையை தயாரிப்பாளர்கள் சம்பாதிக்கப்போகிறார்கள். பூனைக்கு முதல் மணி கட்டியிருக்கிறார் கமல்.

டி.டி.எச்சில் ஒலிபரப்புவதால் படத்தை யாரும் ரெக்காட் செய்ய முடியாது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

'விஸ்வரூபம்' படத்தை DTHஇல் வெளியிடுவதால் தியேட்டர்காரர்களுக்கு ஏற்படும் இழப்பு பற்றி அவர்கள் குற்றச்சாட்டுகள் வருமாறு:

1. DTH இல் படம் வெளிவருவதால் படம் நன்றாக இருக்கிறதா இல்லையா என்று தெரிந்துவிடும். நன்றாக இல்லாத பட்சத்தில் தியேட்டர்காரர்கள் கூறுகிறார்கள். ஆனால் தமிழ்ப்படங்கள் உலக அளவில் வெளியிடப்பட்டு வரும் இன்றைய காலகட்டத்தில் தமிழ்நாட்டில் முதல் காட்சி ஒளிபரப்புவதற்கு முன்னரே சிறப்புக் காட்சி என்ற பெயரில் முதல் நாள் இரவிலேயே அதிக விலை கொடுத்து படங்கள் திரையிடப்படுகின்றன. இதற்கு தமிழக திரையரங்கு உரிமையாளர்கள் எந்த எதிர்ப்பும் காட்டுவதில்லை. இநத வெளிநாட்டு ரசிகர்கள் மூலம் படத்தின் ரிசல்ட் படம் தமிழ்நாட்டில் திரையிடுவதற்கு முன்னரே தெரிந்து விடுகிறதே!

அத்துடன் அரசு நிர்ணயித்திருக்கும் விலையை விட அதிக விலையில் டிக்கட் விற்பது, முதல் வாரத்தில் இஷ்டப்படி மக்கள் விலையை நிர்ணயிப்பது, பிளாக்கில் டிக்கட் விள்ளபது, திரையரங்கை வருடக்கணக்கில் பராமரிக்காமல் விடுவது, கேன்டினில் அதிக விலை வைப்பது என்பதையெல்லாம் ஏன் தியேட்டர்காரர்கள் நினைத்துப் பார்க்காமல் இருக்கிறார்கள்?

தங்கள் மீது பல குற்றங்களை வைத்துக் கொண்டு, புதிய தொழில்நுட்பத்தின் மூலம் தமிழ் திரையுலகத்தை புதிய பாதையில் இட்டுச் செல்லும் கமலின் முயற்சியை இவர்கள் எதிர்ப்பது முறையல்ல.

இன்னொரு கருத்து இது

ஹிந்தியில் DTH ஒளிபரப்ப ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டது. தமிழில் இதை கமல் ஆரம்பிக்கிறார். ஹிந்தியில் படம் வந்த ஒரு வாரத்தில் மலிவான விலையில் 150 ரூபாவுக்கு னுவுர் இல் மூவி ஒன் டிமாண்ட் கொடுக்கப்படுகிறது.

ஆனால் DTH ஒளிபரப்பை கேபிள் டி.வி உரிமையாளர்கள் எடுத்து அவர்களது இணைப்பில் கொடுத்து ஊருக்கே படம் காட்டும் அபாயமும் உண்டு.

இந்நிலையில கமல் எயார்டெல் நிறுவனத்துக்கான DTH சேவைக்கு 'விஸ்வரூபத்தை' கொடுத்திருப்பதாக கூறப்படுகிறது.

'டாடாஸ்கை', 'சன்டைரக்ட்', சோனி, 'டிஸ். டி.வி விடியோகாள் ஆகியவை னுவுர் சேவையை கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களாகும்.

இந்த நிலையில் தமிழ்நாடு கேபிள் உரிமையாளர்கள் சங்க தலைவர் காயல் இளவரசு மிரட்டல் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

கமல் DTH மூலம் விஸ்வரூபத்தை ஒளிபரப்பினால், DTH ஒளிபரப்பு இடம்பெறும் அதேநேரம் தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் வீடியோ ஸ்கோப் என்ற அகன்ற திரையை பொருத்தி ஊர் மக்களுக்கு இலவசமாக விஸ்வருபத்தை ஒளிபரப்புவோம் என்று மிரட்டியிருக்கிறார் இவர்.

அத்துடன் DTH மூலம் ஒளிபரப்பாகும் திரைப்படத்தை டவுன்லோட் செய்ய முடியாது என்பதை கமல் மறுக்கும் நிலையில், அந்தத் திரைப்படத்தை டவுன்லோட் செய்ய முடியும் என்பதை அவர் முன்னிலையிலேயே நிருபித்துக் காட்ட தயாராக உள்ளோம் என்றும் சவால் விட்டிருக்கிறார்.

போகிற போக்கைப் பார்த்தால் கமல் னுவுர் மூலம் விஸ்வருபத்தை ஒளிபரப்ப தமிழர்களே விடமாட்டார்கள் போலிருக்கிறது.

விஸ்வருபத்தை கமல் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, என்ற மூன்று மொழிகளில் தயாரித்துள்ளார். ஹிந்தி மற்றும் தெலுங்கு மொழிகளில் மட்டுமே கமல் வெளியிட்டால் கூட போட்ட பணத்தை தேடிவிடலாம்.

# போல்ட்: 6 அடி 5 அங்குல ஒட்டகச்சிவிங்கி




உசேய்ன் போல்ட் மனித குலத்தில் உதித்த ஒரு அசாதாரண மனிதன். இந்த அசாதாரணத்துக்கு உரிய அறிகுறிகள் போல்ட்டின் இளமைப் பருவத்திலேயே தெரியத் தொடங்கிவிட்டன. 15 வயதாக இருக்கும்போதே போல்ட்டின் உயரம் 6 அடி 5 அங்குலம். வயதுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது இது நினைத்துப் பார்க்க முடியாத உயரம். ஆனால் அது உண்மை. பாடசாலையில் இருந்த உயரமான மாணவன் போல்ட்தான். அதேவேளை வேகமான மாணவனும் போல்ட்தான்.

2002ஆம் ஆண்டு உசேய்ன் போல்ட்டின் விளையாட்டுத் திறமைகள் பளிச்சிட்ட வருடம். ஜமேய்க்காவின் விளையாட்டு சரித்திரத்தையே அவரால் அந்த வருடத்தில் மாற்றியமைக்க முடிந்தது.

2002ஆம் ஆண்டு 'கரிப்டா' மெய்வல்லுன விளையாட்டு விழா அவர் பங்குபற்றிய முதலாவது பிரபல்ய விளையாட்டு நிகழ்வாகும். அந்த வருட விழா பஹாமாஸில் நடைபெற்றது. பஹாமாஸில் உள்ள நாஸு என்ற சிறிய நகரத்தில் நடைபெற்ற அந்த மெய்வல்லுன விளையாட்டு விழாவில் 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான 200 மற்றும் 400 மீட்டர் ஓட்டங்களில் பங்கேற்ற உசேய்ன் போல்ட், அந்த இரு நிகழ்ச்சிகளிலும் தங்கப் பதக்கங்களை வென்றார். அத்துடன் 4X400 மீட்டர் அஞ்சலோட்டத்திலும் போல்ட்டுக்கு ஒரு தங்கப்பதக்கம் கிடைத்தது.

ஜமேய்க்காவின் மிகவும் வேகமான இளைஞர் உசேய்ன் போல்ட் என்பதில் எந்த சந்தேகமும் இருக்கவில்லை.

200 மீட்டர் தூரத்தை 21.12 செக்கன்களிலும் 400 மீட்டர் தூரத்தை 47.33 செக்கன்களிலும் அவர் ஓடி வந்தார்.

அதேவேளை, மத்திய அமெரிக்கா மற்றும் கரிபியன் கனிஷ்ட மெய்வல்லுன விளையாட்டுப் போட்டிகள் பார்படோஸ்ஸில் உள்ள பிரிட்ஜ் டவுனில் ஆரம்பமாகின. இந்தப் போட்டிகளிலும் உசேய்ன் போல்ட் கலந்து கொண்டார்.

அதற்கு முன்னைய மாதம் கரிப்டா விளையாட்டு போட்டிகளில் பெற்ற நேரப் பிரதிகளை போல்ட் இந்த போட்டியில் மிஞ்சினார். 200 மீட்டர் தூரத்தை இம்முறை அவர் 20.61 செக்கன்களிலும் 400 மீட்டர் தூரத்தை 47.12 செக்கன்களிலும் அவர் ஓடி முடித்தார்.

இந்த நிலையில் 2002 ஜுலை 19ஆம் திகதி உலக கனிஷ்ட மெய்வல்லுன போட்டிகள் ஜமேய்க்காவின் தலைநகரான கிங்ஸ்டனில் ஆரம்பமாகின.

கிங்ஸ்டன் தேசிய விளையாட்டரங்கில் 25 ஆயிரம் பார்வையாளர்கள் 200 மீட்டர் இறுதிப் போட்டியை காண குழுமியிருந்தனர்.

15 வயதான உசேய்ன் போல்ட் ஜமேய்க்காவுக்காக இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தார். இறுதிப் போட்டியில் பங்குபற்றிய எட்டு பேரில் உயரமாக இருந்தவர் போல்ட். அத்துடன் வயதில் குறைந்தவராக இருந்தவரும் போல்ட்தான். போட்டியில் பங்குபற்றிய ஏனைய ஏழுபேரும் போல்ட்டை விட இரண்டு அல்லது மூன்று வயது அதிகமானவர்களாக இருந்தனர்.

போட்டியின் போது போல்ட்டுக்கு மிகச் சிறந்த ஆரம்பம் கிடைத்தது. போட்டியின் இறுதி 50 மீட்டர் தூரத்தை மின்னல் வேகத்தில் ஓடிக்கடந்தார் போல்ட். பார்வையாளர் அனைவருக்கும் உற்சாகம் கரைபுரண்டது. எழுந்து நின்று இரண்டு கைகளும் உயர்த்திக்கொண்டு அவர்கள் போல்ட், போல்ட் என்று எழுப்பிய கோஷம் காதைப் பிளந்தது.

200 மீட்டரை, ஓடி முடிக்க போல்ட் எடுத்துக்கொண்ட நேரம் 20.61 செக்கன்கள். ஏற்கனவே மத்திய அமெரிக்கா மற்றும் கரிபியன் கனிஷ்ட மெய்வல்லுன போட்டிகளில் 200 மீட்டர் தூரத்தை கடக்க போல்ட் எடுத்துக்கொண்ட அதேநேரம், 200 மீட்டர் ஓட்டத்தில் மட்டுமன்றி 4X100 மற்றும் மீட்டர் அஞ்சலோட்ட போட்டிகளிலும் இறுதியாக அஞ்சலோட்ட குறுந்தடியை பெற்றுக்கொண்ட போல்ட் அந்த இரு போட்டிகளிலும் வேகமாக ஓடி ஜமேய்க்காவுக்காக மேலும் இரண்டு தங்கப்பதக்கங்களை வென்று கொடுத்தார்.

2002 ஆம் ஆண்டு உலக கனிஷ்ட மெய்வல்லுன போட்டிகளின்போது உசேய்ன் போல்ட் மிகவும் பிரபல்யம் பெற்ற மெய்வல்லுன வீரராக ஜமேய்க்கா ஊடகங்கள், தொலைக்காட்சிகள் மட்டுமன்றி வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மூலம் பல்வேறு வெளிநாட்டு ஊடகங்கள் மற்றும் தொலைக்காட்சிகளிலும் கணிக்கப்பட்டார்.


''என்றாவது ஒரு நாள் நான் உலகிலேயே வேகமான மனிதனாகவேண்டும். அதற்கு நான் இப்போதே என்னை தயார்ப்படுத்திக்கொண்டு வருகிறேன்'' என்று உசேய்ன் போல்ட் அப்போது தன்னை சந்தித்த ஊடகவியலாளர்களிடம் கூறினார்.

அவரது அந்த கூற்று மெல்ல மெல்ல உண்மையாகியது.

(தொடரும்)

## கொஞ்சம் சோறு கொஞ்சம் வரலாறு

1. உப்பு
2. இனிப்பு பலகாரம் அல்லது பாயாசம்
3. பச்சடி, கூட்டு, பொரியல், அவியல், வறுவல், ஊறுகாய் ஆகியவற்றை வலதிலிருந்து இடது பக்கமாக பரிமாறவேண்டும்.
4. அப்பளம், வடை போன்ற நொறுக்குத்தீனி வகைகள்.
5. சித்ரான்னம் (புளிசாதம், எலுமிச்சை சாதம் போன்றவை)
6. அன்னம்




### பரிமாறும் விதம்

அன்னத்தில் முதலில்
பருப்பு, நெய் பரிமாறவும்
அடுத்து குழம்பும்
அடுத்து ரசமும்
இறுதியில் தயிர் அல்லது மோர்
ஊற்றிக்கொள்ள வேண்டும்.

கண்ணுல
மண்ணு பட்டாலும் சரி!
பொண்ணு பட்டாலும் சரி
கண்ணீர் வருவது நிச்சயம்

- ரிப்னா, குருநாகலை

### தத்துவப் பித்தன்



# மின்விசிறிகளை பாதுகாப்பது எப்படி?

சூரியன் தன் கதிர்களை ஆக்ரோஷமாக கக்கிக்கொண்டிருந்த ஒரு நன்பகலில் தன் நண்பி சாரு வீட்டுக்குச் சொன்றாள் மாலதி. ''சே என்ன சூடு, பயணம் போறதென்றாலே வெறுத்து போகுது!'' என்றவாறு கதிரையில் அமர்ந்தாள் மாலதி

கொஞ்சம் பொறு நான் ஃபேன போடுறன் என்றவாறு சுவரிலிருந்த பொத்தானை அழுத்திய சாரு அடுத்த கட்டமாக கையில் தும்புத்தடியையும் தூக்கினாள். தும்புத்தடி எதுக்கடி என்று கேள்வியுடன் பார்த்த மாலதியை பார்த்து புன்னகைத்த சாரு, எங்க வீட்டு ஃபேனுக்கு தும்புத்தடிய காட்டினால்தான் சுத்தும் என்றவாறு மெதுவாக தட்டினாள். அதுவரை மெதுவான முனங்கல் சத்தத்துடன் சுத்தாமல் இருந்த ஃபேன் வேகமாக சுத்த ஆரம்பித்தது.

நீங்களும் இதுபோலவே மின்விசிறியுடன் போராடுகிறவராக இருக்கலாம். ஆனால் மின்விசிறியை சுழற்றுவதற்கு தும்புத்தடி, பிரம்பு போன்றவற்றை பயன்படுத்தினால் பிரச்சினை தீர்ந்துவிடுமா?

மின்விசிறிகளில் இவ்வாறான கோளாறுகள் ஏற்படுவதற்கு மின்விசிறியின் சுழற்றும் பகுதியில் தூசுபடிதல், தலைமயிர் சிக்குதல் போன்றனவே பிரதான காரணமாகின்றன. இவ்வாறு தூசு போன்றவை படிவதனால் சுழற்றும் பகுதியில் இயங்கும் சிறிய இயந்திரம் பழுதடையலாம். இதனை தவிர்ப்பதற்கு மின்விசிறியை கழற்றி சுத்தப்படுத்த வேண்டும். இவ்வாறு மின்விசிறியை கழற்றி சுத்தப்படுத்துவதற்கு மின் உபகரணங்கள் தொடர்பாக சாதாரண அறிவிருந்தாலே போதுமானது. மின்விசிறியின் பகுதிகளை ஒவ்வொன்றாக கழற்றி அதன் விசிறிப்பகுதியை கழுவி சுத்தப்படுத்துவதுடன், சுழற்றும் பகுதியை நன்றாக துடைத்து சுத்தப்படுத்தி இயந்திரப்பகுதியில் ஒரு சொட்டு எண்ணெய் இடுதல் வேண்டும். மின்விசிறி இறுகி இயக்கத்தை நிறுத்தும் வரை சுத்தப்படுத்தாமல் இருப்பதை விட எப்போதாவது நேரமிருக்கும்போது இவ்வாறு செய்வதன் மூலம் மின்விசிறியின் ஆயுள் அதிகரிக்கும்.

கூரையில் பொருத்தப்பட்ட மின்விசிறியில் பெரும்பாலும் அதனை கட்டுப்படுத்தும் பொத்தானிலேயே பிரச்சினைகள் எழுகின்றன. எனினும் மின்விசிறி வேறிடத்தில் பொருத்தப்பட்டுள்ளமையினால் பொத்தானில் கவனம்செலுத்துவது மிகவும் குறைவு. எனவே மின்விசிறியில் கோளாறுகள் ஏற்பட்டால் அதனை இயக்கும் பொத்தானையும் பரீட்சித்து பார்க்க தவறவேண்டாம். தொடர்ச்சியாக பயன்படுத்தும் மின்விசிறிகளுக்கான விசேட ஸ்விச்களை பொருத்தி வைப்பது உங்களது பணச்செலவைக் குறைக்கும். சுழலுகின்ற மின்விசிறி அதன் சூழலிலுள்ள காற்றையே பயன்படுத்துகிறது. இதனால் காற்றில் உள்ள நுண்ணிய தூசு, ஏனைய நுண்ணிய பொருட்கள் ஈரலிப்பு என்பன மின்விசிறியில் படிகின்றன. இதனால் மின்விசிறியின் இரும்பினால் தயாரிக்கப்பட்டுள்ள பகுதிகள் துருபிடிக்கும் அபாயமுள்ளது. தொடர்ந்து துடைத்து சுத்தப்படுத்தி வைப்பதன் மூலம் இந்தப் பாதிப்பிலிருந்து மின்விசிறிகளை நாம் பாதுகாத்துக்கொள்ளலாம். குறிப்பாக மின்விசிறியின் இயந்திரம் பழுதடைந்தால் புதிதாக பொருத்துவதற்கு அதிக பணம் செலவாகும்.

இச்செலவை தவிர்ப்பதற்கு நாம் மின்உபகரண திருத்துநர் ஊடாக இயந்திரத்தை புதுப்பிப்பது சிறந்தது. மேலும் மின்விசிறிகளை வாங்கும்போது தரமான பொருட்களை பார்த்து, ஆராய்ந்து வாங்குவது பணம் கொடுத்து வாங்குபவரது கடமை. பரந்த விசிறிகளைக் கொண்ட மின்விசிறிகளில் நன்றாக காற்று கிடைக்கும். மின்விசிறியை வைத்துள்ள அறைகளில் தண்ணீர் நிறைந்த பேசினை அல்லது ஈரலிப்பான கால் தட்டியை வைப்பதினூடாக சூழலிலுள்ள இயற்கையான ஈரழிப்பு பேணப்படுகிறது.

மின்விசிறிகளை இயங்கும்போது சூழலிலுள்ள சுத்தமான காற்று அவசியமாகிறது. எனவே ஒருபோதும் கதவு, ஜன்னல்களுக்கு அண்மையில் மின்விசிறிகளை வைக்கவேண்டாம். மின்விசிறியின் பயன்பாடு முடிந்தவுடன் அதனை நிறுத்த மறக்காதீர்கள். இல்லையென்றால் மாத இறுதியில் வரும் மின்கட்டணம் உங்கள் உறக்கத்தைப் போக்கிவிடும்.

ஆர்த்தி

# சில்க் பெயின்ட்

*இந்த சில்க் பெயின்ட் ஜப்பானிய முறையைப் பின்பற்றியது. இங்கே உள்ள காட்சிகளை நீங்களும் உங்கள் சுவரில் அழகிய தீட்டப்பட்ட படமாக மாட்டி அலங்கரிக்கலாம்.*





**தேவையான பொருட்கள்**

இள நிறமான சில்க் துணி (வெள்ளை, கிறீம் நிறம்)
சில்க் வர்ண பூச்சுகள் (சிவப்பு, வெள்ளை, பர்ஷியன் நீலம், ஒலிவ் பச்சை, கருப்பு, இளஞ்சிவப்பு, கபிலம் மற்றும் மஞ்சள்)
இலக்கம் 0, 1, 3, 9 தூரிகைகள்

**இவ்வாறு தயாரிப்போம்**

முதலில் குறித்த உருவங்களை குட்டா அவுட் லைன் முறையின் மூலமாக துணியில் பதிவு செய்துக் கொள்ளுங்கள். இந்த உருவம் வரைவதற்கு சற்று சிரமமானது என்பதனால் ஷேடிங் முறையின் மூலமாக மிக கவனமாக வரைந்துக் கொள்ள வேண்டும். வரையும்போது உருவத்துக்கேற்ற இருளான, வெளிச்சமான பிரதேசங்கள் குறித்த விளக்கம் பெற்றிருப்பது அவசியம்.

விசாலமான படங்களை வரையும் போது இலக்கம் 6 அளவுடைய தூரிகையை பயன்படுத்துதல் வேண்டும்.

பெண்ணின் உருவமானால் முகம் மற்றும் கை பிரதேசங்களை இளஞ் சிவப்பு நிறத்தினால் வர்ணமிடவும். இச்சந்தர்ப்பத்தில் கண், வாய், மூக்கு மற்றும் கூந்தல் பிரதேசங்களை கவனத்திற்கொள்ளவேண்டும்.

சித்திரம் குறித்த அறிவுள்ளவர்களுக்கு இது மிக இலகுவான விடயமானபோதிலும் இது தொடர்பான போதிய அறிவற்றவர்கள் சற்று கவனமெடுத்து செய்யவேண்டியிருக்கும்.

அதன் பின்னர் ஆடைக்கு அந்தந்த பகுதிகளுக்கேற்ற வர்ணப்பூச்சுக்களை பயன்படுத்துங்கள். கவுனின் சுருக்கமுள்ள பகுதிகளுக்கு தேவை யான நிறங்களுடன் கருப்பு வர்ணத்தையும் பயன்படுத்தி ஷேட் பண்ணவும். இலைகளுக்கும் மலர்களுக்கும் தேவையான வர்ணப் பூச்சுக்களை பயன்படுத்தி வர்ணம் தீட்டவும்.
வண்ணத்துப்பூச்சியை சிவப்பு நிறத்தினால் வர்ணம் தீட்டுங்கள்.

# இரண்டு இலங்கைத் தமிழ் திரைப்படங்கள்



இனி அவன் படத்தில்...

ஒரு பார்வை



இங்கிருந்து படத்தில்...

இலங்கை தமிழ் திரைப்படங்களின் வரிசையில் இரண்டு படங்கள் அண்மையில் இடம்பிடித்துள்ளன. இனி அவன், இங்கிருந்து ஆகிய இரண்டு படங்களே இவ்வாறு புதிதாக பட்டியலில் சேர்ந்துள்ளன.

'இனி அவன்' படத்தை பிரபல சிங்கள் இயக்குநர் அசோக் ஹந்தகம இயக்கியுள்ளார். அசோக் ஹந்தகமவின் சிங்கள் படங்கள் சர்வதேச ரீதியில் பிரபலமானவை என்பதுடன் அவரது 'அக்ஷரய' என்ற படம் இலங்கையில் தடை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. முப்பது வருடகால யுத்தத்துக்கு பிறகு சமூகத்துடன் இணைந்து கொள்ள விரும்பும் போராளி இளைஞனுக்கு ஏற்படும் அனுபவங்களை சொல்கிறது 'இனி அவன்'.

'மழை ஓய்ந்தாலும் தூவானம் விடவில்லை' என்று தமிழில் ஒரு சொல்வழக்கு உண்டு. அதுபோல் யுத்தம் முடிந்துவிட்டாலும் அதன் கோரமுகம் இன்னமும் சமூகத்தில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது என்பதையே அசோக ஹந்தகம இப்படத்தில் கூறுகிறார்.

அண்மைக்கால சிங்களப் படங்களில் தோன்றி தனக்கென ஒரு இடத்தை பிடித்துள்ள தர்ஷன் தர்மராஜ் இப்படித்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

'இனி அவன்' இப்போது உள்ரூர்த் திரைகளில் தோன்றுகிறான்.

***********

சுமதி சிவமோகன் பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆங்கில விரிவுரையாளர். சினிமாத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். சில காலத்துக்கு முன் அவர் தயாரித்து இயக்கிய 'பிரளயம்' என்ற குறும்படம் பலரால் பாராட்டப்பட்டது.

இவரது புதிய படம்தான் 'இங்கிருந்து'. இப்படம் உள்ரூரில் திரையிடப்படுமா அல்லது ஆவணப்படுத்தப்படுமா என்று தெரியவில்லை.

1800களின் இறுதிப் பகுதியில் கோப்பித் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவில் இருந்து தமிழர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களது வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களைப் பற்றி விளக்கும் ஒரு பதிவாகவே இப்படம் அமைந்துள்ளது.

இலங்கையில் பிறந்த எம்.ஜி.ஆர். 1960களில் மீண்டும் இலங்கைக்கு வரும் நிகழ்வுடன் 'புதிய வானம், புதிய பூமி' என் திரைப்படப்பாடலுடன் 'இங்கிருந்து' ஆரம்பமாகிறது. மலையத்தில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு தீபம் வைத்து வழிபடும் காட்சியும் படத்தில் வருகிறது.

அத்துடன் இந்தியாவில் இருந்து தமிழர்கள் இலங்கைக்கு வருதல், தோட்டங்களில் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள், 4லட்சத்து 85ஆயிரம் இந்தியத் தமிழர்கள் சிரிமா-சாஸ்த்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்புதல், தேயிலை தோட்டத்தில் கவ்வாத்து சீவும் தொழிலாளி தன்னை மிரட்டும் தோட்டத்துரையின் கையை துண்டித்தல், தோட்டத்தில் பெண்களுக்கு ஏற்படும் இன்னல்கள், தோட்டத்தில் ஊமை பெண்ணொருத்தி முகம் கொடுக்கும் இன்னல்கள் (பாலியல் தொல்லை உட்பட), பயங்கரவாதம், ஜூலை கலவரம், பிந்துனுவெவ சம்பவம், சம்பளப் பிரச்சினை, லயத்து வாழ்க்கை, மலையகக் குடும்பமொன்றில் இடம் பெறும் கணவன்- மனைவி பிரச்சினை, மலையகப் பெண்களின் பிரச்சினைகள் பற்றி ஆய்வு நடத்தவரும் மேல் வர்க்கப் பெண், அப்பெண்ணுக்கு ஏற்படும் இடையூறுகள் இவை அத்தனையும் 1 1/4 மணி நேர படத்தில் இடம்பெறுகின்றன.

இதில் சில காட்சிகள் மனதின் பதியும் படி உள்ளன. ஆனால் ஒட்டுமொத்தமாக பார்க்குமிடத்து, மலையக மக்களின் பிரச்சினைகளை அல்லது வாழ்க்கை முறையின் செலூலைட் பதிவு என்றுதான் இதை கொள்ளவேண்டியிருக்கிறது.

இதில் ஓரிரு சம்பவங்களை மட்டும் தெரிவு செய்து அவற்றை பற்றி விபரமாக எடுத்துக் கூறியிருந்தால் படம் நன்றாக வந்திருக்கும்.

படத்துக்காக நிறைய ஆய்வுகளை செய்திருப்பது புரிகிறது. திறமையான கலைஞர்கள் நன்றாக நடித்திருக்கிறார்கள். ஆனால் நிறைய விடயங்களை கொஞ்சம் கொஞ்சமாக சொல்லப்போய் எதையுமே முறையாகவோ நிறைவாகவோ சொல்லத் தவறியுள்ளது சறுக்கலாக அமைந்து விட்டது.

இங்கிருந்து - மலையக மக்களின் தகவல் களஞ்சியம்.

ராம்ஜி

# பிறந்த தினத்தை மாற்றி அமைத்த உலக அழிவு

உண்மைச் சம்பவம்

அவர் ஒரு படப்பிடிப்பாளர். அளவான கட்டணம் நேர்த்தியான வேலை என்பதால் அவருக்கு நல்ல மதிப்பு இருந்தது.

சில நாட்களுக்கு முன்பு அவரது கைத்தொலைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது. அவரது நண்பர் ஒருவர்தான் பேசினார்.

''ஒரு பேர்த்டே பார்ட்டி படம் எடுக்கணும்''

''சரி... எடுத்துருவம் அதுக்கென்ன. எப்போங்க பேர்த்டே''

''17 அல்லது 18ஆம் திகதி''



''பேர்த்டேங்கிறீங்க... ரெண்டு தேதி சொல்றீங்க''

''அது வந்து... பேர்த்டே 22ஆம் திகதி. 21ஆம் திகதி உலகம் அழிஞ்சிருமாமே. அதனால 17 இல்ல 18 ஆம் திகதி பேர்த்டேயை கொண்டாடுறதுன்னு எங்க சொந்தக்காரங்க எல்லாம் சேர்ந்து முடிவெடுத்திருக்காங்க''

தூக்கி வாரிப் போட்டது. புகைப்படப்பிடிப்பாளருக்கு!

''படத்தை அல்பமா போட்டு 22 ஆம் திகதி தாங்க எனக்கு கொடுக்க முடியும். அதை வாங்க நீங்க இருப்பிங்களோ தெரியலையே'' என்று தன் ஆதங்கத்தை வெளிக்காட்டினார்.

''ஆமாங்க... அப்ப என்ன செய்றது?''

ஒரு நிமிட மௌனம்

''இப்படி செய்ங்க... அல்பம் வேணாம். படத்தை மட்டும் எடுத்து கொடுங்க. நாங்க computer ல போட்டுக்கிறம்.''

''ஆமா, 21ஆம் திகதி எதுவுமே நடக்கலைன்னா?''

''அப்படின்னா 22ஆம் திகதி திரும்பவும் பேர்த்டே பாட்டிதான். அன்னைக்கும் நீங்கதான் வந்து படமெடுத்து கொடுக்கனும்.''

சரி என்றார் படப்பிடிப்பாளர்

உலக அழிவு வதந்தி எப்படியெல்லாம் மனிதர்களை பேச வைத்திருக்கிறது பாருங்கள்!

# புதுப்பொலிவு பெறவிருக்கும் நல்லை ஆதீனம்




இலங்கையிலுள்ள ஒரேயொரு சைவ ஆதினமாக விளங்கும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் யாழ் குடா நாட்டின் நல்லூர் பிரதேசத்தில் அமைந்துள்ளது. மணி ஐயர் என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்பட்டுவந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்தர் பரமாசரிய சுவாமிகளால் அறுபதுகளின் ஆரம்பத்தில் ஆதீனம் ஸ்தாபிக்கப்பட்டது.

இவரே முதலாவது குருமகா சந்நிதானமாகவிருந்து ஆதீன செயற்பாடுகளை நீண்டகாலத்திற்கு முன்னெடுத்துச் சென்றவர்.

ஆரம்ப காலத்தில் வாடகை வீட்டில் இயங்கிவந்த அதீனத்தை மேலும் சிறப்பான வகையில் நடத்துவதற்கு உதவும் முகமாக நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு பின்புறமாகவிருந்த கட்டிடத்தை (இப்போது ஆதீனம் இருக்கும் இடம்), அதன் உரிமையாளரான மழவராயர் குடும்பத்தனர் 1966ஆம் ஆண்டில் முதலாவது குருமகா சந்நிதான சுவாமிகளுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.

1981ஆம் ஆண்டில் குருமகா சந்நிதானம் சமாதியடைந்தபோது, ஆதீனத்தின் இளவரசராகவிருந்த சின்ன சுவாமிகள் இரண்டாவது குருமகா சந்நிதானமாக பட்டாபிஷேகம் செய்யப்பட்டு பதவி ஏற்றார். இவரே இப்போது ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசியக ஞானசம்பந்தமாக பரமாசாரிய சுவாமிகள் என்ற நாமகரணத்துடன் ஆதீனத்தை வழிநடத்தி வருகிறார்.

அ. கனகசூரியர்

நல்லை ஆதினக் கட்டடம் பழுதடைந்த நிலைக்கு வந்துவிட்டதுடன், வசதி குறைந்த நிலையிலும் இருந்ததால் அதனை மீள்நிர்மாணம் செய்யும் வகையில் புதிய கட்டடத்தை அமைக்கும் வேலைகள் கடந்த வருடம் (2011) நவம்பர் மாதத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழ்ந்துகொண்டிருக்கும் சைவ அன்பர்கள் பலர் ஒன்றிணைந்து இந்த அறப்பணிக்கான நிதியுதவி முதலான சகல ஏற்பாடுகளையும் செய்து வருகிறார்கள். இதற்காக பிரித்தானியா-நல்லை ஆதீனக் கட்டட புனர்நிர்மான குழுவொன்று அமைக்கப்பட்டிருப்பதுடன், அகில இலங்கை இந்து மாமன்றம் இதற்கான இணைப்பாளராகவிருந்து கட்டடப்பணி செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இரண்டு கோடி ரூபாவுக்கும் மேல் செலவாகலாம் என மதிப்பிட்டுள்ள ஆதீனக் கட்டடத்தின் பெரும்பாலான வேலைகள் நிறைவு பெற்றுள்ள நிலையில், எஞ்சியுள்ள வேலைகள் அடுத்த ஓரிரு மாதங்களில் பூர்த்தியாகி ஜனவரி அல்லது பெப்ரவரி மாதத்தில் திறந்து வைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சைவ சமய தத்துவங்களுக்கும் சிறப்புக்களுக்கும், பாரம்பரியங்களுக்கும் அமைந்த வகையில் சிற்பங்களும் கலைச் சின்னங்களும் பொருத்தப்பட்டு கீழ் தளமும், மேல்மாடியும் கொண்டதாக வடிவமைக்கப்பட்டிருக்கும் ஆதீனக் கட்டடத்தின் முற்பக்கத்தின் மேற்புற இருபக்கங்களிலும் சைவ சமய சின்னமும் சிவனின் வாகனமுமாகிய எருதுகள் (நந்தி) காட்சி தருவதாக அமைந்துள்ளது.

விரைவில் முழுநிறைவு பெறவிருக்கும் நல்லை ஆதீனக் கட்டிடத்தின் முன்பக்க தோற்றத்தை படத்தில் காணலாம்.

## எங்க வீட்டு கல்யாணம்






மருத்துவர்
அருந்ததி பொன்னுசாமி
தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை

# டொல்பின்: நான் உங்கள் தோழன்



டொல்பினை தமிழில் ஓங்கில், கடற்பன்றி என்று அழைக்கிறார்கள். இது ஒரு கடல் வாழ் பாலூட்டி ஆகும். இது திமிங்கிலத்திற்கு மிகவும் நெருக்கமான இனத்தைச் சேர்ந்தது. பதினேழு வகையான பேரினங்களில் சுமார் நாற்பது வகையான டொல்பின் இனங்கள் தற்போது உயிர் வாழ்கின்றன. இது மில்லியன் வருடங்களுக்கு முந்திய புதைப்படிவ காலமான 'மயோசின்' காலத்தை சேர்ந்தவை என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். டொல்பின்களின் கடல் டொல்பின் வகை, மற்றும் நன்னீர் டொல்பின் வகை என இங்கு இரண்டு இனங்கள் வாழ்கின்றன.

டொல்பின்களின் உடல் திமிங்கிலம் போன்ற இழை வடிவமுடையது. வால் துடுப்பம் போல் தட்டையானது. அதன் வாய் கூர்மையாக இருப்பதோடு, விளிம்பில், குழியுடையதாய் இருக்கிறது. முதுகுப் பகுதி கறுப்பாகவும் அதன் அடிப்பகுதி வெண்மையாகவும் இருக்கும். டொல்பின்கள் 1.2 மீட்டரில் இருந்து 9.5 மீட்டர் நீளம் வரை நீளம் கொண்டது. இவை பொதுவாக நாற்பது கிலோ கிராம் எடையில் இருந்து பத்து டன் எடை கொண்டனவாக விளங்குகின்றன. டொல்பின்கள் மாமிசபட்சனிகள் இவை மீன்களை உணவாகக் கொள்கின்றன. பொதுவாக இவை 20 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.



உலகம் முழுவதும் டொல்பின் இனம் வாழ்கிறது. பெரும்பாலும் ஆழம் குறைந்த இடங்களில் இவைகளை அதிகம் காணலாம். கடல் வாழ் உயிரினங்களில் டொல்பின் மட்டுமே அறிவுக் கூர்மை கொண்ட விலங்காகும். இவை மனிதர்களுடன் ரொம்பவும் நெருங்கி பழகும் தன்மை கொண்டவை.

ஐக்கிய நாடுகள் சபை 2007ம் ஆண்டை டொல்பின் ஆண்டாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு டொல்பினும் தமக்கென்று ஒரு விசில் சத்தத்தை வைத்திருக்கிறது. அதையே எழுப்பும். இது அவற்றுக்கு மனிதனின் கைரேகை போன்றது.

இந்த விசில் சத்தத்தினால் தனது இடத்தை அது மற்ற டொல்பின்களுக்கு அடையாளம் காட்டுகிறது. அதேவேளை தூரத்தில் வரும் ஒரு ஆபத்தை உணரவும் இந்த விசில் சத்தம் உதவுகிறது. இந்த விசில் சத்தம் ரேடியோ அலைகள் போல சென்று எதிரியின் முப்பரிமானத்தை இனம் கண்டு மீண்டும் எதிரொலியாக வந்து டொல்பினுக்கு உணரச் செய்கிறது. அதன் பிறகே டொல்பின் தமது பாதுகாப்பை உறுதி செய்கிறது. இடத்தையும் மாற்றிக்கொள்கிறது. சிலநேரம் அப்படி அது இடத்தை மாற்றும்போது, ஆழம் குறைந்த இடங்களுக்கு சென்று கடல் மணலில் சிக்கி தவிப்பதை அவதானித்திருக்கிறார்களாம். அப்படி சிக்கித் தவிக்கும் டொல்பின்களை மீட்டு மீண்டும் கடலில் விடுவதற்கும் மேற்கத்தேய நாடுகளில் டொல்பின் மீட்பு குழுக்களை அமைத்திருக்கிறார்கள்.


ஒரு டொல்பின் தனது எட்டாவது வயதில் இனவிருத்தி செய்யத் தயாராகி விடுகிறது. இதன் பிரசவக் காலம் ஒன்பது மாதங்கள். ஒரு முறைக்கு ஒரு குட்டியை ஈனும்.

தொடர்ச்சியாக 18 மாதங்கள் தாயிடம் பால் குடிக்கும். குட்டிகள் தமது மூன்றாவது வயதில் சிறிய மீன்களை பிடித்து சாப்பிடத் தொடங்கும். இது எப்போதும் கூட்டமாக வாழும் இயல்பை கொண்டுள்ள உயிரினம். ஒரு கூட்டத்தில் எப்படியும் 12 டொல்பின்கள் நிச்சயம் இருக்கும்.

கடலில் ஒரு மணித்தியாலத்துக்கு ஏழு மைல் தூரம் நீந்தும் ஆற்றல் உடையது.

டொல்பின்களுக்கு கடலில் இருக்கும் பெரிய எதிரி திமிங்கிலங்கள்தான். இது தவிர பெரிய கப்பல்களில் மோதுண்டு இவை இறக்கின்றன.

டொல்பின்கள் தூங்கும்போது ஒரு விடயத்தை அவதானிக்கலாம். ஒரு பக்கக் கண்ணை மட்டுமே மூடிக்கொண்டு தூங்கும் பழக்கத்தை இது கொண்டுள்ளது. அப்படி அது தூங்கும்போது ஒரு பக்க மூளை உறங்க மற்றபக்க மூளை செயற்பாட்டில் இருக்கும். ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது எதிரிகள் தம்மை தாக்கிவிடக்கூடாதே என்பதற்காகவே இயற்கையின் அற்புதப் படைப்பாக ஒரு பக்கக் கண் மட்டுமே உறக்கத்தில் இருக்கும்.


குட்டிபோடும் காட்சி

டொல்பின் வாழும் பகுதியில் சுற்றுச் சூழல் மாசுப்படுவதில்லை. அது எப்போதும் சுத்தமாகவே இருக்கும் என்று சூழலியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

முலையூட்டி விலங்குகளின் பிரசவத்தை எடுத்துக்கொண்டால், டொல்பின் முலையூட்டியின் பிரசவம் கொஞ்சம் வித்தியாசமானது.



டொல்பினுக்கு பிரசவம் நடைபெறும்போது அந்த டொல்பின் தாயைச் சுற்றி நிறைய டொல்பின் தாய்மார்கள் பாதுகாத்து நிற்குமாம்.

பிரசவத்தின் போது குட்டியின் வால் பகுதி மட்டுமே வெளியே வரும். பிறகுதான் தலை வருமாம். தாயின் வயிற்றிலிருந்து குட்டி வெளியே வந்தவுடன் அந்தத் தாய் தனது குட்டியை உடனடியாக நீரின் மேற்பரப்புக்கு அழைத்து வந்து மூச்சு விடச் செய்கிறது.


டொல்பின்களுக்கு அறிவுக் கூர்மை அதிகமாக இருப்பதால் மனிதர்கள் அதற்குப் பயிற்சி கொடுத்து பூங்காக்களில் மக்களின் பார்வைக்கு வைத்து விடுகிறார்கள். பூங்காக்களில் பந்து விளையாடி மக்களை மகிழ்விக்கும் பணியையும் இந்த டொல்பின்கள் செய்து வருகின்றன. டொல்பின்கள் மனிதர்களைக் காப்பாற்றிய பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. மனிதனை எதிரியாக அவை பார்ப்பதில்லை.

இது எழுப்பும் விசில் சத்தம் குறைப்பது போலவும், முனங்குவது போலவும் இருக்கும்.





நவநீதன் (தலைமை பொறுப்பாளர் சூரியன் எப்.எம்)
ஹம்ஸானந்தி
இரத்மலானை
28-11-2012



ஜெயானந்தன்
சரண்யா
ஆவரங்கால், யாழ்ப்பாணம்
30-6-2012



ஜெயச்சந்திரன்
கிருஷ்ணவேணி
கிளனமோரா, தலவாக்கலை
24-11-2012

உங்கள் திருமண படங்களும் இந்தப் பகுதியில் இடம்பெற வேண்டுமா? விபரங்களுக்கு 22ஆம் பக்கத்தைப் பாருங்கள்.




Printed and published by ANCL No: 35, D.R.Wijewardena Mawatha, Colombo-10 in January, 2013.